ISSN : 2455-0531

இனம்

(இனம் இனத்தைச் சேரும்)

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 2 இதழ் : 8, பிப்ரவரி 2017 Vol. II Issue 8, February 2017

வ.சுப.மாணிக்கனாரின் நூற்றாண்டு சிறப்பிதழ்



சு.செல்வகுமாரன் | சேது.முனியசாமி | ப.திருஞானசம்பந்தம் | ஆ.மணி | மா.பரமசிவன் | சு.நாகரத்தினம் | கடலூர் மணிமாறன் | ப.சண்முகராணி | இல.இராஜதுரை | த.சத்தியராஜ் | மா.சிதம்பரேஸ்வரர் | கு.பாக்கியம்

Inam:International Research E_Journal of Tamil Studies

Inam *ISSN : 2455 - 0531*

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

An Internationally Refereed e_ Journal of Tam Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

ஆலோசனைக்குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)

ஆசிரியர்குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை) முனைவர்
இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)

இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

பிப்ரவரி 2017 **மலர் : 2 இதழ் : 8**

February 2017 ***Volume II Issue 8***

உள்ளே ...

பேராசிரியர் வ.சுப.மாணிக்கனாரின் திறனாய்வுச் சிந்தனைகள்
முனைவர் சு.செல்வகுமாரன் | 3

வ.சுப.மாவின் அச்சேறிய நூல்களும் நிறைவேறா ஆசைகளும்
சேது.முனியசாமி | 10

வ.சுப.மா.வின் சொல்லாக்க முறைகள்
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 18

வ.சுப.மாணிக்கனாரின் தொல்காப்பிய உரைநெறிகள்
முனைவர் ஆ.மணி | 27

பிற்கால நீதிநூல்கள்: வ.சுப.மாணிக்கனாரின் உரையியல்புகளும் நடைத்தன்மைகளும்
முனைவர் மா.பரமசிவன் | 42

தமிழ்க் காதலில் வ.சுப.மாணிக்கனாரின் ஆளுமைத் திறன்
முனைவர் சு.நாகரத்தினம் | 56

பதவிக்குப் பெருமை சேர்த்த மாணிக்கச் செம்மல்
முனைவர் கடவூர் மணிமாறன் | 62

மனிதநேயக் கல்வியின் அவசியம்
முனைவர் ப.சண்முகராணி | 64

மகாபாரதத்தின் கிளைக்கதைகளிலிருந்து 16ஆம் நூற்றாண்டில் உருக்கொண்ட காப்பியங்கள்
இல.இராஜதுரை | 76

இணையவழிக் குறுஞ்செயலி (Apps) உருவாக்கம்
முனைவர் த.சத்தியராஜ் (நேயக்கோ) | 81

ஆலயங்களில் ஐந்தின் பங்கு
மா.சிதம்பரேஸ்வரர் | 90

முத்துவேலழகனின் ஜன்மா நாடகம் (நூலறிமுகம்)
முனைவர் கு.பாக்கியம் | 97

மதிப்பிடப்பெற்றது

பேராசிரியர் வ.சுப.மாணிக்கனாரின் திறனாய்வுச் சிந்தனைகள்

முனைவர் **சு.செல்வகுமாரன்**

உதவிப் பேராசிரியர், தமிழ்ப்பிரிவு, தொலைதூரக்கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கைபேசி — 9442365680, mugadu.kumaran@gmail.com

முன்னுரை

"கடல் போல ஆழ்ந்தகன்ற கல்வியாளர்!
கதிர்மணிக்குப் புகழ்மிகுந்த தலைமாணாக்கர்!
கொடை அண்ணாமலை வள்ளல் அழகப்பர் பல்
கலைக்கழகம் மொழிவளர்த்த தமிழ்ப் பேராசான்
படிப்படியாய் முன்னேறித் துணைவேந்தரானார்!
பைந்தமிழ் உலகத்தின் தனிவேந்தரானார்!
மடிந்தாராம் மாணிக்கம்! ஐயோ! இல்லை!
மூதறிஞர் பயின்றமிழாய் வாழ்கின்றாரே" (வ.சுப.மாணிக்கனாரின் சிந்தனைகள், ப.104)

என்று அவரது மாணாக்கர் பேராசிரியர் பழ. முத்துவீரப்பனாரால் புகழப்படுகின்ற பெருந்தகையாளர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். பேராசிரியரின் பார்வையில் திறனாய்வுச் சிந்தனைகள் குறித்து இனங்காண்பதாய் இக்கட்டுரை அமைகின்றது.

வாழ்வும் பணியும்

பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் 1917ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்தவர். ஆறு வயது நிறைவடைவதற்குள்ளாகவே தாய் தந்தையரை இழந்திருந்தார். எனினும் பொய் சொல்லா மாணிக்கமாக வாழ்ந்த பெருமைக்குரியவர். வித்துவான், பி.ஓ.எல், எம்.ஏ, எம்.ஓ.எல், முனைவர் பட்டங்கள் பெற்றவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் புலமுதன்மையராகவும், காரைக்குடி அழகப்பா கல்லூரியில் முதல்வராகவும் பதவி வகித்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகவும் விளங்கியவர்.

மேலும் படைப்பிலக்கியம், கடித இலக்கியம், உரை எனத் தமிழிலும் ஆங்கிலத்திலுமாகச் சுமார் இருபத்தைந்து நூல்களை வெளிக்கொணர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஆய்வு நூல்கள்

வள்ளுவம் (1953), தமிழ்க்காதல் (1962), கம்பர் (1965), தொல்காப்பியப் புதுமை (1958), எந்தச்சிலம்பு? (1964), இலக்கிய விளக்கம் (1972), சிந்தனைக் களங்கள் (1975), ஒப்பியல் நோக்கு (1978), தொல்காப்பியத்திறன் (1984), இரட்டைக் காப்பியங்கள் (1958), நகரத்தார் அறப்பட்டயங்கள் (1961), The Tamil Concept of Love, A Study of Tamil Verbs, Collected Papers Tamilology.

கவிதை நூல்கள்

கொடைவிளக்கு (1957), மாமலர்கள் (1978), மாணிக்கக் குறள் (1991).

நாடக நூல்கள்

மனைவியின் உரிமை (1947), நெல்லிக்கனி (1962), உப்பங்கழி (1972), ஒரு நொடியில் (1972).

கடித இலக்கியம்

தலைவர்களுக்கு (1965)

உரை நூல்கள்

எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும் மாணிக்கவுரை (1989), திருக்குறள் தெளிவுரை (1991), நீதி நூல்கள் உரை (1991).

ஆக இவை அனைத்தும் இவரின் கடின உழைப்பையும், வளர்ச்சியையும் அடையாளம் காணும் இவர் குறித்த வாழ்வியல் வரலாறாய் அமைகின்றன.

சமூகச் சிந்தனை

பேராசிரியர், ஆராய்ச்சியாளர், எழுத்தாளர், தமிழ்ப்பற்றாளர், சமூகச் சிந்தனையாளர் என்பதாய்ப் பன்முகப் பரிணாமங்களோடு ஒளிரும் வ.சுப.மாணிக்கனார் சமூகத்தின் மீது ஆழ்ந்த கரிசனம் மிக்கவராகத் திகழ்ந்தவர். சமூகத்தின் உயிர்நாடியான மக்கள், மொழி, ஆசிரியர், எழுத்தாளர் குறித்து நிரம்ப எழுதியும் பேசியும் உள்ளார். அண்ணாமலை நகரில் 23.3.1987 அன்று நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் முதன்மையுரை ஆற்றிய பேராசிரியர் வ.சுப.மா எழுத்தாளர்களை **எழுது குலத்தோராகிய நாம்…** (இலக்கியச் சாறு, ப.11) என்று ஒரு

குலமாக அங்கீகரிப்பதும், அவர்களை **மொழித் தொழிலாளர்கள்...** (இலக்கியச் சாறு, ப.13) என்று குறிப்பிடுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. மட்டுமல்லாது எழுத்தாளர்களின் வாழ்வு வளமானதாக அமைய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தும் பாங்கு இன்றும் கூட யாராலும் சுட்டமுடியாத ஒன்றாகும்.

“தமிழ் எழுத்தாளர்கள் பொருளாதாரத்திலும் நல்ல தலையெழுத்து உடையோராக, வறுமைக் கோட்டிற்குக் கீழே தாழாமல் வாழ்வுக் கோட்டிற்கு மேலே இருப்பவர்களாக வாழ வேண்டும் என்பது என் முதற்சிந்தனை. எங்கள் முன்னோர்களை வேறு வகையில் எல்லாம் பின்பற்ற நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம். பெருஞ்சித்திரனார், பாரதியார், வ.உ.சி., அரசஞ்சண்முகனார் போன்ற பல பெருமக்கள் வறுமையில் உழன்று கன்னித்தமிழைக் காத்தனர். நாங்கள் அந்த ஒரு வழியைப் பின்பற்ற விரும்பவில்லை. அது முடியரசுக் காலம், இது குடியரசுக் காலம். எழுத்தாளர்கட்கும் வாக்குரிமையுண்டன்றோ?.

> **நமக்குத் தொழில் கவிதை... என்ற பாரதியார் வாக்கின்படி எழுத்தாளர்களும் மொழித் தொழிலாளர்களே. அவர்கள் தங்கள் சிந்தனைத் தொழில் எழுது தொழிலுக்குத் தக்க வருவாய் பெற்றுத் தம் பொருட்காலில் நிற்க வேண்டும். அப்போதுதான் சந்தை நோக்கமும் தொழுநோயுமின்றிச் சிந்தனையுரிமையோடு எழுத்துப் பிறக்கும்** (இலக்கியச்சாறு, ப.13)

என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் தொடர்சிந்தனையாக வீட்டு நூலகம் அமைப்பது குறித்தும், குடும்ப நலத்திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு விளம்பரப்படுத்துகின்ற அரசு, மக்கள் புத்தகம் வாங்குவது தொடர்பாகவும் பல அறிவிப்புகளை, விளம்பரங்களை வெளியிட வற்புறுத்துகின்றார். சான்றாக **வீட்டுக்கு ஒரு நூலகம்..., புத்தகம் வாங்கிப் புத்தகம் பெறுக..., ஏடுகள் வாங்கின் கேடுகள் நீங்கும்...** (இலக்கியச்சாறு, ப.14) போன்ற வாசகங்களை அவர் முன்வைக்கின்றார். அத்துடன் நூல்கள் விற்பது வாங்குவது குறித்த அரசின் பங்களிப்புப் பற்றி பேசும் அவர், கைத்தறி முதலானவற்றிற்கு அரசு தள்ளுபடி வழங்குவது போல மத்திய, மாநில அரசுகள் புத்தகங்களுக்கு நிதிநிலையில் ஐந்து சதமாவது ஒதுக்கீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால்தான் பாரதி கூற்று போல வெள்ளம் போல் கலைப்பெருக்கும், கல்விப் பெருக்கும் உயரும், அறியாமைப் பள்ளத்தில் விழுந்திருக்கும் உயர்திணைக் குருடரெல்லாம் அறிவு பெறுவர் என்று

குறிப்பிடுவதும் பேராசிரியரின் எழுத்து – எழுத்தாளர் - சமூக ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாய் உள்ளன.

ஒரு சமூகம் மேம்பட அந்தச் சமூகம் தன் மொழியில் செழுமையுற்றிருக்க வேண்டும். மொழி ஒரு ஊடகம். அது அறிவை, உணர்வினைப் பகிர்ந்து கொள்ளுகின்ற ஒரு கருவி என்பதை நாம் அறிவோம். அந்த வகையில் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது அளவற்ற பற்றுடையவராக வ.சுப.மா திகழ்ந்துள்ளார். அவரின் தமிழுணர்வைப் பறைசாற்றும் இரா.மோகன்,

> **தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனம் பற்றிய சிந்தனைகள் வ.சுப.மாவின் நூல்களில் அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கக் காணலாம்** (வ.சுப.மாணிக்கம், ப.98)

என்று பதிவுசெய்கின்றார். மேலும் தாய்மொழிக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வ.சுப.மா.,

"மொழியியல் கற்க முயலுமுன் உன்தாய்
மொழிதமிழ் கற்பாய் முதல்" (மாணிக்கக் குறள், 45)

என்று தாய்மொழி கற்க வலியுறுத்துகின்றார். அதுமட்டுமல்லாது மொழிக் கலப்பினால் தாய்மொழியாம் தமிழ்மொழிக்குக் கேடு விளையும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். எழுத்துச் சீர்திருத்தத்தையும் பெரிதும் ஏற்றுக் கொண்டிராததை அவரது பாடல்வரிகள் மூலமாக நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

"ஒழிகெனக் கத்துதற்கோ இந்திமொழியும்
ஒழியும் தமிழை உயர்த்து" (மாணிக்கக் குறள். 66)

"மொழித்தூய்மை காட்டித் தலைக் காக்கை கற்பு" (மாணிக்கக் குறள்.371)

"களை அயலொலி, காண்க தமிழ்ச்சொல்" (மாணிக்கக் குறள்.167)

"எழுத்துத் திருத்தம் இயல்போ தமிழைக்
கழித்துச் சுழிக்கும் கதை" (மாணிக்கக் குறள்.156)

குழந்தை பெற்றுக்கொள்வது பற்றிப் பேசுகின்றபோது பொருளாதாரத்தோடும், தமிழோடும் தொடர்புபடுத்தும் விதமும் பேராசிரியரின் ஆழ்ந்தகன்ற அறிவுப்பூர்வச் சிந்தனையின் அடையாளமாகவே தொழிற்படுகின்றது.

“பெறுக குழந்தை பெறுவருவாய்க் கேற்ப

உறுக தமிழ்ப்பேர் ஒலி” (மாணிக்கக் குறள்.216)

திறனாய்வாளர்

பேராசிரியர் சிறந்த ஒரு திறனாய்வாளர் என்பதற்கு அவரது தமிழ்க் காதலும் கம்பன் உள்ளிட்ட பல நூலாக்கங்களும் சான்றாகத் திகழ்கின்றன. படைப்பியம், கம்பனியம், இலக்கியக் கலை, இலக்கியத்தளம், இலக்கிய உத்தி போன்ற அவரின் சொல்லாடல்களின் பயன்பாடு அவரின் உலக இலக்கிய மற்றும் திறனாய்வு நூல்களின் வாசிப்புத் தளத்தின் வெளிப்பாடாக நாம் எண்ணிப் பார்க்க முடியும்.

பேராசிரியர் தனது ‘கம்பர்’ நூலில் ஓர் இலக்கியத்தை அல்லது ஒரு காப்பியத்தை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குகின்றபோது ஒப்புமை முறை, முழுப்பார்வை, துண்டுப்பார்வை, தொடர்பழகு, சங்கிலிப்பார்வை, தனிப்பார்வை, உலகப்பார்வை என்பதாக விவரிப்பன அவரின் திறனாய்வுப் பார்வையினை இனங்காட்டுவதாய் உள்ளது. திறனாய்வு பற்றிக் குறிப்பிடுகின்ற போது,

> **திறனாய்வு என்பது ஒப்பாய்வன்று, உள்ளாய்வு. புறனாய்வன்று அகனாய்வு. இராமாயணப் பெருங்காப்பியம் வடிக்க முனைந்த கம்பர் தம் காப்பியத்தில் என்னென்ன கூறுகள் எவ்வாறு எவ்விடத்து அமைய வேண்டுமென்று கருதினார். அவர் காட்டுகின்ற காப்பிய இலக்கணங்கள் என்ன என்று அந்நூலுக்கு உரிய தனியளவுகோலைக் கண்டுபிடித்து உலகிற்குக் காட்டுவதே நம் நோக்கமாதல் வேண்டும்** (கம்பர், ப.21)

என்று திறனாய்வுப் பார்வையின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

வ.சுப.மாணிக்கனார் திறனாய்வாளர் மட்டுமல்ல, படைப்பாளியும் ஆவார். எனவேதான் அவர் ஒரு படைப்பைச் சிதைக்காமலும் அதேநேரத்தில் நுட்பமாகப் புரிந்துகொள்ளவும் விளைகின்றார். படைப்புக்கும், படைக்கும் படைப்பாளிக்கும் பெருத்த வேறுபாடும் அதே நேரத்தில் தனித்த நோக்கும் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டமையால்தான் அவர் அகனாய்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நம்மால் எளிதாக உணர முடிகின்றது. அதுபோலவே துண்டுப்பார்வை காப்பியம் போன்ற ஒரு பெரும்படைப்பை மதிப்பீடு செய்வதற்கோ, விமர்சிப்பதற்கோ சரியான அளவுகோலாக இருக்காது என்பதைத் தீர்க்கமாக முன்வைக்கின்றார். மட்டுமல்லாது முழுப்பார்வை, தொடர்பழகு, சங்கிலிப் பார்வை போன்றவையே படைப்பைச் சரியாக

விமர்சிப்பதற்கு ஏற்புடைய அணுகுமுறையாக இருக்கும் என்பதை வலியுறுத்துவதும் அவரின் திறனாய்வு அணுகுமுறைக்கான சான்றாகவே கொள்ளத்தக்கது.

வ.சுப.மாவைப் பற்றி, அவரின் நூல்களைப் பற்றிப் பேசுகின்றபோது அவரின் தமிழ்க்காதலைப் பற்றி நாம் சொல்லாமலிருக்க முடியாது. சங்க அகப்பாடல்கள் குறித்த ஆய்வாக அமையும் இந்நூல் அகஉணர்வு, அகச்செயல்பாடு, அகஇலக்கியம் குறித்துத் திறந்த நிலையில் பேசக்கூடிய ஒரு நல்உரையாக அமைகின்றது. தொல்காப்பியம், தமிழர் வாழ்வியல் நெறிமுறைகளுக்கு உட்படுத்தியும், தமிழர் நிலத்திற்கு உட்படுத்தியும், சில இடங்களில் மானுடவியலோடு தொடர்புபடுத்தியும் பார்த்திருப்பதைக் காணலாம். ஆய்வுப் பொருளின் தன்மைக்கேற்ற பொருத்தப்பாடுடைய ஆய்வியல் அணுகுமுறையினை அவர் இங்குக் கைக் கொண்டிருப்பது சிறப்புக்குரியது.

தொல்காப்பியரை ஓரிடத்தில் சுட்டுமிடத்து "பாலியலறிஞன்" (ப.14) எனச் சுட்டுவதும், காமம் பற்றிப் பேசுமிடத்தில் "உலகம் நீடு வாழ உயிர்க்கொடை செய்யும் காமம்" என்றும் (ப.14) அகத்திணையின் தோற்றம் பற்றிப் பதிவு செய்யுமிடத்து "சமுதாயவியல் மானுடவியல் தொல்தமிழகத்தின் உளவியல் என்னும் முக்கூற்றுத் தன்மைகளை(ச்) சார்ந்து நிற்பது" (ப.93) எனக் குறிப்பிடுவதும், மேலும் அகத்திணை இலக்கியத்தைப் பெண்ணிலக்கியமாக, (ப.377) கற்பிலக்கியமாக, (ப.378) பாலியற்கல்வி தரும் இலக்கியமாக (ப.379) எல்லாம் பார்க்கும் விதம் அவரின் தனித்த, புதிய, நுட்பமான அதேநேரம் தமிழனின் பண்பாட்டோடு கூடிய ஆய்வாக நாம் எண்ணிப் பார்க்கத்தக்கன.

"அகத்திணை ஓர் பாலிலக்கியம், பெயரில்லாதார் வாழ்க்கையிலிருந்து காம நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கின்றோம். காமம் பற்றிய ஆணுடல் பெண்ணுடலின் கூறுகளையும், இயற்கை, செயற்கைத் திரிபு ஆகிய மனக்கூறுகளையும் தரவின்றிப் பட்டாங்காய்ச் சொல்வது" (ப.379)

எனப் பாலியல் நூலாக இனங்காணும் அவர், அக இலக்கியத்தைச் சொல்வதில் எத்தகைய பொறுப்புணர்வு, கட்டுப்பாடுகள் தேவை என்பதையும் அடையாளப்படுத்தத் தவறவில்லை. அவர் கூறுகின்றபோது,

"அகத்திணையில் பொருளுக்கு மட்டும் வரம்பன்று, பொருளைச் சொல்லும் முறைக்கும் வரம்பு உண்டு என்பது கற்கத்தகும். வரம்பிட்ட பாற் பொருளும், வடித்திட்ட இலக்கிய

முறையும் இரண்டறக் கலந்த ஒருமைப் பண்பே அகம்” (தமிழ்க் காதல், ப.28) எனச் சுட்டித் தெளிவுபடுத்துகின்றார்.

முடிவுரை

பேராசிரியர் வ.சுப.மா அவர்களின் படைப்பும், பேச்சும், சிந்தனைச் செயல்பாடும் தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற சமூகக் கரிசனம் மிக்கதாக அமைகின்றன. இவரது திறனாய்வுப் பார்வையைப் பொறுத்தமட்டில் புதிய, தனித்தன்மை வாய்ந்த, நுட்பமான, அதே நேரம் இலக்கியம் உருவான நிலம்சார்ந்த பண்பாட்டோடு கூடிய பார்வை முறையினை அடையாளப்படுத்துவதாய் விளங்குகின்றது.

துணைநூற்பட்டியல்

1. இரா சாரங்கபாணி .– மாணிக்கச்செம்மல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1997
2. வ மாணிக்கம்.சுப.– தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு - டிசம்பர்-2012
3. வ.சுப.மாணிக்கம் – கம்பர், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1990.
4. வஇலக்கிய விளக்கம் - மாணிக்கம்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1972,
5. வசிந்தனைக் களங்கள் - மாணிக்கம்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1975.
6. வமாணிக்கக் குறள் - மாணிக்கம்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1991.
7. வமாணிக்கனாரின் சிந்தனைகள்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

inam:International Research E_Journal of Tamil Studies ISSN : 2455-0531
February 2017, Issue:8 www.inamtamil.com

மதிப்பிடப்பெற்றது

வ.சுப.மாவின் அச்சேறிய நூல்களும் நிறைவேறா ஆசைகளும்

சேது.முனியசாமி
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

1.0 முகப்பு

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் சங்க இலக்கிய அடியைப் பாடிய கணியன் பூங்குன்றனாரும், பாரியும் கபிலரும், பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும் பிறந்த மண்ணான பறம்பு மலையில் (தற்போது பிரான்மலை) உதித்த மற்றொரு சான்றோர் வ.சுப.மா. ஆவார். தொன்றுதொட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்த சான்றோர்களின் வரிசையில் புகழோடு தோன்றித் தமிழுக்கு அழகு சேர்க்கும் மாணிக்கமாகத் திகழ்ந்தார். இளம் வயதில் தன் பெற்றோரை இழந்தார். அவ்வப்போது தாய்வழிப் பாட்டி மீனாட்சி ஆட்சியும் தாத்தா அண்ணாமலை செட்டியாரும் கண்ணும் கருத்தாய் வளர்த்ததற்கு நன்றி மறவாது தன்னுடைய முதல் படைப்பில்

"என்னை உடனையார் ஏங்காதே வாழ்வளித்த
அன்னை முதல்வர் அடிப்பணிந்தோம்
உறவினர் வாழ உவந்தளிந்தார்; ஆயுள்
நிறையினர் நின்ற நெறி" **(மனைவியின் உரிமை)**

எனும் அடிகளின் மூலம் வள்ளுவர் கூறும் நன்றி மறவாமையைப் புலப்படுத்துகின்றார்.

தமிழாய்வு எனும் களத்தில் வ.சுப.மா. ஆற்றியுள்ள பங்களிப்பு அளப்பரியது. **'முனைவர்', 'மூதறிஞர்', 'செம்மல்', 'தமிழ்க் காந்தி', 'தமிழ் இமயம்'** எனும் பல்வேறு புகழ்ப் பெயர்களைப் பெற்று விளங்கியவர். **1917**ஆம் ஆண்டு இவ்வுலகக் காற்றினைச் சுவாசிக்கத் தொடங்கி, **1989**ஆம் ஆண்டு சுவாசித்த காற்றை நுகர மறந்தார். பன்முகப் பரிமாணங்களில் தடம் பதித்த வ.சுப.மா. எழுத்துப்பணியில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார் என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வகையில் இக்கட்டுரையானது, எழுத்துத் துறையில் தன்னைப் பதித்ததன் விளைவாயெழுந்த (அச்சேறிய) நூல்களையும், எதிர்காலத்தில் இன்ன பணி செய்ய வேண்டுமெனத் திட்டமிட்டு நிறைவேறா ஆசைகளையும் எடுத்து இயம்புவதாக அமைகின்றது.

2.0 பன்முகக் கல்வியாளர்

வ.சுப.மா தனது தொடக்கக் கல்வியைத் தனது ஊரில் நடேச ஐயரிடம் கற்றார். பின்பு சன்மார்க்கச்சபை தொடர்பினால் பண்டிதமணியிடம் பழகும் வாய்ப்புக் கிட்டியது. தமிழ் படிக்க வேண்டுமெனும் தன் வேட்கையைப் பண்டிதமணியிடம் புகுத்தினார். அவரது ஆர்வத்தைக் கண்டு காரைக்குடி சொக்கலிங்க ஐயா தில்லையில் நிறுவிய வித்தியாசாலையில் புலவர் புகுமுக வகுப்பிற் சேர்ந்து உணவோடு தங்கிப் படிக்க ஏற்பாடு செய்தார். நான்காண்டுகள் பயின்று புலவரானார். பின்னர் **1940**ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ஆய்வு மாணவராகச் சேர்ந்தார். தமிழிலக்கண வரலாறு தொடர்பான ஆய்வு செய்தமையால் அங்கேயே விரிவுரையாளர் ஆனார். தாமாகவே ஆங்கிலம் பயின்று **1945**ஆம் ஆண்டு பி.ஓ.எல் புகுமுக வகுப்புத் தேர்வெழுதி வெற்றி பெற்றார். வினைச்சொற்களை ஆராய்ந்து சென்னைப் பல்கலைக்கழத்தில் எம்.ஓ.எல் **1948**ஆம் ஆண்டு ஆராய்ச்சிப் பட்டம் பெற்றார். பிஓஎல் பட்டம் பெற்றோர்க்கு அதனையே எம்.ஏ பட்டமாக மாற்றித் தந்தது. பி.ஏ ஆனர்சு பட்டம் பெற்றார். ஓராண்டு கழித்து எம்.ஏ பட்டம் கிடைத்தது. **1957**ஆம் ஆண்டு **சங்க இலக்கியத்தில் அகத்திணைக் கொள்கை** எனும் தலைப்பில் ஆய்வு செய்து ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் பெற்றார். முதுமுனைவர் பட்டத்தை (டி.லிட்.) **1979**ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன்விழாவின் போது வழங்கியது. மேலும் இந்தி, சமசுகிருதம், பிரெஞ்சு ஆகிய மொழிகளையும் கற்றறிந்தார்.

3.0 பன்முகப் படைப்பாளர்

ஆராய்ச்சி, உரை, பதிப்பு, நாடகம், கவிதை, கடித இலக்கியம், ஆங்கில நூல்கள் எனப் பன்முகப் படைப்புகளைப் படைத்துள்ளார். அதுமட்டுமின்றி இன்னும் அதிகமான நூல்களைப் படைக்க வேண்டுமென எண்ணம் கொண்டவராய்த் திகழ்ந்துள்ளார். தமிழ்மீது கொண்டுள்ள அன்பின் விழைவால்தான் நூல்கள் உருப்பெற்றன எனக் கூறினாலும் அது மிகையாகா. இனி அவரால் படைக்கப் பெற்ற நூல்களைக் காணலாம்.

3.1 ஆராய்ச்சி நூல்கள்

வ.சுப.மா. ஆய்வுத் தேடலில் பரந்த எல்லைகளை வகுத்துக் கொண்டவர். ஆய்வுப் பொருள், ஆய்வு எல்லை தொல்காப்பியம் முதல் 20ஆம் நூற்றாண்டு விடுதலைக் கவிஞர் பாரதி பாடல்கள் வரை விரிவாக ஆராய்ந்துள்ளார். அவர்தம்

ஆராய்ச்சிப் பகுதியினை ஏழு வகைகளில் பகுக்கலாம். அவை: இலக்கணம், சங்க இலக்கியம், தமிழின் முதல் அற இலக்கியம், காப்பியம், சமய இலக்கியம், சிற்றிலக்கியம், இன்றைய இலக்கியம் என்பன.

இலக்கண ஆராய்ச்சிப் பகுதியில் **'தொல்காப்பியக் கடல்' (1987)** எனும் நூலினைப் படைத்துள்ளார். இந்நூலில் தொல்காப்பியம் தொடர்பான 31 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கிய ஆராய்ச்சிப் பகுதியில், **'தமிழ்க் காதல்' (1962)** மற்றும் **'சங்க நெறி' (1987)** ஆகியன உள்ளன. இதில் தமிழ்க் காதல் எனும் நூல் அறிஞர் (டாக்டர்) பட்டத்திற்காக (சென்னைப் பல்கலைக்கழகத்தில்) எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கமாகும். சங்கநெறி எனும் நூலானது சங்க இலக்கியம் தொடர்பான 24 கட்டுரைகளின் தொடர்பாகும்.

காப்பிய ஆராய்ச்சிப் பகுதியில், **'கம்பர்' (1987), 'காப்பியப் பார்வை' (1987)** எனும் இரு நூல்கள் வெளிவந்துள்ளன. கம்பர் எனும் நூல் அறக்கட்டளைச் சொற்பொழிவின் சாரம் ஆகும். இதனைக் கீழ்க்காணும் கருத்துவழி அறியலாம்.

> "***தமிழ்ப் பேராசிரியர் மூதறிஞர் இரா.பி.சேதுப்பிள்ளை தம் அன்னையார் நினைவாகச் சொருணாம்பாள் நிதிச் சொற்பொழிவு எனும் அறக்கட்டளையை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிறுவினார். இவ்வமைப்பின்கீழ் கம்பர் என்ற புலவர் பெருமான் தலைப்பில் 1964 பிப்ரவரி 21, 22, 23 ஆம் நாட்களில் காப்பியப் பார்வை, காப்பியக் களங்கள், காப்பிய நேர்மை என்ற முத்திறப் பொருள் பற்றிச் சொற்பொழிந்தேன்*** " (கம்பர்:முன்னுரை)

காப்பியப் பார்வை எனும் நூல் 20 கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்நூல் தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியில், **'வள்ளுவம்' (1993) 'திருக்குறட் சுடர்' (1987)** எனும் இரு நூல்கள் வெளியாகியுள்ளன. வள்ளுவம் எனும் நூல் 12 கற்பனைப் பொழிவுகளின் தொகுப்பு நூலாகவும், திருக்குறட் சுடர் எனும் நூல் திருக்குறள் பற்றிய 18 கட்டுரைகளின் தொகுப்பு நூலாகவும் காணப்படுகின்றது.

சமய இலக்கிய ஆராய்ச்சிப் பகுதியில், **திருவாசகம், திருக்கோவை, திருப்பாவை, திருவெம்பாவை, தாயுமானவர் கவிதை** போன்றவை

இடம்பெறுகின்றன. சிற்றிலக்கிய ஆராய்ச்சியில் கோவை, தைப்பாவை ஆகியவற்றையும், படைப்பிலக்கிய ஆராய்ச்சியில், பாரதி கவிதை, காந்தி கவிதை, பாடுவார் முத்தப்பர் படைப்புகள் ஆகியவற்றையும் ஆராய்ந்துள்ளார்.

3.2 உரை நூல்கள்

வ.சுப.மாவின் நடை தூய செந்தமிழ் நடையாகும். பழைய உரையாசிரியர்களின் நடைப் போக்கைப் பின்பற்றியும் பழந்தமிழ்ச் சொற்களுக்கு முன்னுரிமை அளித்தும், தூய செந்தமிழ் நடையில் நூல்களைப் படைத்துள்ளார். ‘’***வ.சுப.மா எல்லோருக்கும் விளங்கும் வகையில் எல்லோரும் விரும்பும் வகையில் சிறுசிறு தொடர்களான வாக்கியங்களைக் கையாண்டு எழுதுவது உண்டு; சிந்தனை நீளத்திற்கு ஏற்றவாறு உம்மைகளும் எச்சங்களும் அமைய, நீண்ட தொடர்களால் ஆன வாக்கியங்களைக் கையாண்டு, ஆற்றொழுக்காக எழுதிச் செல்வதும் உண்டு’*** (வ.சுப.மாணிக்கம், பக். 29-30). எளிமை (Simplicity) சுருக்கம் (Brevity) தெளிவு (Clarity) ஆகிய முப்பண்புகள் இவரின் நடையில் காணப்படுகின்றன. **“நடையழகு இல்லா இலக்கியமும் நிறவண்ணம் இல்லாச் சோலையையும் மெய்ப்பாடில்லா நடிகனையும் வெள்ளாடை உடுத்திய பெண்ணையும் ஒக்கும்” (**இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை, ப.19) என நடையின் கருத்தினைக் கூறுகின்றார். வ.சுப.மா.வின் நடையில் கருத்து, வெளிப்படுத்தும் அழகு போன்றவை ஒருங்குகூடி அமைந்திருக்குமெனத் தமிழ் ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். வ.சுப.மாவின் உரையில் வெளிவந்த நூல்களாவன: **திருக்குறள் தெளிவுரை(1989), நீதி நூல்கள் உரை (1991), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும், மாணிக்க உரை (1989).**

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் நூன்மரபு, மொழிமரபு நூற்பாக்களுக்கு உரை வரையும்பொழுது வ.சுப.மா. பின்பற்றியுள்ள உரைநெறிகளாக, 1.இயல் முன்னுரை, 2.இயல் கருத்து, 3.அகலவுரை, 4.வழக்கு, 5.திறனுரை, 6.இயல் முடிவுரை ஆகியன அமைந்துள்ளன.

3.3 பதிப்பு நூல்கள்

வ.சுப.மா. பதிப்பாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். தம்மால் இயன்ற பங்களிப்பைப் பதிப்புத் துறைக்குச் செய்துள்ளார். அவர் பதிப்பித்த நூல்களாவன: **இரட்டைக் காப்பியம் (1958), நகரத்தார் அறப்பட்டயங்கள் (1961).** இவர் பதிப்பித்த நூல்களை ***“உ.வே.சாவின் குறுந்தொகைப் பதிப்பிற்கு இணையான சிறப்பினையும்***

சீர்மையினையும் கொண்டு வ.சுப.மா வின் "இரட்டைக் காப்பியங்கள்" பதிப்பு விளங்குகின்றது' (வ.சுப.மாணிக்கம், பக்.152-153) எனும் கருத்துச் சுட்டிக்காட்டுகின்றது.

3.4 கவிதை நாடக நூல்கள்

வ.சுப.மா. சிறந்த ஆய்வாளர் மட்டுமல்லர். ஒரு நல்ல படைப்பாளியுங்கூட. மிகுந்த ஆர்வத்தோடு கவிதை, நாடகம் ஆகிய இரு துறைகளில் கால்பதித்துள்ளார். கவிதைத் துறையில், **கொடை விளக்கு (1957), மாமலர்கள் (1978), மாணிக்கத் தமிழ் (1991)** ஆகிய மூன்று நூல்களைப் படைத்துள்ளார். நாடகத் துறையில் **மனைவியின் உரிமை (1947), நெல்லிக்கனி (1962), உப்பங்கழி (1972)** ஒரு நொடியில் **(1972)** ஆகிய நான்கு நாடகங்களைப் படைத்துள்ளார்.

தனது படைப்பில் உணர்ச்சி வெளிப்பாடு, கற்பனை வளம், உவமைநயம், தொடக்கமும் முடிவும் நயமுற அமைதல், நவில்தொறும் வெளிப்படும் நயம், நோக்குத் திறன், அளவுகோலில் பாட்டு அமைத்தல் திறன் போன்றவற்றினை நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். கொடை விளக்கு எனும் நூலில், வள்ளல் அழகப்பரின் வாழ்வைப் பற்றிப் பதிவு செய்துள்ளார். இந்நூல் 171 வெண்பாக்களால் அமையப் பெற்றுள்ளது. மாமலர்கள் எனும் நூலினைப் பல்வகைச் செய்யுளோடு பல்வகைப் பொருள் சார்ந்ததாகப் படைத்துள்ளார். அதேபோல் மாணிக்கத் தமிழ் எனும் நூலினை ஐந்நூறு குறட்பாக்களைக் கொண்டு அமைத்து, அந்தாதிப் போக்கில் காணச் செய்துள்ளார். இது இவரின் கொள்கை விளக்க நூலாகத் திகழ்கிறது.

3.5 கடித இலக்கியங்கள்

கடித வடிவில் கருத்துக்களைச் சுவைபட விளக்கிச் செல்வது ஒரு கலையாகும். அறிஞர் அண்ணா, மு.வ. போன்றவர்கள் எழுதிய கடிதங்களில் உயிரோட்டமும் எழுச்சியும் அமைந்தன. அதேபோல் வ.சுப.மா.வின் கடிதங்களும் விளங்கின. 'தலைவர்களுக்கு' (1965) எனும் நூல் 25 கடிதங்கள் பெற்றுத் திகழ்கின்றது. கடித இலக்கியத்தின் நோக்கானது, ***"நாட்டு நலமே நம் அறிவின் நோக்கம், எது நாட்டுக்கு நல்லதோ அதுதான் என் கடிதங்களில் இடம்பெறும்"*** (வ.சுப.மாணிக்கம், ப.138) என்பதாக அமைதல் வேண்டுமென்ற சிந்தையுள்ளவராகத் திகழ்ந்துள்ளார். மொழிக்கு முதன்மையும், மொழிக் கருத்துகளின் சாரமும், மொழிக் கொள்கையும் இவரது

கடிதங்களில் காணலாகின்றன. கடிதங்களைப் படிப்பவருக்கு மூன்று தகுதிகள் வேண்டுமெனக் கூறுகிறார். அவை வருமாறு:

- ❖ வன்முறைகளை எதற்கும், என்றும், எவரும் கையாளக் கூடாது.
- ❖ பாரதத்தின் ஒருமைப்பாடு பாழ்படக்கூடாது.
- ❖ அடிப்படையுரிமையில் ஏற்றத் தாழ்வு கூடாது.

3.6 ஒரு பொருட் கட்டுரைகள்

எழுத்துச் சீர்திருத்தம், எங்கே போய் முடியும்?, தமிழ்வழிக் கல்வியியக்கம்: மொழியறிக்கை (1989), தமிழ்வழிக் கல்வியியக்கம்: மதுரை ஊர்வலம் நிகழ்ச்சி விளக்கம் (1988) ஆகிய மூன்று ஒருபொருட் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

3.7 ஆங்கில நூல்கள்

வ.சுப.மா. ஆங்கில மொழியறிவுமிக்கவர் என்பதற்கு The Tamil Concept of Love, A Study of Tamil Verbs, Collected Papers, Tamilology ஆகிய ஆங்கில நூல்கள் சான்றாக உள்ளன.

4.0 வ.சுப.மா.வின் ஆளுமையை அடையாளம் காட்டும் நூல்கள்

ஆராய்ச்சி மாணவராய்த் தொடங்கி, பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவியேற்றுத் தமிழுக்குப் புதிய சொல்லாக்கங்களையும், புதிய ஆராய்ச்சி வழிகளையும் வித்திட்ட வ.சுப.மா.வைப் பற்றிப் பல ஆய்வு நூல்களும், ஆய்வேடுகளும், கட்டுரைகளும் எழுந்துள்ளன. அதில் **மாணிக்கக்குறள் தெளிவுரை** (இரா.இளங்குமரன்:1992), **வ.சுப.மாணிக்கனாரின் சொல்லாக்கம்** (பழ.முத்துவீரப்பன்:1988) **வ.சுப.மாணிக்கனாரின் வாழ்வும் பணியும்** (மெய்யப்பன்:1989), **மாணிக்கக் குறள் ஓர் அறிமுகம்** (1993) இந்திய இலக்கியச் சிற்பிகள் **வ.சுப.மாணிக்கம்** (இரா.மோகன்:1999), **மாணிக்கச் செம்மல்** (இரா.சாரங்கபாணி:1997), **மாணிக்கத் தமிழ்** (தமிழண்ணல்) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன.

5.0 வ.சுப.மா.வின் நிறைவேறா ஆசைகள்

வாழும்போது எண்ணற்ற படைப்புகளைப் படைத்துத் தமிழ்மொழி ஆய்வுக்கும், வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றியுள்ள வ.சுப.மா.வின் அயராத உழைப்பும் ஆழ்ந்த

தேடலும் அவரைத் தமிழுலகில் அடையாளப்படுத்தின. தமிழர்கள் நெஞ்சில் அழியாத் தடம் பதித்தன.

தன் வாழ்நாள் முழுவதும் மட்டுமின்றி எதிர்கால ஆய்வினைக் குறித்துப் பரந்த திட்டங்களைக் கொண்டவராகவும் திகழ்ந்துள்ளார். இதனை ***“செம்மல் எண்பத்தைந்தாம் அகவை வரை வாழலாம் என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். ஆகவே தம் எழுபதாம் ஆண்டில் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய வேலைகளை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களாக வகுத்துக் குறித்து வைத்துள்ளார்”*** (மாணிக்கச் செம்மல், ப.144) எனும் கருத்து மூலம் அறியமுடிகின்றது.

- உலகப் போக்குகள், ஒழுக்க நெறிகள், மக்களின் உளப்பாங்கு முதலியவற்றை ஆராய்ந்து, தமிழகம், பாரதம், உலகம் எல்லாவற்றிற்கும் பயன்படும் வகையில் நூல் ஒன்று செய்ய வேண்டுமென்பது அவர் எண்ணமாயிருந்தது.
- படைப்பிலக்கியம், படைப்பிலக்கணம் செய்தல், பண்டைய இலக்கண இலக்கியங்களைத் திறனாய்வு செய்து எழுதுதல், மனைவியின் உரிமை, நெல்லிக்கனி போல மேலும் சமுதாயத்திற்கு உதவும் வகையில் நாடக நூல்கள் இயற்றல் போல்வன எதிர்கால எண்ணங்கள்.
- பாரதீயம் எனும் தலைப்பில் கற்பனைப் பொழிவுநூல் படைத்தல்.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி பற்றிப் **‘பாரதச் செருக்கு’** எனும் நாடகநூல் எழுதுதல்.
- தொல்காப்பியம் என்னும் நூல் போல **மாணிக்கம்** எனும் பெயரில் ஓர் இலக்கண நூற்பா யாப்பில் படைத்தல்.
- **நாட்டுமறை** என்ற பாரத நூல், பெண்ணுரிமை, வறுமை நீக்கம், தமிழ்வளம், மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்தல் முதலிய நூல்கள் படைத்தல்.
- வான் வாழ் உயிரினங்கள் (பறவைகள்) கடல்வாழ் உயிரினங்கள் (மீன்,நண்டு, ஆமை), வானம் போன்றவைகள் வ.சுப.மாவின் எதிர்காலத் திட்டங்களாகும். இவையெல்லா நூல்களையும் உரைநடையில் எழுதாமல் பாவகையிலும், பாவுடன் உரைநடை விரவிய வகையிலும், வினாவிடை நடையிலும் எழுத வேண்டுமெனத் திட்டம் தீட்டியிருந்தார்.

5.1 நூல் ஒன்று படைக்க வேண்டுமெனத் தலைப்புகளை நிர்ணயித்தல்

- திருக்குறள் நேருரை – செயலுரை (வாழ்வுரை).
- திருவாசகம் என்னும் உயிர் வாசகம்.
- இராமலிங்கம் அல்லது உயிர் இரங்கல்.
- வாய்மை வாழ்வு (தனி வரலாறு)
- தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா?
- தமிழ்வழிக் கல்வி இயக்கம்
- திருக்குறள் இலக்கியம்
- சங்க இலக்கியங்களின் புதுமை
- சங்ககாலநிலைக் கொள்கைகள்
- சிலப்பதிகாரம் – காதை வளர்ச்சி
- கம்பனியம்
- தமிழ்க் காப்பிய உலகம்
- தமிழ் மொழி வரலாறு
- தமிழிலக்கிய வரலாறு
- மதுரைப் பணிகள்
- மக்கள் கீதை

ஆகிய தலைப்புகளைக் கொண்டு **"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"** எனும் நோக்கில் நூல் ஒன்றைப் படைக்க வேண்டுமென விரும்பினார்.

6.0 முடிப்பு

வ.சுப.மா. தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழிலே வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். காலம் அவரை நேசித்ததால், அவரின் எழுத்து எனும் உயிரோட்டமான சுவாசத்தை நம்மால் தொடர்ந்து சுவாசிக்க முடியாமல் போய்விட்டது. இவ்வாண்டு வ.சுப.மா.வின் நூற்றாண்டு விழாவாய் அரங்கேறினாலும் அவர் எழுதிச் சென்ற தமிழாய்வுகள் பல நூற்றாண்டுகள் **வாழும்; வளரும்.**

பார்வை நூல்கள்

1. **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை,** சக்திவேல்.சு, 2005, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
2. **கம்பர்,** மாணிக்கம் வ.சுப., 1990, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
3. **மாணிக்கச் செம்மல்,** சாரங்கபாணி இரா., 2016, நூற்றாண்டு வெளியீடு.
4. **வ.சுப.மாணிக்கம்,** மோகன் இரா., 1999, சாகித்ய அகாதெமி, டெல்லி.

inam:International Research E_Journal of Tamil Studies ISSN : 2455-0531
February 2017, Issue:8 www.inamtamil.com

மதிப்பிடப்பெற்றது

வ.சுப.மா.வின் சொல்லாக்க முறைகள்

முனைவர் ப.திருஞானசம்பந்தம்
முனைவர்பட்ட மேலாய்வாளர், தமிழியல்துறை, தமிழியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21

தமிழ்ப் புத்திலக்கிய மரபில் பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க., மறைமலையடிகள், பாவாணர், கி.இராமலிங்கனார், அறிஞர் அண்ணா, ரசிகமணி டி.கே.சி. முதலியோர் புதிய சொல்லாக்கங்களைப் படைத்து அளித்துள்ளனர். இந்த வரிசையில் வ.சுப.மாணிக்கனாரும் தனது எழுத்துகளின்வழிப் பல புதிய சொல்லாக்கங்களைத் தமிழ் ஆய்வுலகிற்கு வழங்கியுள்ளார். இவற்றில் பல இன்றும் ஆய்வாளர்கள், ஆட்சியாளர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. சில சொல்லாக்கங்கள் தனித்துவத்துடன் நிலைபேற்றை அடைந்துள்ளன. தமிழகப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் வ.சுப.மா. உருவாக்கிய அலுவலகப் பயன்பாட்டிற்கான சொல்லாக்கங்கள் இன்றும் கையாளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ‘மொழிப்புலம்’, ‘புல முதன்மையர்’, ‘ஆளவை’, ‘ஆட்சிக் குழு’, ‘செம்பதிப்பு’ என்னும் சொல்லாக்கங்கள் பல்கலைக்கழகப் பயன்பாட்டில் உள்ளன. இச்சொற்கள் அனைத்தும் வ.சுப.மா. உருவாக்கியவை. இன்று புலமை உலகில் பலராலும் பரவலாகக் கையாளக்கூடிய சொல்லாகச் ‘செம்பதிப்பு’ நிலைபெற்றுவிட்டது. இச்சொல்லை உருவாக்கியவர் யார் என்று கேட்டால் அது பலருக்கும் தெரியாது. இதுபோல் இன்னும் பல சொற்களை வ.சுப.மாணிக்கம் உருவாக்கியுள்ளார். இவர் தனது நூல்களில் பயன்படுத்தியுள்ள தனித்தன்மை வாய்ந்த சொற்களையும் அவற்றின் ஆக்க முறைகளையும் இக்கட்டுரை கவனப்படுத்துகின்றது. இவரது நடைநலச் சிறப்பை, சொல்லாக்க முறையைச் ச.மெய்யப்பன் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

> இவர் நடையில் நின்றுயர் நாயகனாக விளங்குகிறார். இவர் நடை சொற் செட்டும் சுருக்கமும் தெளிவும் செறிவும் திட்பமும் வாய்ந்தது. புலமை நலம் சான்ற பெருமித நடை இவர் நடை. பழந்தமிழ்ச் சொற்கள் மிகுந்து வரும் இலக்கிய நடை. புதுச்சொற்கள் பொலியும் புதுவகை நடை. எல்லா வகையாலும் இவரது நடை தனித்தன்மை சான்றது. பேராசிரியருடைய மூன்று வரிகளைக் கொண்டே அவர் தமிழ்நடையின் தனித்தன்மையினை இனம்

காணலாம். அவர் பயன்படுத்தும் சொற்கள், சொல்லாக்கம், சொல்லாட்சி ஆகியவை அவர் நடையின் இயல்பினை இனங்காட்டுவன (சங்க நெறி, ப.v).

குறிப்பாக வ.சுப.மாணிக்கம் தனது சொல்லாக்கத்தினைக் குறித்தும், புதிய சொல்லாக்கங்கள் எவ்வாறு தமிழ்மொழிக்குச் சிறப்பினைச் சேர்க்கின்றன என்பன குறித்தும் தனது நூல்களின் பல இடங்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அவற்றுள் ஒன்று: “வளம் படைத்த தமிழ்மொழிக்குச் சொல்லாக்கிகள் மிகத் தேவை. அவ்வப்போது சொல்லை வடித்துக் கொடுக்காதவன் - வடித்துக் கொள்ளாதவன், மொழிக்கடன் ஆற்றாதவன் ஆகின்றான்; வேற்றுச்சொல் வரவுக்கு இடங்கொடுப்பவன் ‘ஆற்றுபவன்’ ஆகின்றான்” (காப்பியப் பார்வை, ப.194) என்பது இவரது கருத்து. வ.சுப.மா.வின் சொல்லாக்கச் சிறப்பை விரிவாக ஆராய்ந்து மதிப்பீடு செய்த பழ.முத்துவீரப்பன் “இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளருள் வ.சுப.மாணிக்கத்தைப்போல் புதிய சொல்லாக்கங்களைப் படைத்துத் தந்தவர் எவரும் இலர். ‘இதை நாற்பதாயிரம் கோயிலில் சொல்லலாம்’ என்று குறிப்பிடுகின்றார். வ.சுப.மாணிக்கத்தின் சொல்லாக்கங்களைக் கீழ்க்காணும் நிலைகளில் வகைப்படுத்தி நோக்கலாம்.

- நடைமுறையில் உள்ள இக்கால வழக்குச் சொற்பயன்படுத்தம்
- சொற்சுருக்கங்களைத் தனது எழுத்துகளில் உருவாக்கித் தருதல்
- ஒப்புமையாக்க நிலையில் எதிர்ச்சொற்களைப் பயன்படுத்துதல்
- தமிழிற்குப் புதிய, செறிவுமிக்க சொல்லாக்கங்களை உருவாக்கித் தருதல்
- ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லாக்கங்களைப் படைத்தல்
- தமிழின் தலைசிறந்த நூல்களை, அவற்றைப் படைத்த புலவர்களைச்சிறப்பிக்கும் வகையிலான சொல்லாக்கங்களை உருவாக்கிப் பயன்படுத்துதல்

மனிதர்கள் தங்களது வாழ்க்கையில் உறவுகளுக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்குகின்றனர். குறிப்பாக அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, மாமா, அத்தை உள்ளிட்ட உறவுகளுக்குத் தருகின்ற மதிப்பினைக் காட்டிலும் தனது உணர்வுகளைப் புரிந்துகொண்ட நண்பனுக்குத் தருகின்ற இடம் தனித்துவமானது. உறவினர்களிடையே பகிர்ந்துகொள்ள முடியாத செய்திகளையும் நண்பனிடம் பகிர்ந்து கொள்கின்றனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய உறவினை ‘நண்பன்’ என்று

அழைக்கின்றோம். இது ஆண்பாற் சொல். இச்சொல்லுக்கு இணையான பெண்பாற் சொல் 'நண்பி'. அதுபோல் வயதில் இளையவர்களைக் குறிக்கும் ஆண்பாற் சொல் 'இளைஞர்'. இச்சொல்லுக்கு இணையான பெண்பாற் சொல் 'இளைஞி'. நடைமுறை வாழ்க்கையில் நாம் கையாளக்கூடிய இச்சொற்களைத் தனது எழுத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே 'தமிழ்க் காதல்' (ப.118) என்னும் நூலில் வ.சுப.மா. பயன்படுத்தியிருப்பது தனித்துச் சுட்டத்தக்கது. இதுபோல் அன்பி (செயலி), நண்பி (ஏசு பெருமாட்டி), கயத்தி (சைவச்சி), வேந்தி (நடிகச்சி) போன்ற இகர விகுதி சேர்ந்த பெண்பாற் சொற்களையும் இவர் பயன்படுத்தியுள்ளார். இவற்றில் சில சொற்கள் இவருக்கும் முந்தைய புலவர்களால் கையாளப்பட்டுள்ளன.

உரைநடையில் நீண்ட தொடர்களைக் கையாளும்போது படிப்பவர்களுக்கு அது சலிப்பை ஏற்படுத்தும். சுருக்கமான சொற்களைப் பயன்படுத்துகையில் வாசிப்பவர்களுக்கு அது எளிதாகப் போய்ச் சேரும். அந்த வகையில் வ.சுப.மாணிக்கம் தன்னுடைய நடையில் நீண்ட சொற்களைக் கைக்கொள்ளாமல் சுருக்கமான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார். ஒரு படைப்பின் சிறப்பை ஆராய்ந்து கூறும் அறிஞரை, எழுத்தாளரைக் குறிக்கத் திறனாய்வாளர் (அ) திறனாளி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம். இச்சொல்லை இன்னும் சுருக்கமாக்கித் 'திறனி' (இலக்கியச் சாறு, ப.8) என்று குறிப்பிடுகிறார் வ.சுப.மா. இதுபோல், புதின ஆசிரியர் - புதினர் (மேலது, ப.14). கற்புடைய பெண் - கற்பி. உறுப்பினர், உறுப்பாளி - உறுப்பி. வளர்வு, ஆயுரை, இன்பி, வினைச்சி, வேந்தி (இந்திய இலக்கியச் சிற்பிகள், வ.சுப.மாணிக்கம், ப.42) உள்ளிட்ட சுருங்கிய சொல்லாக்கங்களை இவர் கையாண்டிருப்பதும் இத்தொடர்பில் எண்ணத்தக்கது. இதுபோல் இன்னும் பல சொற்களை அவரது எழுத்தின் வழிச் சான்றுகாட்ட முடியும். மன்னாயம் (சங்க நெறி. ப.8), தமிழ்ப் போலியன் (மேலது, ப.10), ஓர்மின் (மேலது, ப.10), வீட்டியல், பெண்ணியல் (மேலது, ப.16), வெற்றெழுத்தாளன் (மேலது, ப.19), தன்னளி மனப்பான்மை (மேலது, ப.20), கல்லாக் களிமகன் (மேலது, ப.24), சங்கப் புலமைச் சான்றோர்கள் (மேலது, ப.25), சங்கக் குழுவாயம் (மேலது, ப.33), காலவறிவு, சொல்லறிவு (மேலது, ப.38) முதலிய இச்சொல்லாக்கங்கள் அனைத்தும் இவர் புதியனவாக உருவாக்கியவை.

ஒப்புமையாக்கம் (Analogical Creations) என்ற நிலையில், வழக்கிலும் இலக்கிய ஆட்சியிலும் நிலைபெற்றுள்ள சொற்களைக் கொண்டு அவற்றைப் போன்ற புதிய

சொற்களையும் வ.சுப.மா உருவாக்கியுள்ளார். இது பற்றி இரா.மோகன் குறிப்பிடும் கருத்து, ‘‘ஒப்புமையாக்கம் என்ற நெறியைப் பின்பற்றி வ.சுப.மா. படைத்துத் தந்துள்ள சொல்லாக்கங்கள் பலவாகும். அல்லெண்ணம் (நல்லெண்ணம்), இலக்கியல் (அறிவியல், உலகியல்), இல்லாட்சி (அரசாட்சி), குழமை (முதுமை), விதிகாட்டி (வழிகாட்டி), வீழ்வுகள் (வாழ்வுகள்), நிறைபாடு (குறைபாடு), சொல்லாளர் (எழுத்தாளர்), கேள்வியாளர் (கல்வியாளர்) முதலிய சொல்லாக்கங்கள் இவ்வகையினவாகும் (மேலது, ப.42).. மேற்குறிப்பிட்ட சொல்லாக்கங்கள் சில இன்று வழக்கிழந்து போனாலும் அவை தனித்தன்மை வாய்ந்தவைகளாக உள்ளன. இச்சொல்லாக்கங்கள் தனித்தமிழ் அறிஞர்களின் எழுத்துகளில் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன என்பது தனித்துச் சுட்டத்தக்கது.

ஒரு சொல்லுக்கு இணையான பல புதிய சொல்லாக்கங்களையும் வ.சுப.மா. எடுத்தாண்டுள்ளார். குறிப்பாக எழுத்தாளரைக் குறிக்க, எழுத்தாளி, எழுத்தாள்வார், எழுத்துழவர், எழுத்தாளுநர், எழுத்துச் சான்றோர், எழுத்தாண்மையர், எழுதுகுலத்தோர் என ஏழு சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் (இலக்கியச் சாறு, பக்.1-23). சங்க காலத்தில் சான்றோர் என்ற சொல் பெரியவர் என்ற சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகக் கல்வியில், பதவியில், வயதில், செல்வத்தில், புகழில், உடலில், பெருமை வாய்ந்தோரையெல்லாம் பெரியவர் என்பர். சான்றோர் என்ற இச்சொல்லைப் பெண்சான்றோர், வீரச்சான்றோர் எனப் பெண்களுக்கும், வீரர்களுக்கும் உரியதாக வ.சுப.மா. கையாளுகின்றார். மேலும் புறநானூற்றில் (புறம்.256) இருந்தும், பதிற்றுப்பத்தில் (பதிற்றுப்.14,82) இருந்தும் இதற்குரிய சான்றினைக் காட்டுகின்றார் (சங்க நெறி, பக்.56,57). ஒரு கருத்தை ஒரு சொல்லால் குறிப்பதைக் காட்டிலும் ஒரு தொடர் கொண்டு குறிப்பது நமது மொழி வழக்கு என்று கூறும் வ.சுப.மா. அதற்குரிய சான்றினையும் தருகின்றார். சங்க காலத்தில் காதலும் வீரமும் சிறப்புற விளங்கியது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்விரண்டினையும் இணைத்து ‘காதற்போர்’ என்ற சொல்லை உருவாக்கியதோடு அதற்கான விளக்கத்தையும் கூறுகிறார். ‘‘நீரும் சுவையும் போலவும், பூவும் நிறமும் போலவும், உள்ளங்கை புறங்கை போலவும், தமிழினத்தின் வாழ்க்கையில் அகமும் புறமும் ஒரு பொருளாகக் கலந்திருந்தன. இத்தலைமைப் பண்பினைக் காதல் என்ற சொல்லாற் சொல்வதும் பொருத்தம் இல்லை; போர் என்ற ஒரு சொல்லாற் சொல்வதும்

பொருத்தமில்லை; ஆதலின் காதற்போர் என்ற தொடரால் குறிப்போம்” (மேலது, ப.65) என்கிறார். இவ்வாறு வ.சுப.மா. உருவாக்கிய சொற்களிலிருந்து இவரது சொல் வளமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அறிவியல் தொடர்பான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை வ.சுப.மா. உருவாக்கித் தந்துள்ளார். இது பற்றிக் குறிப்பிடும் இரா.மோகன் அச்சொற்களை ஆங்கில மூலத்தோடு எடுத்துக்காட்டுகின்றார். “குளிரகம் (Fridge), ஒலிப்பான் (Mike), அடக்கி (Break), நுரைப்பான் (Soap), முகமா (Powder), வெண் சுருள் (Cigarette), கட்டுத்தொகை (Deposit), செல்லுரிமை (Lbcense), பல்லுரசி (Tooth Brush), (தூசி, சாறு) வடிகட்டி (Filter), மேலாள் (Manager), வினைக்களம் (Office), செய்துணிக்கடை (Ready-made shop), முரண்பால் நோய் (Aids)” (இந்திய இலக்கியச் சிற்பிகள் - வ.சுப.மாணிக்கம், ப.43). இவற்றை ‘வ.சுப.மாணிக்கனார் சொல்லாக்கங்கள்’ என்னும் நூலுக்கு வழங்கிய பாராட்டுரையிலும் இவர் கூறியிருப்பது இணைத்து எண்ணத்தக்கது. வ.சுப.மா. தனது நூலின் பல இடங்களிலும் மற்றவர்கள் பெரிதும் கையாளாத சொற்களைக் கையாண்டு தனது தனித்துவத்தை நிலைநிறுத்துகின்றார். “சொற்பொழிந்தேன், வானொலிக்கின்றேன், பழமொழிகின்றோம், அட்டவணைப்பர், நன்றியன், விருப்பன், ஈடுபாடன், இலக்கியர், காப்பியர், இலக்கணர், தமிழ் வளர்ப்பிகள், இலக்கியப் படிப்பிகள், கல்வித் திட்டங்கள், பாடம் அமைப்பிகள், மாறுவேடி, நம்பிக்கைக் கேடி, அறிவு நாடிகள், நாட்டு நாடி, நாட்டுக் கேடிகள், தமிழ்மை, தமிழ் மன்னாயம், மக்கட் குழுவாயம், அணிய நாடுகள், சால்பியம், புரட்சியம், பொதுனியம், மக்களியம், ஒப்பியம், படைப்பியம், தமிழியம், உயிரியம், பண்டிதமணியம், கண்ணதாசம், இளங்கோவம் - சொல்லாக்கத் துறையில் வ.சுப.மா.வின் பங்களிப்புகள் இவை” (மேலது, ப.43). இவ்வாறு பலதரப்பட்ட சொல்லாக்கங்களை வ.சுப.மா. உருவாக்கியுள்ளார். தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர் ஆகியோரையும், அவர்களது நூல்களையும் தனக்கேயுரிய தனித்துவ மொழியில் வ.சுப.மா. சிறப்பித்துள்ளார். இச்செய்திகளையே இக்கட்டுரை கவனப்படுத்துகின்றது.

தொல்காப்பியத்தினைத் தமிழின் முதல் நூல் என்றும் தொல்காப்பியரைத் தமிழ் முதல்வன் (சங்கநெறி, ப.13) என்றும் சிறப்பிக்கின்றார். இவற்றோடு தொல்காப்பியத்தின் காலத்தைப் பற்றியும் இவர் குறிப்பிடத் தவறவில்லை. தமிழரின்

வாழ்வியலைச் சிறப்பிக்கின்ற சங்க நூல்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றியவை. ஆனால் தொல்காப்பியமோ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று தொல்காப்பியத்தின் காலத்தை வரையறுக்கின்றார் (தொல்காப்பியப் புதுமை, ப.9). மேலும் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நூலாகும். தமிழ் மக்களின் உலக வழக்கையும் செய்யுள்; நெறியையும் திறம்பட ஆராய்ந்து எழுதிய நாட்டு நூலாகும் என்றும் குறிப்பிடுகின்றார் (மேலது, ப.10). தொல்காப்பியம் மொழிக்கான இலக்கணமாக மட்டுமல்லாமல் தமிழரின் வாழ்வியலை வரையறுத்துக் கூறும் இலக்கணமாகவும் திகழ்கிறது என்கிறார் வ.சுப.மா.

தொல்காப்பியத்தைப் போலவே சங்கப் பாடல்களையும் அவற்றைப் பாடிய புலவர்களையும் வ.சுப.மா. புகழ்ந்துரைக்கின்றார். சங்க இலக்கியங்களைத் தமிழ் தேசியவிலக்கியங்கள், நாகரிக மறைகள், மக்கட் பண்பிலக்கியங்கள் (சங்க நெறி, ப.viii), சங்கத் தொகை நூல்கள் (மேலது, ப.25), தொகையிலக்கியங்கள், பதிவிலக்கியங்கள் (மேலது, ப.64) என்று குறிப்பிடுகின்றார். அதுபோல் சங்கப் புலவர்களைச் சங்கப் புலமைச் சான்றோர்கள் என்று சிறப்பிக்கின்றார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் உள்ள அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை, திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களினையும் இவர் சிறப்பாகப் போற்றிக் கொண்டாடுகின்றார். இயற்கைச் சூழ்நிலையில் வாழும் விலங்குகளுக்கும் மரஞ்செடி கொடிகளுக்கும் மனிதனைப் போலவே அன்பும் அறிவும் உண்டு என்பதைச் சுட்டி, அகநானூற்றின் காலத்தை இயற்கை யறிவுக் காலம் (மேலது, ப.26) என்று பதிவுசெய்கிறார். புறநானூற்றில் உள்ள ஒவ்வொரு பாடல்களும் பண்டைய வரலாற்றாய்வுக்கு உதவும் கல்வெட்டு (மேலது, ப.64) சான்று என்றும் கூறுகின்றார். இதுமட்டுமல்லாமல் பத்து சேர மன்னர்களின் மீது பத்துப் புலவர்கள் பாடிய பதிற்றுப்பத்தினை வரலாற்றிலக்கியம், செய்கையிலக்கியம் எனப் புகழ்கிறார். இவற்றோடு சங்க காலத்தில் சோழ, பாண்டியர்களுக்கு எனத் தனி இலக்கியங்கள் படைக்கப்படவில்லை. சேரர்களுக்குரிய தனி இலக்கியமாகப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது. இக்காரணத்தால் பதிற்றுப்பத்தைக் குல வரலாற்று நூல் என்று போற்றுகின்றார் (மேலது, ப.102). ஐங்குறுநூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகியன தனிப்பாடல்கள் அல்ல. ஓர் ஆசிரியன் ஒருபொருள் மேல் திட்டமிட்டு பாடிய தொடர்பாடல்கள். எனவே இவற்றைத் தொகைப் போலிகள் என்றும் சொல்லலாம் (மேலது, ப.203). மேலும் பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படையின்

சிறப்பைப் பற்றித் தனியே குறித்துள்ளார். 'வேறு எக்கடவுளுக்கும் அமையாத நிலையில் திருமுருகாற்றுப்படை என்ற தனிநெடும்பாட்டு தொகை நூலில் இடம்பெற்றிருப்பதும் முருகவேளின் சிறப்பு நிலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்' (மேலது, ப.149).

தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய நூல்களின் வரிசையில் இவர் திருக்குறளையும் திருவள்ளுவரையும் கம்பரையும் வைக்கின்றார். மனிதனாகப் பிறந்த இப்பிறப்பில் தமிழ் மொழியின் ஒரு பனுவலைக் கூட கற்காமல் வாழ்நாளை கழிப்பவர்களைத் தமிழ்ப் போலியன் என்று சாடுகின்றார். இவ்வாறு வாழாமல் பெருந்தமிழ்ப் புலவர் (மேலது, ப.60), உலகப் புலவர் (தொல்காப்பியப் புதுமை, ப.46) என்று சிறப்பிக்கப்படும் திருவள்ளுவரின் திருக்குறளையாவது கற்று அதன்படி நடக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்துகின்றார். 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பதைப்போல் காப்பியத்திற் பெரியவர் கம்பர் (கம்பர், ப.106) என்று புகழ்கின்றார். கம்பராமாயண உருவாக்கத்தையும் அதன் பெயர்க்காரணத்தையும் இவர் பதிவுசெய்யத் தவறவில்லை. இதோடு கம்பராமாயணத்திற்கு ஒரு புதிய பெயரினையும் வழங்குகின்றார். 'வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவி தமிழில் கம்பர் படைத்ததால் கம்பராமாயணம் என்று வழங்கப்படுகின்றது. இது மொழிபெயர்ப்பு நிலையில் அமைந்தாலும் கூட தமிழ் மரபு மாறாமல் படைக்கப்பட்டிருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்றோ. எனினும் கம்பரின் கம்பராமாயணத்தை மொழிபிறப்புக் காப்பியம்' என்னும் புதிய பெயரால் வ.சுப.மா. அழைக்கின்றார் (கம்பர், ப.58).

இவ்வாறு தமிழின் தலைசிறந்த நூல்களையும் புலவர்களையும் வ.சுப.மா. தனது சொல்லாக்கங்களால் விதந்துரைக்கின்றார்.

தொகுப்புரை

- செவ்வியல் தன்மை கொண்ட தமிழ்மொழிக்குக் காலந்தோறும் பல புதிய சொல்லாக்கங்கள் தேவை. இத்துறையின் தேவையை முன்னிட்டே தமிழ்மொழியின் படைப்பாளர்களும், எழுத்தாளர்களும் அவ்வப்போது புதிய சொல்லாக்கங்களை உருவாக்கி வந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க தனிப்பெரும் ஆளுமையாக வ.சுப.மா.வைக் கருத முடியும். தமிழின் பல்வேறு துறை சார்ந்த சொற்களை இவர் உருவாக்கியுள்ளார்.

- வ.சுப.மா. பெற்றிருந்த இலக்கண இலக்கியப் புலமையின் தனித்துவத்தை அவரது புதிய சொல்லாக்கங்கள் உணர்த்துகின்றன. நவீனக் கால மாற்றத்திற்கேற்பவும் அறிவியல் வளர்ச்சிக்கேற்பவும் மக்களின் வாழ்விற்குப் பயன்படும் வகையில் வ.சுப.மா.வின் சொல்லாக்கங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக இங்கு எடுத்துக்காட்டி விளக்கப்பட்ட சொல்லாக்கங்களில் நிறுவனம் சார்ந்து பயன்படுத்தப்படும் சொற்கள் மக்களிடையே இன்றும் புழக்கத்தில் இருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. அதுபோல் அறிவியல் துறை சார்ந்து இவர் ஆக்கிய சொல்லாக்கங்கள் அத்துறையில் பயன்படுத்தப்பட்டு வருவதையும் பார்க்க முடிகின்றது. இச்சொல்லாக்கங்களைத் தேவை கருதி உருவாக்கப்பட்டவை எனலாம்.
- வ.சுப.மா.வின் சொல்லாக்கங்கள் மரபில் இருந்து மாறுபட்டு அமையாமல் மரபோடு பொருந்தி அமைவதும் கருதத்தக்கது. அந்த வகையில் தனக்கு முந்தைய சான்றோர்கள் உருவாக்கிய சொற்கலையாக்கத்தின் தொடர்ச்சியில் புதிய சொற்களை வ.சுப.மா. படைத்து அளித்துள்ளார்.
- தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், கம்பராமாயணம் முதலிய நூல்கள் மீது இவர் கொண்டிருந்த ஈடு இணையில்லாப் பற்றினை, அந்நூல்கள் குறித்தும், அவற்றின் புலவர்கள் குறித்தும் இவர் புகழ்ந்துரைத்துள்ள சொல்லாக்கங்களின்வழி உணர்ந்து கொள்ள முடிகின்றது.
- வ.சுப.மாவின் சொல்லாக்கங்களை ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்குகையில் அவை சமூக வழக்கு, இலக்கிய வழக்கு, கலைச்சொல் உருவாக்கம் எனப் பலநிலைகளுக்கு முன்னோடித் தன்மை கொண்டனவாக உள்ளன.

துணைநூற் பட்டியல்

1. மாணிக்கம் வ.சுப., *இலக்கியச் சாறு*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், தொகை முதற்பதிப்பு, 1987.
2. மாணிக்கம் வ.சுப., *கம்பர்*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், திருந்திய பதிப்பு, 1987.
3. மாணிக்கம் வ.சுப., *காப்பியப் பார்வை*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1987.

4. மாணிக்கம் வ.சுப., *சங்க நெறி*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1987.
5. மாணிக்கம் வ.சுப., *தமிழ்க் காதல்*, பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1962.
6. மாணிக்கம் வ.சுப., *தொல்காப்பியப் புதுமை*, பேகன் பதிப்பகம், காரைக்குடி, மூன்றாம் பதிப்பு, 1967.
7. முத்துவீரப்பன் பழ., *வ.சுப.மாணிக்கனாரின் சொல்லாக்கங்கள்*, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, 1988.
8. மோகன் இரா., *இந்திய இலக்கியச் சிற்பிகள் - வ.சுப.மாணிக்கம்*, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, இரண்டாம் பதிப்பு, 2007.

மதிப்பிடப்பெற்றது

வ.சுப.மாணிக்கனாரின் தொல்காப்பிய உரைநெறிகள்

முனைவர் **ஆ.மணி**,
துணைப்பேராசிரியர் - தமிழ், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி,
புதுச்சேரி — 605 003, பேச: 9443927141, மின்னஞ்சல்: manikurunthogai@gmail.com

உரைக்களம்

திருக்குறளுக்கு அடுத்தநிலையில் மிகுதியான உரைகளையும், பதிப்புக்களையும் கொண்ட நூல் தொல்காப்பியம். தமிழின் முதல்நூல் என வ.சுப.மாணிக்கனாரால் புகழ்ந்துரைக்கப்பட்ட தொல்காப்பியம், அவராலேயே உரை செய்யப்பட்ட பெருமைக்கும் உரியது. அவ்வுரைக்கண் இடம்பெற்றுள்ள உரைநெறிகளை மாதிரி அணுகுமுறையில் எடுத்துரைப்பது இம்முயற்சியின் நிலைக்களம் ஆகும். இவ்ஆய்வுரைக்குத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் – நூன்மரபும் மொழிமரபும் – மாணிக்கவுரை அடிப்படையாகும். உரைநெறி பற்றிய நூல்களும், கட்டுரைகளும் இம்முயற்சிக்குத் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

மாணிக்கவுரை அறிமுகம்

தமிழ்ப் பல்கலைக்கழக வல்லுநர் குழுவின் தலைவராகப் பணியாற்றிய வ.சுப.மாணிக்கனார் பல்கலைக்கழக அமைப்பினை உருவாக்கித் தந்தவர். மேலும், அப்பல்கலைக்கழகத்தின் தொல்காப்பியப் புலத்தகைமை ஆய்வுக்கட்டிலில் முதல் தகைஞராகவும் பணி செய்தவர். அப்பணிக்காலத்தில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும் மாணிக்கவுரை என்னும் உரைநூலை எழுதினார் எனச் ச.அகத்தியலிங்கம் எழுதிய அணிந்துரை கூறுகின்றது (வ.சுப.மாணிக்கம் 1989: ப.எ.இ.). எனினும், அவ்வுரை மாணிக்கனாரின் மறைவுக்குப் பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழக 120ஆம் வெளியீடாக 1989 அக்டோபர்த் திங்களில் (திருவள்ளுவர் ஆண்டு 2020 புரட்டாசித் திங்கள்) முதற்பதிப்பாக 22 ரூபாய் விலையில் வந்துள்ளது. அண்மைக்காலமாக 'ஐ.எஸ்.பி.என்.' என்ற பன்னாட்டுப் புத்தகத் தர எண் (பன்னாட்டுத் தரப்புத்தக எண் என மொழியாக்கமும் உண்டு எனினும், முற்கண்டவாறு வழங்குவது இயைபுடையதாகத் தோன்றுகின்றது) பற்றிய கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுவதையும், நூலாசிரியர்களும் கட்டுரையாசிரியர்களும் தவிப்பதையும் காண்கின்றோம். ஆனால், 27 ஆண்டுகளுக்கு முன்னரே மாணிக்கனாரின்

தொல்காப்பிய உரை ஐ.எஸ்.பி.என். (81–7090–143–X) எண்ணுடன் வெளிவந்துள்ளமை குறிக்கத்தக்கது.

மாணிக்கவுரைக்கு எழுதிய உரைப்பாயிரத்தில், “தொல்காப்பிய நினைவும் தொல்காப்பியக் கருத்தறிவும் பெறுதல் தமிழன் என்பான் ஒவ்வொருவனின் பிறப்புக் கடமையாகும்” என வ.சுப.மாணிக்கனார் (1989:II) முழங்குகின்றார். இளம்பூரணம், பேராசிரியம் என்னுமாப்போலத் தம் உரை மாணிக்கம் எனப் பெயர் பெறும் என்கின்றார். தொல்காப்பிய முழுமைக்கும் உரைசெய் நோக்கமும் உரைக்குறிப்புக்களும் உளவெனினும் காலப்பதம் பார்த்து முதற்கண் எழுத்ததிகாரத்துக்கு மாணிக்கவுரை எழுதியிருக்கின்றேன்” (வ.சுப.மாணிக்கம் 1989:III) என்ற அவர்தம் கருத்து குறிக்கத்தக்கது. அவருரை தொல்காப்பிய முழுமைக்கும் எழுதப்படவில்லையே என்ற ஏக்கம் நமக்குள் இருந்தாலும், அவரால் எழுதப்பட்ட தொல்காப்பிய உரைக் குறிப்புக்களாவது அச்சுருக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்தம் கால்வழியினர் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

தொல்காப்பிய உரைக்கண் தாம் மேற்கொண்ட உரைநயங்களைப் பற்றிய விரிவான குறிப்புக்களும் உரைப்பாயிரத்தின்கண் மாணிக்கனாரால் தரப்பட்டுள்ளமை குறிக்கத்தக்கது. ஒவ்வொரு உரைக்கூறும் இன்னின்ன நோக்கங்களோடு தரப்பட்டுள்ளது என்பதை இப்பகுதியில் மாணிக்கனார் விளக்கியுள்ளார். சான்று:

“இயல் முன்னுரை

இஃது இயலுக்கு ஒரு சிறிய முன்னுரையாகும். இயல்தோறும் வரும் இலக்கணக் கருத்துக்களின் சிறப்புக்களைப் புலப்படுத்தும். இன்றும் மக்கள் நடைமுறையில் இருக்கும் வழக்குகளோடு பொருத்திக் காட்டும். இதனால் கற்பவர்க்குத் தமிழிலக்கண நன்மரபுகள் தெரியவரும். இலக்கணக் காப்பில் அவர்கட்குப் பற்றும் பயிற்சியும் உண்டாகும்” (வ.சுப.மாணிக்கம் 1989:III).

மாணிக்கனாரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில இவ்வுரைப் பாயிரத்தின்கண் கூறப்பட்டுள்ளன. அவை கற்போருக்கும் உரையாசிரியருக்குமிடையிலான உறவுக்குப் பாலம் அமைப்பன எனலாம். “மக்களின் தமிழ்ப்பிடியும் தமிழ்த்தரமும் தொல்காப்பியவுணர்வுமே என் உரை நோக்கம்” (வ.சுப.மாணிக்கம் 1989:VI) எனத் தம் உரை நோக்கத்தைப் புலப்படுத்துகின்றார் மாணிக்கனார். பனம்பாரனார் எழுதிய

பதினைந்து அடிகளுடைய சிறப்புப் பாயிரத்தின் மாணிக்கவுரை 16 பக்க அளவில் அமைந்திருப்பதிலிருந்தே அவ்வுரையின் இயல்பினை நாம் அறியலாம். தம்முடைய உரைக்கூறுகள் இன்னவை என மாணிக்கனாரே எடுத்துக்காட்டியுள்ளமையால், இந்த ஆய்வுரை உரைக்கூறுகளின்கண் இடம்பெற்றுள்ள உரைநெறிகளில் சிலவற்றை விளக்க முற்படுகின்றது. இனி, அவற்றைக் காணலாம்.

மாணிக்கவுரை – உரைநெறிகள்

மாணிக்கவுரைக்கண் 1.இயல் முன்னுரை, 2.இயற்கருத்து, 3.அகலவுரை, 4.வழக்கு, 5.திறனுரை, 6.இயல் முடிவுரை ஆகிய ஆறு கூறுகளை மாணிக்கனார் மொழிந்துள்ளார். இக்கூறுகள், அனைத்து நூற்பாக்களின் உரைகளின்கண்ணும் இடம்பெறவில்லை. நூற்பா உரைப்பகுதிகளின்கண் 1.நூற்பாத் தலைப்பு, 2.நூற்பா, 3.நூற்பாக் கருத்து, 4.அகலவுரை, 5.திறனுரை ஆகிய ஐந்து உரைக்கூறுகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. அவற்றின்கண் காணலாகும் உரைநெறிகளில் குறிக்கத்தகுந்தவற்றுள் சில இவ்வுரைக்கண் விளக்கப்பெற்றுள்ளன.

நூற்பாக்களுக்குத் தலைப்பிடுதல்

தொல்காப்பிய நூற்பாக்கள் காலத் தொன்மையுடையன. இன்றைய தமிழ்நடை மட்டுமே அறிந்தாரும் எளிதில் கற்றுணரும் வகையில் அமைந்திருப்பது இந்நூற்பாக்களின் தனித்தன்மையாகும். இவ்வுண்மையை “தொல்காப்பிய நூற்பாக்கள் பழகு தமிழ்ச்சொற்கள் கொண்டவை; தடங்கலின்றிப் படிப்பதற்கு உரிய இன்னோசையுடையவை; இவறல் இல்லாச் சொல்வளம் நிறைந்தவை; இடுக்கு முடக்கற்ற தொடரோட்டம் வாய்ந்தவை. ஈறாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குப் பின்னும் இத்தொன்னூல் ஓரளவு தமிழ் கற்றோர்க்கும் விளங்கி வருவதற்குக் காரணம் நூற்பா அமைப்பேயாகும். பார்த்தவுடன் உருவத்தைக் கண்ணாடி பளிச்சென்று காட்டிவிடுவதுபோல், படித்தவுடன் நூற்பாவின் பொருள் விளங்கிவிடவேண்டும் என்ற நல்லியல்பைக் கடைபிடித்து எழுதியவர் தொல்காப்பியர்” (வ.சுப.மாணிக்கம் 1989[1]:30*) என வரும் மாணிக்கத் தொடர்கள் உணர்த்துகின்றன. எளிய தொடர்களில் தொல்காப்பிய நூற்பாக்கள் அமைந்தபோதிலும், அந்நூற்பாக் கருத்துக்களுக்கு ஏற்பத் தலைப்புகள் தரப்படும்போது நூற்பாக் கருத்து மேலும் எளிதாகச் சென்று சேரும் என்ற கருத்து பதிப்பாசிரியர்களுக்கும் உரையாசிரியர்களுக்கும் இருப்பதனால், பதிப்புக்கள்தோறும் நூற்பாக்கள் தலைப்புக்களைப் பெற்றுள்ளன. இவ்வகையில்,

மாணிக்கவுரையும் தலைப்புக்களைப் பெற்றுள்ளநிலையைக் காணமுடிகின்றது. நூன்மரபின் முதல் நூற்பாவின் தலைப்பு" தமிழுக்கு எழுத்து முப்பது" (வ.சுப.மாணிக்கம் 1989:20) என்பதாகும். "முதலெழுத்துக்களின் பெயரும் எண்ணிக்கையும்" (தமிழண்ணல் 1993:20; 2008:7) எனத் தமிழண்ணலும், "எழுத்துக்களின் பெயர்" என்ற சொ.சிங்காரவேலனும் (2005:3) ஆளுவதைவிட மாணிக்கனார் தரும் தலைப்பு ஐயங்களுக்கு இடமில்லாமல், தமிழுக்கு எழுத்து இவ்வளவே எனத் தெரிவிக்கும் வகையில் பொருத்தமுடையதாக அமைவது நினையத்தக்கது.

அகலவுரை என்னும் பெயரிய புதுமரபு

தொல்காப்பியர் காண்டிகை (தொல்.மரபி.103, 104), உரை (தொல்.மரபி.105, 106) என இருவகை உரைகளைச் சுட்டுவர். உரை எனத் தொல்காப்பியர் கூறுவதைப் பிற்காலத்துப்போல விருத்தியுரை எனக் கருதலாம்.

இறையனார் களவியல் உரையாசிரியர் 1.கருத்துரைத்துக் கண்ணழித்தல், 2.பொழிப்புத் திரட்டல், 3.அகலம் கூறல் ஆகிய மூவகை உரைகளைச் சுட்டியுள்ளார் (ச.பவானந்தம் பிள்ளை 1916:ககூ). யாப்பருங்கல விருத்தியுரைகாரர் பொழிப்பு, அகலம், நுட்பம் என்ற மூவகைகளைக் கூறியுள்ளார் (மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை 1960:8). நன்னூலார் காண்டிகை, விருத்தி (நன்.4) என இருவகை உரைகளைக் குறிப்பிட்டு அவற்றின் இலக்கணத்தையும் கூறியுள்ளார் (நன்.21, 22, 23).

உரையாவது பதினான்னு வகையான் உரைக்கப்படும் என்று கூறியுள்ள நன்னூல் விருத்தியுரைகாரர், அப்பதினான்கனுள் கருத்துரை, பதப்பொருள், உதாரணம் ஆகிய மூன்றோடு வினா, விடை ஆகிய இரண்டையும் சேர்த்து உரைப்பது காண்டிகை உரை என்றும், நூற்பாப் பொருளுக்கு இன்றியமையாத அனைத்தும் விளங்குமாறு கூறும் உரையாலும், ஆசிரிய வசனங்களாலும் காண்டிகைக்குரிய ஐந்து உறுப்புக்களாலும் ஐயம் தீரச் சுருக்காது விரித்து உரைப்பது விருத்தியுரை என்றும், உரைக்குக் கூறிய பதினான்கு உறுப்புக்களும் கொண்டது விருத்தியுரை என்றும் கூறுவர் (அ.தாமோதரன் 1999:131-132). இவை தமிழ் உரைகள் அனைத்தையும் மனங்கொண்டு கூறப்படுபவை என்பது தெளிவு. ஒரு நூற்பா / பாடலுக்குக் கூறப்படும் உரையைப் பொருத்தவரையில், அந்நூற்பா / பாடலின் பொருளைத் தெளிவுறுத்தும் பொழிப்புரை, பதவுரை ஆகிய இரண்டனுள் ஒன்றைத் தருவதே உரையாசிரியர்தம் மரபாகும். இம்மரபுக்கு மாறாக மாணிக்கவுரை அகலவுரை என்னும் உரைநிலையைக் கையாண்டு புதுமை படைத்துள்ளார். எனினும், அகலவுரைக்கண் பொழிப்புரையும், விளக்கவுரையும் இணைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

அகலவுரைக்கண் "நூற்பாவிற்குப் பெரும்பாலும் சொல்லுக்குச் சொல் கிடந்தாங்கு சொல்லுரை எழுதவில்லை. கற்பவர் விளங்கிக் கொள்ளுமாறு வேண்டும்

விளக்கஞ் சேர்த்து விரிவுரையாக அமையும்” (வ.சுப.மாணிக்கம் 1989:III) என்ற மாணிக்கனாரின் கருத்து அகலவுரைக்கண் இடம்பெற்றுள்ள உரைக்கூறுகளை விளக்கியுள்ளது. இது மெய்யே என்பதை “தமிழ்மொழிக்கு அடிப்படை முதலெழுத்து என்று வழிவழிச் சொல்லப்படுபவை முப்பது. இவை அகரம் தொடங்கி னகரவிறுதியாகும். சார்பெழுத்து என்று அடுத்த நூற்பாவில் கூறப்படும் மூன்றும் இவற்றோடு சேரா. முதலெழுத்தாகா; முதலெழுத்து வரிசையில் எண்ணப்படா என்பது கருத்து. மூன்றலங்கடை – மூன்று அல்லாதவிடத்து. அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ; க் ங் ச் ஞ் ட் ந் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ந் – இவை இக்கால வடிவன்கள்” (வ.சுப.மாணிக்கம் 1989:20) என வரும் உரைப்பகுதி காட்டுகின்றது.

தம்கால வழக்கினை ஒப்பிட்டுரைத்தல்

தொல்காப்பியம் மூவாயிரமாண்டுத் தொன்மையுடைய தமிழ் முதல் நூல் என்பது மாணிக்கனார் துணிபுரை. அந்நூலின்கண் கூறப்பெற்றுள்ள கருத்துக்களை விளக்குமாற்றால் சமகாலச் செய்திகளைக் கூறும்போது, அக்கருத்துக்கள் உரை எழுதப்பெறும் காலத்தைய மக்களுக்கு மிகச் சரியாகச் சென்று சேர வாய்ப்புள்ளது. எனவே, உரையாசிரியன்மர் தாம் வாழும் காலத்தின் நிகழ்வுகள் / கருத்துக்களைத் தம் உரையிடையே எடுத்துரைக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டுள்ளனர். பழந்தமிழ் உரைகளில் அழுந்திய மாணிக்கனார் உரையிலும் இக்கூறு இடம்பெற்றுள்ளமை வியப்புக்குரியதன்று.

சான்று வருமாறு: “ஒரு நாட்டின் அரசியலமைப்பினை வகுக்குநர் அந்நாட்டிற்கு உட்பட்ட நான்கெல்லைகளையும் முதற்கண் சுட்டிக்காட்டுவர். அதனால் விதிகளின் ஆட்சிக்கோடுகள் தெளிவாகும். விடுதலைபெற்ற நம் பாரதவமைப்பினைக் காண்க. இந்நன்முறை தமிழ்ப்பாயிரத்தில் பண்டே உண்டு. பதிவு செய்த திருமணம் போல அரங்கேற்றம் இசைவுமுத்திரை என்ப. ஒரு நூலைப் புலவரவை ஒப்புக் கொள்வது என்பது அறிவுலக முறையாகும். இது குடியரசு போன்றது. மக்கள் கற்பதற்குத் தக்க நூல் என்ற மதிப்பு விளம்பரம் இதனாற் கிடைக்கும். இன்று திரைப்படங்கள்கூடத் தணிக்கை முத்திரை பெற்ற பின் காட்சிக்கு வரக் காண்கின்றோம். இவ்வரன்முறை தொல்காப்பியக் காலத்திலேயே உண்டு என்பது தமிழ் மரபின் சிறப்பைக் காட்டும்” (வ.சுப.மாணிக்கம் 1989:1). இதனைவிடத் தெளிவாகப் பாயிரத்தின்கண் கூறப்பெறும்

நாட்டெல்லை, அரங்கேற்றம் முதலியவற்றை இக்காலத் தமிழர்களுக்கு விளக்கிவிட முடியும் எனத் தோன்றவில்லை.

வினா – விடை முறை

உரையாசிரியர்தம் கருத்துக்களை விளக்கும்போது வினா - விடை முறையைக் கையாண்டு எழுதிச் செல்வதுண்டு. பழந்தமிழ் உரையாசிரியன்மர் ஒருக்கால், மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் பணியையும் மேற்கொண்டிருந்த காரணத்தால், வினா - விடை முறை அவர்தம் உரைகளிலும் புகுந்து நிலைபெற்றது எனக் கருதுப. மாணிக்கனார் கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியராக விளங்கியவராதலால், அவர்தம் உரையில் இக்கூறு இடம்பெறுவது இயல்பானதாகும். வினா – விடை முறையைக் கையாளுமிடங்களில் பான்மையும் ஒரு வினா, வினா எனச் சுட்டுவது மாணிக்கவுரை வழக்கமாகும். சான்று ஒன்று தருகுவன்:

”ஒரு வினா: குற்றெழுத்து ஐந்தாக நெட்டெழுத்து ஏழு வரலாமா? உயிர் பன்னிரண்டாக மெய் பதினெட்டாக வரலாமா?.

நன்றாக வரலாம். குறிலிலிருந்து நெடில் பிறப்பதில்லை; உயிருக்கும் மெய்க்கும் ஒத்த தொடர்பில்லை. எல்லாம் பொருண்மையாற்றலால் தனித்தனிப் பிறப்பானவை.” (வ.சுப.மாணிக்கம் 1989:27).

சிலவிடங்களில் இவ்வாறு வினா என்ற குறிப்பு இல்லாமலும் இவ்வுரைநெறி இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. சான்று வருமாறு: “மெய் என்பதன் பெயர்க்காரணம் யாது? உள்ளிருந்து வருங்காற்று நா அண்ணம் பல் இதழ் மூக்கு முதலான உறுப்புக்களின் தசைப்பகுதியோடு தசைப்பகுதி தொட ஒலி பிறத்தலின் மெய் எனப்படும். அதனாற்றான் ஒற்று என்ற குறியும் மெய்க்கு உண்டு” (வ.சுப.மாணிக்கம் 1989:34).

விடை முறைக் கருத்துக்களைத் தருதல்

வினாக் கேட்டு விடை தருவது என்ற நிலையிலிருந்து ஒரு படி மேற்சென்று வினாக் கேளாமலேயே விடையை எழுதிச் செல்கின்ற பாங்கினையும் மாணிக்கவுரையில் காணமுடிகின்றது. கற்போன் மனத்தில் எழக்கூடிய வினாக்களைச் சிந்தித்து விடையளிக்கின்ற மாணிக்கவுரை கற்போனின் உள்ளப்போக்கினை மிகத் தெளிவாக அறிந்துள்ள ஒரு உரை என்பதற்குப் பின்வரும் பகுதி சான்றாகும்.

”பாயிரம் நூலாசிரியனுக்காக எழுதப்படுவதில்லை; நூலைக் கற்போரை வழிநடத்துவதற்காக எழுதப்படுவது. இது கருதியே நூல் முற்றுப் பெற்ற பின் செய்யப்படுவது பாயிரமாயினும், நூலுக்கு முன் வைக்கப்படும் என்று அறிக” (வ.சுப.மாணிக்கம் 1989:1).

பாயிரம் யாருக்காக எழுதப்படுகின்றது?, கற்போர் பாயிரத்தைப் படிப்பதால் கிட்டும் பயன் என்ன?, பாயிரம் நூல் எழுதப்படும் முன்னர் எழுதப்படுவதா? அல்லது பின்னர் எழுதப்படுவதா?, நூல் எழுதிய பின்னர்ச் செய்யப்பட்ட பாயிரம் நூல் தொடங்கும் முன்னர் வைக்கப்படுவது ஏன்? ஆகிய வினாக்கள் மேற்கண்ட உரைப்பகுதியைக் காணும்போது நமக்குள் எழுவதை உணரமுடிகின்றது.

உவமை விளக்கம்

”ஒலியன் சிறுபான்மை தனியாகவும் பெரும்பான்மை எழுத்துக்கள் தொடர்ந்தும் பொருளை நேரடியாகக் குறிக்கும்போது சொல் அல்லது மொழி எனப்படும். எழுத்துக்கும் சொல்லுக்கும் உரிய தொடர்பு குருதியோட்டமும் நீட்டமும் ஒக்கும்” (வ.சுப.மாணிக்கம் 1989:89) என்னுமாப்போல ஒரு கருத்தினை விளக்கம் உவமைகளை ஆளும் மரபினை மாணிக்கவுரைக்கண் காண்கின்றோம். இவ்வகை விளக்கங்கள் அவருரைக்கண் பரக்கக் காணப்பெறும் ஒரு கூறாகும்.

சான்று காட்டல்

உரையாசிரியர்தம் அடிப்படைப் பண்பெனவே சொல்லத்தகும் ஒரு உரைநெறியாக இலங்குவது சான்று காட்டும் மரபாகும். இதனை மேற்கோள், வரலாறு, உதாரணம், காட்டு என்றெல்லாம் கூறுவது வழக்கம். இம்மரபுநெறி மாணிக்கனார் உரைக்கண்ணும் பெருவழக்குடைய ஒன்றாகவே திகழ்கின்றது என்பதனைக் காணமுடிகின்றது. சான்று காட்டுமிடங்களில் 1.இலக்கணச் சான்றுகள் தருதல், 2.இலக்கியச் சான்றுகள் தருதல், 3.பிற மொழிநூல், பிற துறைச் சான்றுகள் சுட்டுதல், 4.வழக்குநடைச் சான்றுகள் தருதல், 5.பல்வகைச் சான்றுகளை இணைத்துத் தருதல் ஆகிய நெறிகளைக் காணமுடிகின்றது. அவற்றைக் காட்டுக்களுடன் காண்போம்.

1. இலக்கணச் சான்றுகள் தருதல்

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கு உரையெழுதிய பெருமக்களுள் பலர் இலக்கண மேற்கோள்கள் தரும் வழக்கத்தைப் பரவலாகப்

போற்றியுள்ளனர். வைரத்தை வைரத்தால் அறுப்பது போல, ஓர் இலக்கணக் கருத்துக்கு மற்றொரு இலக்கணக் கருத்தைத் தருவதே பொருத்தமுடையதாகலாம் என்ற கருத்து அவ்வுரையாசிரியர்மாருக்கு இருந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. மாணிக்கவுரையிலும் இவ்வகை மேற்கோள்கள் பலவுள. இலக்கணச் சான்றுகளை 1.தொல்காப்பியத்திலிருந்தே சான்று தருதல், 2.பிற இலக்கண நூல்களிலிருந்து தருதல் என மேலும் வகைப்படுத்த இயலும்.

எந்தவொரு நூலாய்வுக்கும் உரிய சான்றுகளை அந்நூலுக்குள்ளிருந்தே தருவது சாலச் சிறந்தது. சான்றாகத் தொல்காப்பியம் குறித்த ஆய்வில் தொல்காப்பிய நூற்பாக்களில் இருந்தே சான்று நல்க வேண்டும். அகச் சான்றுகளே மெய்ம்மையை அறிவதற்குப் பெரிதும் பயன் நல்குவன என்ற கருத்துடைய மாணிக்கனார் (1989: 24) "ஆய்தம் என்பதனை 'ஆய்தல் உள்ளதன் நுணுக்கம்' என்ற உரியியலானும், 'நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்' என்ற செய்யுளியலானும் அறியலாம்" எனத் தொல்காப்பியச் சான்றுகள் தருவதால் அறியலாம்.

"ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய்யே என்று பவணந்தியார் இதனையே பின்பற்றுவார்" (வ.சுப.மாணிக்கம் 1989:46) என்னுமாப்போல பிற இலக்கண நூற்சான்றுகளைத் தருவதும் மாணிக்கவுரை இயல்பாம்.

2. இலக்கியச் சான்றுகள் தருதல்

தமிழ் மரபில் இலக்கியங்களே இலக்கண நூல்களின் அடிப்படைத் தரவுகளுள் குறிக்கத்தகுந்தவை. இவ்வுண்மையை,

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தி னின்று எடுபடும் இலக்கணம்"

- அகத்தியர் (மேற்கோள் மு.வை.அரவிந்தன்:128)

என வரும் மேற்கோளால் அறியலாம். எனவே, ஓரிலக்கண நூலுக்குச் சிறந்த சான்றாக நாம் இலக்கியங்களைக் கருதலாம். அதுவும், அந்த இலக்கண நூலுக்கு முற்காலத்தில் செய்யப்பட்ட இலக்கியங்களே தகுந்த சான்றுகளாகும் என்பதை மேற்கண்ட நூற்பா விளக்குகின்றது. இம்மரபுக்கு மாறாக, சங்க நூல்களுக்குப் பின்னர்ச் செய்யப்பட்ட

நம்பியகப்பொருள் முதலான சில இலக்கண நூல்கள் சங்கப் பாடல்களின் மரபுகள் அந்நூல்களில் போற்றப்பட்டுள்ளன என்று கூறுதற்கியலவில்லை. சான்றாக, "பூத்தமை சேடியிற் புரவலர்க் குணர்த்தலும்" (நம்பி.94) என்ற மரபுக்குச் சங்கப் பாக்களில் சான்றுமுண்டுகொல். இஃது போலும் நிலைகளுக்குக் காரணம் இன்னதென்பது தனித்த ஆய்வுக்குரித்து. நிற்க.

மாணிக்கனார் உரை இலக்கியச் சான்றுகள் பலவும் பொதுளிய புத்துரையாகும் என்பதற்கு அவ்வுரைக்கண் காணப்பெறும் இலக்கியச் சான்றுகளே அடிப்படைகளாகும். தாம் கூற விரும்பும் கருத்துக்களுக்கு இலக்கண, இலக்கியச் சான்றுகள் உண்டென்பதை எண்பிக்கவே உரையாசிரியன்மர் இவ்வகைச் சான்றுகளைத் தருகின்றனர். மாணிக்கவுரையும் இந்நிலையைப் பின்பற்றுகின்றது என்னும் கருத்துக்கு,

"உண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே

டொண்டொண்டொண் டென்னும் பறை

என்பது நாலடியார்" (வ.சுப.மாணிக்கம் 1989:106) என வரும் உரைப்பகுதி சான்றாகும். பழந்தமிழ் உரையாசிரியன்மர் சிலர் குறிப்பாக, நச்சினார்க்கினியர் இன்ன நூலிலிருந்து தாம் மேற்கோள் அல்லது சான்று தருகின்றோம் என்பதற்கான இடம் சுட்டுவதில்லை என்பர் அறிஞர். ஆனால், அண்மைக்கால உரையாசிரியர் பலர் தாம் தரும் மேற்கோள் அல்லது சான்று மூலக்குறிப்பினைத் தவறாமல் தந்து செல்லும் பண்புடையவர்களாகத் திகழ்வதைக் காணமுடிகின்றது. விதிவிலக்குகளும் இருக்கலாம். மாணிக்கவுரை சான்று மூலக்குறிப்புத் தருவதில் பெருங்கவனம் செலுத்தியுள்ளது எனினும், பாடலெண் சுட்டாமல் செல்லுவது குறிக்கத்தக்கது.

இலக்கியச் சான்றுகளைத் தருங்கால்,

"பண்டைக்காலத்துத் தமிழிசை வல்லுநர் தாமே பாட்டும் பாடி உடன் யாழும் மீட்டினர்.

'கோவலன் கையாழ் நீட்ட வவனும்

காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்

மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்'

என்ற சிலப்பதிகாரவடிகளும்,

'இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினாலோ

நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ'

என்ற சீவகசிந்தாமணியடிகளும்,

'மன்பெரும் பாண நாரும் மாமறை பாட வல்லார்

முன்பிருந் தியாழிற் கூடல் முதல்வரைப் பாடுகின்றார்'

என்ற திருத்தொண்டர் புராணவடிகளும் மிடறும் யாழும் இணைந்த தமிழிசை மரபை எண்பிக்கும்" (வ.சுப.மாணிக்கம் 1989:66–67) என்றவாறு அடுக்குச் சான்றுகள் காட்டலும்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்.

கொடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

ழா, தூ இவற்றை மேலும் ஒரு மாத்திரையளவு அப்படியே நீட்டிச் சொல்லுக; அர், உம் எனப் பிரித்துச் சொல்லற்க; பிரித்து எழுதற்க; அடுத்த வரிக்குக் கொண்டு செல்லற்க. இது கற்பிக்க வேண்டிய ஒலிநெறி" (வ.சுப.மாணிக்கம் 1989:30) என வருமாறுச் சான்றும், அச்சான்றினைக் கற்பிக்க வேண்டிய நெறிமுறைகளை எடுத்துரைத்தலும்,

'ஐயன்வெந் விடாத கொற்றத் தாவம் வந் தடைந்த தன்றே' என்ற வாலிவதைப்படலச் செய்யுளில் நகர வகர மயக்கம் புதிய வரவாகும்" (வ.சுப.மாணிக்கம் 1989:54) என்னுமாறு பிற்கால மாற்றங்களைச் சுட்டிக்காட்டலும் மாணிக்கவுரை பண்புகளாகும். இங்குக் காட்டியவற்றுள் சான்றினைக் கற்பிக்கும் நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் நிலை மாணிக்கவுரையின் தனித்தன்மை சான்ற நெறியாகும். பழையவுரைகளின்கண்ணோ, பிற புத்துரைகளின் கண்ணோ காணப்பெறாத ஒரு நெறியாக இதனைக் குறிக்கலாம்.

3. பிற மொழிநூல், பிற துறைச் சான்றுகள் சுட்டுதல்

உரையாசிரியர்கள் பன்மொழிப் புலமையாளர்கள் என்ற உண்மைக்கு அவர்தம் உரைகளே சான்றுகளாக இலங்கக் காண்கின்றோம். முற்கால உரையாசிரியர்களின் வடமொழிப் புலமை தமிழ் ஆய்வுலகம் அறிந்த ஒன்றே. அண்மைகால உரையாசிரியர்கள் வடமொழி மட்டுமல்லாது பிற மொழிச் சான்றுகளும் தரக்

காண்கின்றோம். அவ்வகையில் மாணிக்கவுரையிலும் பிறமொழிச் சான்றுகளைக் காணமுடிகின்றது.

"... புதிய கருத்துக்களை மரபுமுறையிற் படைத்துக் கொள்வதற்கும் இலக்கிய வுடமைகளைப் பேணிக் கொள்வதற்கும் பிற தாக்குதலால் மொழிக்குக் கேடு வராது காத்துக்கொள்வதற்கும் விதிமீறல்களைக் களைந்துகொள்வதற்கும் இலக்கண வரன் வேண்டும் எனவும், இலக்கணமில்லா மொழி அரசில்லா நாடு ஒக்கும் எனவும், கேரள பாணினீய ஆசிரியர் அரச வருமன் சாற்றிய பொன்மொழி தொல்காப்பியத்துக்குச் செவ்வன் பொருந்தும்" (வ.சுப.மாணிக்கம் 1989:58–59).

"செய்யுளிடத்து எழுத்துக்கள் பெறும் மாத்திரை யளவுரைக்கும் இலக்கணம் இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் பொதுவாம் என்பர் யாழ் நூல் எனப்படும் தமிழ் வாழ் நூல் கண் அடிகள் விபுலானந்தர்" (வ.சுப.மாணிக்கம் 1989:65) என்றவாறு பிற துறைநூற் சான்றுகள் தருதலும் மாணிக்கவுரை இயல்பாம்.

4. வழக்குநடைச் சான்றுகள் தருதல்

தொல்காப்பியர்,

"வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணி" (வ.சுப.மாணிக்கம் 1989:3-4)

நூல் செய்தவராதலின், அம்மரபுக்கு ஏற்பவே உரையாசிரியர்களும் தத்தம் உரைகளில் இலக்கிய மேற்கோள்கள் மட்டுமல்லாது வழக்கு மேற்கோள்களும் தந்துபோயினர். தொல்காப்பிய இளம்பூரணர் உரையில் இடம்பெற்றுள்ள மேற்கோள்களைத் தொகுத்துள்ள இக்கட்டுரையாளர் தம் கருத்து இவண் குறிக்கத்தக்கது. "தொல்காப்பிய உரைமேற்கோள்களாக 3754 மேற்கோள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், இலக்கண மேற்கோள்களின் எண்ணிக்கை 345 ஆகும். இலக்கிய மேற்கோள்களின் எண்ணிக்கை 1183 ஆகும். வழக்கு மேற்கோள்களின் எண்ணிக்கை 1767 ஆகும்" (ஆ.மணி 2016:791). இதன்மூலம், தொல்காப்பிய இளம்பூரண உரைமேற்கோள்களில் வழக்கு மேற்கோள்களே ஆதிக்கம் பெற்றுள்ள உண்மையை அறியலாம். மாணிக்கவுரையும் முன்னைய உரைநெறிகளுக்கு ஏற்பவே வழக்கு மேற்கோள்கள் பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சான்று வருமாறு: "காண்க: அறம், அடவி,

அறுவடை" (வ.சுப.மாணிக்கம் 1989:35). வழக்குச் சான்று காட்டுமிடங்களில் "காண்க" எனச் சுட்டி எழுதுவது மாணிக்கவுரையின் மரபாகும்.

"வழக்கு: மியா – இது பேச்சு வழக்கிடை முன்னிலையில் வரும் ஏவற்சொல். கோண்மியா, சொன்மியா, கேளப்பா, சொல்லப்பா என்பது பொருள்" (வ.சுப.மாணிக்கம் 1989:94) எனச் சான்றினை விளக்கிக் காட்டுதலும், "ஆ – பக்கத்துக் கால் வாங்குதல்: ர – கா ஙா சா இன்ன பிற (15)" என்றவாறு சான்றினை விரிவாக விளக்கிக் காட்டுதலும், உயிர்மெய் என்பதனை விளக்குமிடத்தில் "தயிர்வடை, பூரிகிழங்கு போலக் கொள்க" (வ.சுப.மாணிக்கம் 1989:136) என்னுமாப்போலச் சான்றுகளைச் சுவைபட வழங்குதலும், "புறா, பலாக்காய், பிராண்டுதல், தராசு, வியாழன், வறட்டி, விளாம்பழம் என்ற சில தமிழ்ச்சொற்களைச் சிலர் இன்று மெய்ம் முதலாக ஒலிப்பதைக் கேட்கின்றோம். இது பிழை வழக்கு, கடியத்தகும்" (வ.சுப.மாணிக்கம் 1989:136) எனப் பிழைபட்ட வழக்காறுகளை எடுத்துக்காட்டும் இயல்பும் ஆகிய உரைநெறிகளை மாணிக்கவுரையில் காண்கின்றோம்.

5. பல்வகைச் சான்றுகளை இணைத்துத் தருதல்

ஒரு கருத்தினை விளக்க முனையும் மாணிக்கனார் தம் உரைக்கண் இலக்கணம், இலக்கியம், வழக்கு ஆகிய பல்வகை சார்ந்த மேற்கோள்களை ஓரிடத்தே இணைத்துத் தரும் வழக்கத்தைக் கைக்கொண்டுள்ளார். இதனைப் பின்வரும் பகுதிகளால் அறியலாம்.

"அன்னாஅ, தோழீஇ, ஆடூஉ, வேஎல், கோஒன், எனவும், புகாஅஅர், நம்பீஇஇ எனவும் வரும். நற்றாழ் தொழாஅர் (2), செறாஅ அய் வாழிய (1200) என்பன திருக்குறள்" (வ.சுப.மாணிக்கம் 1989: 28) என்னுமாறு ஒரே கருத்துக்கு வழக்குச் சான்றுகளோடு, இலக்கியச் சான்றுகளை இணைத்துக் காட்டலும்,

"அவன் மகரம் எழுதினான்
அவள் லுகரம் எழுதினாள்
அவர் றிகரம் எழுதினார் } பேச்சு வழக்கு
'ணனவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்'

'ஒற்றவும் வருடவும் லகார ளகாரம்'

'வருட ரகாரம் ழகாரம்'

'தாம் வரூஉம் ரழவலங் கடையே'

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள்" (வ.சுப.மாணிக்கம் 1989:115) என்றவாறு ஒரே கருத்துக்கு வழக்கு மேற்கோள்களையும் இலக்கண மேற்கோள்களையும் இணைத்துத் தருதலும் மாணிக்கவுரை நெறிகளாகும். இஃதுபோன்ற இன்னும் பல மரபுகள் இருப்பினும், கட்டுரையின் அளவு கருதி, இத்தோடு நிறைவு செய்கின்றேன்.

முடிபுகள்

1. மாணிக்கவுரை தொல்காப்பியம் முழுமைக்கும் எழுதப்படவில்லையே என்ற ஏக்கம் நமக்குள் இருந்தாலும், அவரால் எழுதப்பட்ட தொல்காப்பிய உரைக் குறிப்புக்களாவது அச்சுருக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்தம் கால்வழியினர் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.
2. ஒரு நூற்பா / பாடலுக்குக் கூறப்படும் உரையைப் பொருத்தவரையில், அந்நூற்பா / பாடலின் பொருளைத் தெளிவுறுத்தும் பொழிப்புரை, பதவுரை ஆகிய இரண்டனுள் ஒன்றைத் தருவதே உரையாசிரியர்தம் மரபாகும். இம்மரபுக்கு மாறாக மாணிக்கவுரையில் அகலவுரை என்னும் உரைநிலையைக் கையாண்டு புதுமை படைத்துள்ளார். எனினும், அகலவுரைக்கண் பொழிப்புரையும், விளக்கவுரையும் இணைந்துள்ளதைக் காணமுடிகின்றது.
3. வினாக் கேட்டு விடை தருவது என்ற நிலையிலிருந்து ஒரு படி மேற்சென்று வினாக் கேளாமலேயே விடையை எழுதிச் செல்கின்ற பாங்கினையும் மாணிக்கவுரையில் காணமுடிகின்றது. கற்போன் மனத்தில் எழக்கூடிய வினாக்களைச் சிந்தித்து விடையளிக்கின்ற மாணிக்கவுரை கற்போனின் உள்ளப்போக்கினை மிகத் தெளிவாக அறிந்துள்ள ஓர் உரையாகும்.
4. மாணிக்கனார் உரைக்கண்ணும் பெருவழக்குடைய ஒன்றாகவே சான்று காட்டல் திகழ்கின்றது என்பதனைக் காணமுடிகின்றது. சான்று காட்டுமிடங்களில் 1.இலக்கணச் சான்றுகள் தருதல், 2.இலக்கியச் சான்றுகள் தருதல், 3.பிற மொழிநூல், பிற துறைச் சான்றுகள் சுட்டுதல், 4.வழக்குநடைச் சான்றுகள் தருதல், 5.பல்வகைச் சான்றுகளை இணைத்துத் தருதல் ஆகிய நெறிகளைக் காணமுடிகின்றது.
5. சான்றினைக் கற்பிக்கும் நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் நிலை மாணிக்கவுரையின் தனித்தன்மை சான்ற நெறியாகும்.

பழையவுரைகளின்கண்ணோ, பிற புத்துரைகளின் கண்ணோ காணப்பெறாத ஒரு நெறியாக இதனைக் குறிக்கலாம்.

துணைநூல்கள்

1. அரவிந்தன். மு.வை., 2008 (இரண்டாம் பதிப்பு). உரையாசிரியர்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
2. இராஜரெத்தினம். தி. (பதி.ஆ.),. 2014. அகப்பொருள் விளக்கம் – செம்பதிப்பு. சென்னை: காவ்யா.
3. மணி. ஆ., 2010. செம்மொழித் தமிழ் ஆய்வுரைகள். புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.
4. மணி. ஆ., 2014. தொல்காப்பியத் திறனுரைகள். சென்னை: லாவண்யா பதிப்பகம்.
5. மணி. ஆ.. 2016. தொல்காப்பிய உரைமேற்கோள்கள் – தொகுப்பும் பகுப்பும். சென்னை: செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம். (வெளியிடப்பெறாத ஆய்வுத்திட்ட ஆய்வேடு).
6. மாணிக்கம். வ.சுப., 1980 (பெருக்கிய பதிப்பு). தொல்காப்பியப் புதுமை. சிதம்பரம்: மணிவாசகர் நூலகம்.
7. மாணிக்கம். வ.சுப., 1989. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் – நூன்மரபும் மொழிமரபும் – மாணிக்கவுரை. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக் கழகம்.
8. மாணிக்கம். வ.சுப., 1989[1] (தொகை முதற்பதிப்பு). தொல்காப்பியக் கடல். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
9. மோகன். இரா., 1999 (முதற்பதிப்பு). இந்திய இலக்கியச் சிற்பிகள் வ.சுப. மாணிக்கம். புதுதில்லி: சாகித்திய அகாதெமி.

குறிப்பு

* என்ற குறியீடு அவ்வெண் தமிழெண் வடிவில் தரப்பட்டது என்பதைக் குறிக்கும். தட்டச்சுநிலை கருதி, அவ்வெண் இவ்ஆய்வுரையில் கணித எண் வடிவாகத் தரப்படுள்ளது.

+ என்ற குறியீடு வ.சுப. மாணிக்கனாரால் தரப்பட்ட எண் என்பதைக் குறிக்கும். அவ்வெண் தொல்காப்பிய நூற்பாவின் எண் என்றாலும், இன்ன இயல் / அதிகாரத்திற்குரியது என்ற குறிப்பு அவரால் தரப்படவில்லை என்பதையும் குறிக்கும்.

(தமிழண்ணல் 1993:20; 2008:7) என வரும் குறிப்பில் அரைப்புள்ளிக்கு முன் வரும் முதலெண் 1993 ஆண்டுப் பதிப்பின் 20ஆம் பக்கத்தைக் குறிக்கும். அரைப்புள்ளிக்குப் பின்னர் வரும் இரண்டாம் எண் தமிழண்ணல் எழுதிய 2008ஆம் ஆண்டுப் பதிப்பின் 7ஆம் பக்கத்தைக் குறிக்கும். ஒரு ஆசிரியரே எழுதிய ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களில் ஒரு கருத்தே இடம்பெறுமிடங்களைக் குறிக்க இவ்வாறு ஆளுவது பொருத்தமுடையதாகலாம் என்ற எண்ணத்தில் முதன்முறையாக இவ்வாறு தரப்பட்டுள்ளது. இடச்சுருக்கம் கருதி இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வாளனின் கல்விப்பரவலை இவ்வகைக் குறிப்புக்கள் அறிய உதவுவது என்பது இதன் பயன் என்க.

மதிப்பிடப்பெற்றது

பிற்கால நீதி நூல்கள் : வ.சுப.மாணிக்கனாரின் உரை இயல்புகளும் நடைத் தன்மைகளும்

*முனைவர் **மா.பரமசிவன்***
தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 130.

வ.சுப.மாணிக்கனார் பிற்கால நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி ஆகியனவற்றிற்கு 1957இல் உரை எழுதியுள்ளார். இவ் உரை பல்வேறு பதிப்புகளைக் கண்டுள்ளது. இவ் உரையின் இயல்புகள் குறித்தும் நடைத் தன்மைகள் குறித்தும் விளக்குவதாக இவ் எழுத்துரை அமைகின்றது.

உரை வரலாறு

செம்மல், முதுபெரும்புலவர், பெருந்தமிழ்க் காவலர், முதுபேராய்வாளர் என்றெல்லாம் அழைக்கப்பெறும் வ.சுப.மாணிக்கனார் 17.04.1917 முதல் 25.04.1989 வரை வாழ்ந்தவர். புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்த இவரின் இயற்பெயர் அண்ணாமலை என்பதாகும். குருகுல முறையிலான தொடக்கக் கல்வியை தம் ஏழாம் வயது வரை மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையுடன் தொடர்புடைய நடேச ஐயரிடம் பயின்றார். அவரிடமிருந்துதான் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி ஆகியவற்றைப் கற்றறிந்திருக்கிறார். தொழில் கற்பதற்காகப் பர்மா சென்று திரும்பிய இவரது உயர்கல்விக்கு வழிகாட்டியவர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் ஆவார். அவரின் வழிகாட்டுதல்படி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் (1936-1940) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல். (1945), முதுகலைப் (1951) பட்டங்களையும் பெற்றார். தொடர்ந்து ‘தமிழில் வினைச்சொற்கள்’ எனும் ஆய்வுக்காக எம்.ஓ.எல். (1948) பட்டத்தையும் ‘தமிழில் அகத்திணைக் கொள்கைகள்’ எனும் பொருளில் ஆய்வு செய்து முனைவர் (1957) பட்டத்தையும் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் (1941-1948), காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் (1948-1964), முதல்வர் (1964-1970), அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் & இந்திய மொழிப்புல முதன்மையர் (1970-1977), மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

(17.08.1979 - 30.06.1982) என்று பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர் வ.சுப.மாணிக்கனார்.

தமிழகப் புலவர் குழுத் தலைவர், பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர், தமிழ் வழிக் கல்வி இயக்கத் தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழக வடிவமைப்புக் குழுத்தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்காப்பியத் தலைவர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்த வ.சுப.மாணிக்கனார் 21 தமிழ் நூல்களையும் 4 ஆங்கில நூல்களையும் 9 நூல்களுக்கு உரையையும் எழுதியுள்ளார்.

"ஆத்திசேர் கொன்றை அழகுதமிழ் மூதுரை
பாத்திசேர் நல்வழி பண்புலகம் - பூத்த
நறுந்தொகை நன்னெறி ஏழும் குழந்தைக்
குறுந்தமிழ் என்றறிந்து கொள்" (2006:7)

என்று பிற்கால நீதிநூல்களின் பெருமையை வெண்பாவாகப் பாடிய வ.சுப.மாணிக்கனார்,

"...தொல் மரபுப்படி "ஏழிளந்தமிழ்" மீண்டும் தொடக்கப் பள்ளிகளில் முழு நூல்களாக இடம்பெற வேண்டும்" (2006:7)

என்ற கருத்துடையவராக விளங்கினார்.

ஆத்திசூடி அமைப்பில் 'தமிழ்சூடி' எழுதியவர் (2006:10) வ.சுப.மாணிக்கனார். காரைக்குடியில் தமிழ்ச்சங்கம் அமைத்து அதன் தலைவராய் விளங்கிய அவர், இப்பிற்கால நீதிநூல்களைச் சிறுவர்கள் மனதில் பதியச் செய்ய முயற்சித்து,

"எளிய தெளிவுரை வகுத்துத் தமிழ்ச் சங்க வெளியீடாகப் பல பதிப்புகள் வரச் செய்தார்" (2006:10).

இந்நிலையில் ஆத்திசூடி முதலான இப்பிற்கால நீதிநூல்களின் முதல்பதிப்பு 1957இல் வெளிவந்துள்ளது. இதற்கு, 'ஏழிளந்தமிழ்' என்று பெயர்சூட்டி மகிழ்ந்துள்ளார் வ.சுப.மாணிக்கனார். இதன் மறு அச்சு, இவரின் நூல்கள் நாட்டுடைமை (2006) ஆக்கப்பட்டதன் பின்னர் 2006இல் மணிவாசகர் பதிப்பகத்தின் வழியும் 2007இல் தமிழ் நிலையத்தின் வழியும் 2014இல் சந்தியா பதிப்பகத்தின் வழியும் வெளியிடப்பெற்றுள்ளது.

இவரின் உரையைத் தழுவி எழுதப்பெற்ற ஓர் உரை பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 2009இல் முதற்பதிப்பாகவும் 2012இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது. நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பின்னர் முதன்முதலில் இவரின் ஏழிளந்தமிழ் உரைகளைப் பதிப்பித்த மணிவாசகர் பதிப்பகம் தற்போது வெளியிடாமல் இவரின் உரைத்தழுவல் உரையை வெளியிட்டிருப்பது வேதனைக்குரியதாக அமைகிறது.

உரை இயல்புகள்

வ.சுப.மாணிக்கனாரின் பிற்கால நீதிநூல் உரைகள் பின்வரும் இயல்புகளைக் கொண்டமைகின்றன. அவை:

1. கருத்துரைத் தன்மையில் அமைதல்
2. விளக்கவுரை அளித்தல்
3. தொகுத்துக் கூறல்
4. தலைப்பிட்டு உரை எழுதுதல்
5. கொண்டு கூட்டு நெறி பயன்படுத்துதல்
6. வழக்குச் சொல் பயன்பாடு
7. வடசொல் பயன்பாடு
8. சமய நம்பிக்கை வெளிப்பாடு.

கருத்துரைத் தன்மையில் அமைதல்

ஒரு நூல் உணர்த்துகின்ற கருத்தைத் தெளிவாக்கி அமைவது கருத்துரையாகும். இது சுருக்கமாக அமைவதால் இதனைக் குறிப்புரை என்றும் குறிப்பிடலாம். இத்தகைய கருத்துரைத் தன்மையிலேயே வ.சுப.மாணிக்கனாரின் பிற்கால நீதிநூல் உரைகள் அமைகின்றன. குறிப்பாக, ஒவ்வொரு அடிகளில் அமையும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரைகள் அவ்வாறே அமைகின்றன. பிற நூல்களில் அரிதாகச் சில இடங்களில் கருத்தை உணர்த்தும் தன்மையில் இவரின் உரை அமைகின்றது.

"ஈவது விளக்கேல்" (ஆத்.4)

"ஒருவர் மற்றொருவர்க்குக் கொடுப்பதைத் தடுக்காதே" (2007:5)

"ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு" (கொன்.86)

"மனம் தளராமை எல்லா முன்னேற்றமும் தரும்" (2007:24)

என்பனவற்றை இதற்குச் சான்றுகளாக அளிக்கலாம். மேலும்,

"அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுஏதிங் கென்னில்நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் கூலி
சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
மகநோவு தனைத்தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ ஏமன் தானே" (உலக.11)

என்ற உலகநீதிப் பாடலுக்கு,

"வண்ணான், நாவிதன், கற்பித்த ஆசிரியர், பேறுபார்த்த மருத்துவச்சி, கொடிய நோய் தீர்த்த மருத்துவன் ஆகிய ஐவருக்கும் உரிய கூலியைக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு கொடாதவர்க்கு இயமன் என்னென்ன தண்டனைகள் அளிப்பானோ?" (2007:95)

என்று உரை எழுதுகிறார். இவ்வாறு தேவையற்ற சொற்களைப் பயன்படுத்தாமல் சுருக்கமாகப் பாட்டின் கருத்தைத் தெளிவாக்கும் கருத்துரைத் தன்மை, இவர் உரையில் பரவலாகக் காணப்பெறுகிறது. மேலும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி ஆகியவற்றின் முதல் பாடல்களான கடவுள் வாழ்த்துப் பாடல்களின் உரை தொடங்கும் போது 'கருத்து' என்று தலைப்பிட்டு உரை எழுதுவதும் இவர் உரை கருத்துரை என்பதையே தெளிவுபடுத்துகிறது.

நான்கு அடிப் பாடல்கள் சிலவற்றிலும் கருத்துரைத் தன்மை காணப்பெறுகிறது. இதற்குப் பின்வரும் நல்வழிப் பாடலைச் சான்றாகக் குறிக்கலாம்.

"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை" (நல்.23)

என்ற நல்வழிப் பாடலுக்குப் பின்வருமாறு உரை எழுதுகிறார் வ.சுப.மாணிக்கனார்.

> “நீதி மன்றத்தில் ஒரு சார்பாகப் பொய் சொன்னவன் வீட்டில் பேய் சேரும்; எருக்கஞ்செடி வளரும்; பாதாள மூலி என்னும் கொடி படரும்; மூதேவி தங்குவாள்; பாம்பு குடியிருக்கும். அதாவது அவன் குடியோடு அழிவான்” (2007:62).

இவ் உரையில், ‘அதாவது அவன் குடியோடு அழிவான்’ என்பது கருத்துரைத் தன்மையில் அமைவதாகும்.

விளக்கவுரை அளித்தல்

முதலில் பாடலின் கருத்தைத் தெளிவாக்கிவிட்டு அதுதொடர்பாகக் கூடுதல் விளக்கத்தைத் தருவது உரையாசிரியர்களின் பொது மரபாகும். இத்தன்மையில்தான் உரையாசிரியர்களின் புலமைத்துவம் வெளிப்படும். இத்தன்மையும் இப்பிற்கால நீதிநூல் உரைகளில் காணப்பெறுகிறது. இதனை, நறுந்.26,27,29,60,62, நல்.க.வா. ஆகிய 6 இடங்களில் காண இயலுகிறது.

“கலக்கினும் தண்கடல் சேறா காது” (நறுந்.27)

எனும் நறுந்தொகை அடிக்கு,

“கடலை எப்படிக் கலக்கினாலும் சேறாகாது; தெளிவாகவே இருக்கும்” (2007:29)

என்று உரை எழுதும் வ.சுப.மாணிக்கனார்,

> “பால், பொன், சந்தனம், அகில், கடல் ஆகிய ஐந்தும் தம்மைப் பிறர் வருத்திய போதும் தமக்குரிய இயல்பில் மாறுபடுவதில்லை. அவை போலவே பெரியோர் தமக்கு மிகுந்த துன்பம் வந்தாலும் தம் உயர் குணங்களிலிருந்து மாறுபடார்” (2007:30)

என்று விளக்கம் அளிக்கிறார். கடலைப் பற்றிக் கூறும் மேற்கண்ட அடிக்கு அதனை ஒத்த, பெருமையுடைய பால், பொன், சந்தனம், அகில் ஆகியவற்றையும் கூறி அவற்றைப்போலப் பெரியோர் திகழ்வர் என்று கூறும் இவரின் உரை இயல்பு போற்றத்தக்கதாகும்.

“பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா” (நல்.க.வா.)

என்ற நல்வழியின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு,

“விநாயகப் பெருமானே! பாலும் தேனும் வெல்லப் பாகும் பருப்பும் ஆகிய நான்கு பொருட்களை நான் உனக்குப் படைப்பேன்; எனக்கு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தர வேண்டுகிறேன்” (2007:53)

என்று உரை எழுதுகிறார். இதில், ‘இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும்’ என்பது விளக்க நிலையில் அமைவதாகும். ‘சங்கத் தமிழ் மூன்றும்’ என்பதற்கான விளக்கமாக இது அமைகிறது. இவ்வாறாக, பாடல் முழுமைக்குமான விளக்கம், குறிப்பிட்ட அடிக்கான விளக்கம் என்ற இருநிலைகளில் இவரின் விளக்கவுரைத் தன்மை அமைகிறது.

தொகுத்துக் கூறல்

ஒரு நூலுக்கு உரை எழுதும் உரை ஆசிரியர் நீண்ட பாடலாக இருப்பின் அப்பாடலுக்கு இடையிலோ, தனித்த அதிக எண்ணிக்கையிலான பாடல்களாக இருப்பின் குறிப்பிட்ட பாடல்கள் நிறைவடைந்த பின்னரோ அவற்றின் பொருளைத் தொகுத்துக் கூறி உரை எழுதுவர். பத்துப்பாட்டு உரைகளில் இத்தன்மையைப் பரவலாகக் காண முடியும். இது பாடல் புரிதலுக்கு வழி வகுக்கக் கூடியதாகும்.

இத்தகைய தொகுத்துக் கூறும் தன்மையை வ.சுப.மாணிக்கனார் தம் நறுந்தொகை உரையில் பயன்படுத்தியுள்ளார். நறுந்தொகையின்,

“தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே” (நறுந்.71)

என்ற 71ஆம் பாடல் நிறைவுற்றபின் அதற்கான பொருளைக் குறித்துவிட்டு,

“65 முதல் 71 வரையுள்ள செய்யுட்களில் அந்தணப் பதர், அரசப்பதர், வணிகப்பதர், வேளாளப்பதர், இல்லறப்பதர், தொழிலாளிப்பதர் என ஆறுவகைப் பதர்களை ஆசிரியர் கூறியுள்ளார்” (2007:37)

என்று எழுதுகிறார். இவ்வாறு தொகுத்துக் கூறும் இவ் இயல்பு இவ்வோரிடத்தில் மட்டுமே இவ்வுரையில் காணப்பெறுகிறது.

தலைப்பிட்டு உரை எழுதுதல்

ஓர் உரை தனிப்பாடல்களுக்கானதாக இருந்தாலும் நெடும்பாடல்களுக்கானதாக இருந்தாலும், பிற்கால உரையாசிரியர்கள்

அப்பாடல்களுக்கு அப்பாடல்களின் பொருண்மைகளைத் தலைப்பிட்டு உரை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இது மூதுரை, நல்வழி எனும் இருநூல்களுக்கான வ.சுப.மாணிக்கனாரின் உரைகளில் காணப்பெறுகிறது.

ஏழு நூல்களில் உலகநீதிக்கு மட்டும் 'காப்பு' என்றும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய நூல்களுக்குக் 'கடவுள் வணக்கம்' என்றும், நறுந்தொகை, நல்வழி, நன்னெறி ஆகியவற்றிற்குக் 'கடவுள் வாழ்த்து' என்றும் தலைப்பிட்டு இறைவணக்கப் பாடல்களை அமைத்துள்ளார் வ.சுப.மா.. பிற பாடல்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, உலகநீதி தவிர்ந்த பிறவற்றிற்குத் தலைப்பின்றி உரை எழுதுகிறார். நறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு அடுத்துள்ள பாடலில் 'நறுந்தொகை படிப்பதால் வரும் பயன்' என்று தலைப்பிட்டு எழுதுகிறார்; பிற பாடலடிகளுக்கு எவ்விதத் தலைப்பையும் அளிக்கவில்லை.

மூதுரையில், நன்மை செய்தால் நன்மை வரும், நல்லோர்க்குச் செய்த உதவி நிலையாக நிற்கும், இளமையில் வறுமை, மேன்மக்கள் இயல்பு, காலமறிந்து செய்தல், உயிரினும் மானம் பெரிது, அறிவு செல்வம் குணம் அமைதல், நல்லார் தொடர்பால் வரும் நன்மை, தீயவர் தொடர்பால் வரும் தீமை, நல்லோரால் எல்லார்க்கும் நன்மை, துணை வலிமை வேண்டும், உருவமும் குணமும், கல்லாதவன் காட்டுமரமாவான், போலி அறிவின் இழிவு, தீயோர்க்கு உதவின் தீங்கே வரும், அடக்கத்தை இழக்காதே, உண்மையான உறவினர், கெட்டாலும் மேன்மக்கள் குணம் மாறார், ஆசையாற் பயனில்லை, உடன்பிறப்பும் அயலாரும், மனையாளும் மனையும், ஊழின்படியே நடக்கும், சினத்தில் மூவகை நிலை, குணமும் தொடர்பும், வஞ்சனையுடையார் ஒளிந்து இருப்பர், கற்றோர் சிறப்பு, நால்வகை எமன்கள், கேட்டிலும் பண்பு கெடாமை, நிலையில்லாத வாழ்வு, துன்பம் செய்வார்க்கும் இன்பம் செய்தல் ஆகிய தலைப்புகள் காணப்பெறுகின்றன.

நல்வழியில் கடவுள் வாழ்த்துத் தவிர்ந்த பிற பாடல்களுக்கு, நன்மையே செய்க, உயர்குலம் இழிகுலம், ஈகையின் பயன் வீடுபேறு, காலம் அறிந்து செய்க, கவலையடைதல் கூடாது, பேராசை கூடாது, ஞானிகள் பற்றற்று இருப்பர், ஒழுக்கம் பொருளின் சிறந்தது, குடிப்பிறந்தார் வறுமையிலும் உதவுவர், கொடுத்து உண்டு

வாழ்க, வயிற்றின் கொடுமை, உழவின் உயர்வு, நம்மால் விலக்க இயலாதன, மானமே உயிரினும் சிறந்தது, சிவாயநம, வியத்தகு மேன்மை, தீவினையே வறுமைக்கு வித்து, அடிப்பவர்க்கே கொடுப்பர், உயர்நோக்கம் இன்மை, விலைமகள் தொடர்பு, வஞ்சனையில்லார்க்கு வாழ்வு சிறக்கும், புதைத்த பணத்தால் யாருக்குப் பலன்?, வழக்கல் ஓரம் சொன்னவர் மனைபாழ், வாழ்க்கை மாண்புகள் ஐந்து, வரவுக்கேற்ற செலவு, பசிவந்திடப் பத்தும் போகும், எல்லாம் இறைவன் செயல், மனவமைதி வேண்டும், கொடையாளருக்கு எல்லாரும் உறவினர், விதியின் தன்மை, இதனினும் இது நன்று, வன்சொல்லும் இன்சொல்லும், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை, அறிவுடையோரும் பேதையும், பிறன்மனை விரும்பாமை, வீடு அடைதல், உண்மை நிலை, முப்பதில் முதல்வனை அறி, சிறந்த நூல்கள் ஆகிய தலைப்புகளை அளித்துள்ளார்.

நன்னெறியின் கடவுள் வாழ்த்துத் தவிர்ந்த பிற பாடல்களுக்குப் பின்வரும் தலைப்புகளை அளிக்கிறார். புகழ் கருதாமல் உதவுக, பெரியோர் வன்சொல், முறையறிந்து கொள்க, செல்வப் பயன், பிரியாத நட்பின் சிறப்பு, கணவன் மனைவி கருத்தொற்றுமை, கல்விச் செருக்குக் கூடாது, சினங்காத்தல் சிறப்பு, வல்லோர் துணை வலிமை, விழுமியோர் இயல்பு, மெய்யறிவாளரும் புலன்களும், உடம்பில் உயிர்தங்கல் வியப்பு, உள்ளதற்குத் தக உதவுக, செல்வச் செருக்குக் கூடாது, வாழ்வுக்கு அன்பு அடிப்படை, உயர்ந்தோர் உதவும் முறை, வன்மையிலும் உதவி, இன்சொல் இனிமை தரும், நல்லோர் வரவு நல்கும் இன்பம், கருணை உள்ளத்தியல்பு, கல்லார் செருக்கு கற்றார்முன் அடங்கும், பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை, மனவுறுதி வேண்டும், கீழோர் பிறர் குற்றமே பேசுவர், கீழோர் சேர்க்கையால் சிறப்புக் கெடும், உருவத்தைக் கொண்டு மதிப்பிடாதே, கைம்மாறு கருதாது உதவுக, வெறுப்பிலும் மேலார் உதவுவர், பத்தியுடையார்க்கு அச்சமில்லை, காலத்தில் அறஞ் செய்க, பிறர் துயரம் தாங்குக, முறையறிந்து அறம் செய்க, பெரியோர்க்குக் காப்பு வேண்டாம், பெரியோர் பழிக்கு அஞ்சுவர், மேன்மக்கள் கற்றோரை விரும்புவர், தக்கார்க்கு உதவுக, தற்புகழ்ச்சியால் தாழ்வு, நல்லோர் தொடர்பு நலம் தரும், தீயோர் தொடர்பு தீமை தரும், அரசரினும் அறிஞரே சிறந்தவர் என்பன அவை.

இவ்வாறு தலைப்பிட்டு உரை எழுதும் தன்மை பாடலைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. கற்றல், கற்பித்தல் முறைக்கு இது இன்றியமையாததாகவும் அமைகிறது.

கொண்டு கூட்டு நெறி

தொல்காப்பியத்தில் ‘மாட்டு’ என்று குறிக்கப் பெற்ற இது நச்சினார்க்கினியாருக்குப்பின் கொண்டு கூட்டாக வளர்ந்தது. பின்னர் இது ஒரு தனிநெறியாக வளர்க்கப்பெற்று உரையாசிரியர்களால் பயன்படுத்தப் பெற்றுள்ளது. நூலின் பொருட்புரிதலுக்கு இந்நெறி பெருந்துணை புரிகின்றது என்றாலும் சில இடங்களில் வலிந்து அமைந்து விடுவதும் உண்டு. சரியான முறையில் இதனைப் பயன்படுத்தும்போது பாடலின் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இவ்இயல்பைப் பயன்படுத்தாத உரையாசிரியர்களே இல்லை என்று கூறலாம்.

இத்தகு தன்மையுடைய இவ்இயல்பு வ.சுப.மாணிக்கனாராலும் பயன்படுத்தப் பெற்றுள்ளது. அவரின் மூதுரை, நன்னெறிப் பாடல்களுக்கான உரைப்பகுதிகளில் இது பயன்படுத்தப்பெற்றுள்ளது. சான்று வருமாறு:

“நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தரு லால்” (மூது.1)

எனும் இப்பாடலுக்கான பொருள் கொண்டு கூட்டுத் தன்மையில் வ.சுப.மாணிக்கனாரால் அளிக்கப்பெற்றுள்ளது. அப்பொருள் வருமாறு:

“தென்னைமரம் வேரால் உண்ட நீரை இனிய சுவையுடைய இளநீராக்கி முடியாலே தருகின்றது. அதுபோல, நாம் பிறர்க்குச் செய்யும் உதவி நமக்குத் தவறாமல் வந்து சேரும். ஆதலால் என்றும் நன்மையே செய்க” (2007:40-41).

இப்பாடலின் 3,4ஆம் அடிகளுக்கான பொருள் முதலிலும் முதலிரண்டு அடிகளுக்கான பொருள் இரண்டாவதுமாகச் சொல்லப்பெற்று, இப்பாடலுக்கான பொருள் விளக்கம் அமைந்துள்ளது. இவ்வாறு தேவையான இடங்களில் மட்டுமே தெளிவாக, சிறப்பாக

இக் கொண்டுகூட்டு பயன்படுத்தப்பெற்றுள்ளது. மாறாக வலிந்து அளிக்கப்பெற்றனவாக இது திகழவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

வழக்குச் சொல் பயன்பாடு

உரையாசிரியர்கள் அனைவரும் நூல் தோன்றிய கால வழக்கைப் பதிவு செய்ததை விட, உரை எழுதப்பெற்ற கால வழக்கத்தையே மிகுதியாகப் பதிவு செய்துள்ளனர். உரையாசிரியர்கள் கால வழக்கத்தைப் பயன்படுத்திப் பனுவல் தரும் பொருளை உணர்த்துதல் உரை மரபில் பரவலாக இருந்து வருகிறது. இத்தன்மை வ.சுப.மாணிக்கனாராலும் பின்பற்றப்பெற்றுள்ளது. இவர், தம் உரையில் வழக்குச் சொற்றொடர்களை அரிதாகக் கையாள்கிறார். 'நீராம்பல்' (மூது.7:1), என்பதற்கு, 'அல்லிக்கொடி' (2007:43), என்றும் 'நாகம்' (மூது.25:1), என்பதற்கு, 'நாகப்பாம்பு' (2007:50), என்றும் குறிப்பிடுவதை இதற்குச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

உரையைப் படிப்பவர் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டே உரையாசிரியர்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்துவதை உரையில் காட்டுகின்றனர். இது காலத்தின் தேவையும் ஆகும்.

வடசொல் பயன்பாடு

வடசொல் என்பது தொன்றுதொட்டே தமிழ் மொழியில் பயின்று வந்துள்ளது. இதற்கு,

> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
>
> எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (தொல்.சொல்.எச்சம்.5)

என்ற தொல்காப்பிய நூற்பா சான்றாகும். வடசொற்களும் வட எழுத்துகளும் தொல்காப்பியம் தோன்றிய காலத்திலேயே தமிழோடு கலந்துவிட்டது என்பதனை இதன்வழி அறியலாம். இன்றும் சில சொற்களைத் தமிழ் என்று கூறுவதா? வடமொழி என்று கூறுவதா? என்பதான குழப்பங்கள் நீடித்துக்கொண்டே இருக்கின்றன. இந்நிலையில்தான் உரையாசிரியர்கள் பயன்படுத்துகின்ற வடமொழிச் சொற்களை நாம் பார்க்க வேண்டி உள்ளது. மேலும், 'வைணவ வியாக்கியானர்கள்' பயன்படுத்திய மணிப்பிரவாள நடையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதாகவே உள்ளது. தனித்தமிழ் மரபைப் போற்றியவர்களின் தொடக்ககால எழுத்துகளிலும் இவ்வடமொழிக் கலப்பைக் காண இயலுகிறது. இவ்வகையில், தமிழரின் அகவாழ்க்கை மரபு குறித்துத் 'தமிழ்க்காதல்' எழுதிய வ.சுப.மாணிக்கனாரின்

ஏழிளந்தமிழ் உரையிலும் வடசொற்கள் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கதாக அமைகிறது. இச்சொற்கள் அரிதாகவே காணப்பெறுகின்றன. சான்று வருமாறு:

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்" (நல்.40:1)

என்ற அடிக்கு உரை எழுதும் வ.சுப.மா., 'திருநான் மறைமுடிவு' என்பதற்கு உபநிடதம் என்று பொருள் குறிக்கிறார்.

"பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தான் மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்" (நன்.40)

என்ற பாடலில் வரும் 'அணி' என்ற சொல்லுக்கு உரை முழுவதிலும் 'ஆபரணம்' என்றே பொருளுரைக்கிறார். இவ்வாறு இவ்விரு இடங்களில் மட்டும் வடசொற்களைப் பயன்படுத்தியுள்ளார் வ.சுப.மாணிக்கனார்.

சமய நம்பிக்கை வெளிப்பாடு

உரை எழுதும் ஒவ்வொருவரும் தாம் சார்ந்திருக்கும் சமயம் தொடர்பான பதிவை ஏதேனும் ஓரிடத்தில் பதிய வைத்து விடுகின்றனர். இதை வைத்துத்தான் முற்கால உரையாசரியர்களின் சமயத்தைப் பற்றி நம்மால் அறியமுடிகிறது. இதற்கு வ.சுப.மாணிக்னாரும் விதிவிலக்கல்ல. இவர்தம் உரையில் 8 இடங்களில் அவரது சமய நம்பிக்கைப் பதிவுகள் காணப்பெறுகின்றன. அவை வருமாறு:

"சிவபெருமான் விரும்பும் விநாயகக் கடவுளைப் பலமுறை வாழ்த்தி வணங்குவோம்" (ஆத்.க.வ.)

"சிவபெருமானின் திருக்குமரனாம் விநாயகக் கடவுளின் திருவடிகளை நாள்தோறும் வணங்குவோம்" (கொ.வே.க.வ.)

"ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாகிய விநாயகரின் திருவடிகளை வணங்குவோம்" (நறுந்.க.வா.)

"வலிமை பொருந்திய அழகிய உடலினையும் தும்பிக்கையையும் உடைய விநாயகக் கடவுளின் திருவடிகளை..." (மூது.க.வ.)

"விநாயகப் பெருமானே! பாலும் தேனும் வெல்லப் பாகும் பருப்பும் ஆகிய..." (நல்.க.வ.)

" 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தை இடையறாமல் நினைந்திருப் போர்க்கு..." (நல்.15)

"ஒளிவீசும் சடைமுடியையுடைய விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்கினால்,..." (நன்.க.வா.)

"சிவபெருமானைச் சார்ந்துள்ளமையால் பாம்பு தன்னினும் வல்லமையுடைய கருடனைக்கண்டு அஞ்சாது" (நன்.9)

" 'உலகநீதி'யைச் சொல்வதற்கு நூலறிவால் அறியமுடியாத பெருமையினை யுடைய யானைமுகக் கடவுள் துணையாவார்" (உலக.கா.)

இச்சான்றுகளில் வரும் 'சிவபெருமான், விநாயகக் கடவுள், ஓம் எனும் பிரணவ மந்திரம், விநாயகர், விநாயகப் பெருமான், 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்து, யானைமுகக் கடவுள்' ஆகிய சொற்றொடர்கள் வ.சுப.மாணிக்கனாரின் சமய நம்பிக்கையை வெளிப்படுத்துவனவாகும். பாடலடிகளில் இத்தன்மையைக் குறிக்கும் சொற்றொடர்கள் வந்திருந்தாலும் 'பெருமான், கடவுள்' என்பன இவரது இறைநம்பிக்கையின் வெளிப்பாடாகவே அமைகின்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சிவவழிபாட்டிலும் (9 நகரக் கோயில்கள்) விநாயகர் வழிபாட்டிலும் (பிள்ளையார்பட்டி) மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இம்மரபில் தோன்றிய இவரின் உரையிலும் இவ்வகையிலான இறை நம்பிக்கை காணப்பெறுவதென்பது வியப்பிற்குரியதொன்றில்லை.

நடைத்தன்மைகள்

பொதுவாக உரையாசிரியர்கள் அனைவரும் பண்டித நடையைப் பின்பற்றியே உரை எழுதுவர். ஆனால், வ.சுப.மாணிக்கனார் இதிலிருந்து சற்று மாறுபட்டுப் பொருட்புரிதலை அடிப்படையாகக் கொண்டு தம் உரைக்கான நடைத்தன்மையை அமைத்துக் கொள்கிறார். அவரின் 'ஏழிளந்தமிழ்' உரைக்கான நடைத்தன்மைகள் பின்வருமாறு அமைகின்றன. அவை:

1. எளிய நடை
2. விளித்தொடர் நடை.

எளிய நடை

சிறு சிறு தொடர்களைக் கையாண்டு அனைவருக்கும் புரியும் வண்ணம் எழுதுவதே எளிய நடை ஆகும். கல்கியின் புதினங்கள் தொடக்ககாலத்தில் பெருவெற்றி பெற்றதற்குக் காரணம் அவரின் எளிய நடையே என்பார் இரா. அறவேந்தன் (2005:29-34).

உரைநடை, புதினம், சிறுகதை ஆகியவற்றில் பயன்படுத்தப்பெறுகின்ற இவ் எளிய நடையை, வ.சுப.மாணிக்கனார் தம் உரையிலும் பயன்படுத்தி அனைவருக்கும் பொருள் தெளிவை ஏற்படுத்துகிறார்.

> "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ள படி" (நல்.2)

என்ற பாடலுக்கு,

> "துன்பப்படுவோர்க்குக் கொடுத்து உதவுபவர் உயர்குலத்தார் ஆவர். அங்ஙனம் கொடாதவர் தாழ்ந்த குலத்தவர் ஆவர். உண்மை நூலில் சொல்லப்பட்ட கருத்தும் இதுவேயாகும். ஆதலால் பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை" (2007:54)

என்று சிறுசிறு தொடர்களைக் கையாண்டு எளிமையாக, அனைவருக்கும் புரியும் வகையில் உரை எழுதியுள்ள திறம் போற்றத்தக்கதாகும்.

விளித்தொடர் நடை

விளித்தொடர் எந்தெந்தப் பாடல்களில் பயின்று வருகின்றனவோ அந்தந்தப் பாடல்களுக்கான உரையில் வ.சுப.மாணிக்கனாரும் விளித்தொடர்களைப் பயன்படுத்தி உரை எழுதுகிறார். இத்தன்மை நன்னெறி, உலகநீதி ஆகிய இரண்டு நூல்களின் உரைகளில் காணப்பெறுகின்றது.

நன்னெறியில், பெண்ணே (நன்.1,2,3,5,12,13,14,17,20,23,34,37,39), மதிபோன்ற முகத்தை யுடையவளே (நன்.6), நற்குணமுடைய பெண்ணே (நன்.15,38), ஒலிக்கின்ற வளையல் அணிந்த பெண்ணே (நன்.18), அழகிய கண்களையுடையவளே (நன்.25), இன்சொல்லாய் (நன்.29), சிறந்த அணிகலன்களையுடைய பெண்ணே

(நன்.31), அழகிய நெற்றியை உடையவளே (நன்.32), வேல்போன்ற கண்களையுடையவளே (நன்.35) ஆகிய விளிச்சொற்களும் உலகநீதியில், நெஞ்சமே (உலக.1), மனமே (2,3,4,5,6,7,8,9,10) ஆகிய விளிச்சொற்களும் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

இவ்விளிச்சொற்கள் பொருட்புரிதலைத் தெளிவுபடுத்தவும் உரையை எளிமைப்படுத்தவும் உதவி புரிகின்றன.

இவ்வகையில், வ.சுப.மாணிக்கனாரின் 'ஏழிளந்தமிழ்' என்று அழைக்கப்பெறும் பிற்கால நீதிநூல்களுக்கான உரை அனைவருக்கும் புரிய வேண்டும் என்ற எண்ணப் பின்னணியில் உருவாக்கப்பெற்றதாக அமைகிறது. உரை இயல்புகள் பொதுவானதாக இருந்தாலும் நடைத்தன்மைகள் இவருக்கே உரிய தனித்தன்மைகளாக அமைகின்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

துணைநின்றவை

1. அறவேந்தன் இரா., ***இலக்கியக் கருத்தாக்கத்தில் நெறியும் பிறழ்வும்,*** தாயறம், குமரன் நகர், திருச்சிராப்பள்ளி, 2005
2. கோபாலையர் தி.வே. & அரணமுறுவல் ந. (பதி.), ***தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (சேனாவரையம்),*** தமிழ்மண் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை, 2003
3. மாணிக்கனார் வ.சுப. (உரை.), ***ஏழிளந்தமிழ்,*** மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, 2006
4. ..., ***நீதி நூல்கள் (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி),*** தமிழ் நிலையம், தியாகராய நகர், சென்னை, 2007
5. ..., ***ஏழிளந்தமிழ் (நீதி நூல்கள்),*** சந்தியா பதிப்பகம், சென்னை, 2014
6. மெய்யப்பன் ச.(பதி.), ***நீதிநூல் தெளிவுரை,*** மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, 2012 (இ.ப.)
7. http://muelangovan.blogspot.com
8. https://ta.wikipedia.org/s/vlm

மதிப்பிடப்பெற்றது

தமிழ்க் காதலில் வ.சுப.மாணிக்கனாரின் ஆளுமைத் திறன்

முனைவர் **சு.நாகரத்தினம்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி), புதுச்சேரி - 03

முன்னுரை

வ.சுப. மாணிக்கனார் ஆற்றிய தமிழ்த்தொண்டு அளவிடற்கரியது. தன்னைத் தோற்றுவித்த மொழிக்கு மூதறிஞர் என்று அழைக்கப்படும் வ.சுப. மாணிக்கனார் அன்போடு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். தமிழ்ப் புலமையின் மீதும்இ புலவர்களின் மீதும் கொண்ட விருப்பமே “தமிழ்க் காதல்” என்னும் நூலாக வடிவம் பெற்றுள்ளது. அகத்திணை ஆராய்ச்சியை மேற்கொண்ட அவர்இ தமிழ் இலக்கியத்தில் தோய்ந்துஇ மூழ்கி வெளிக் கொண்டுவந்துள்ள கருத்துக்கள்இ அனுபவங்கள் ஏராளமாய்க் கொட்டிக் கிடக்கும் கருத்துக் குவியல்களே “தமிழ்க்காதல்“ என்னும் நூல். தமிழ் அறிஞர்களுக்கும்இ ஆர்வலர்களுக்கும்இ மாணிக்கனாரை நாம் அடையாளம் காட்டத் தேவையில்லை. அவ்வாறு இவரைச் செய்யப் புகுவோமானால் அது குன்றின் மேலிட்ட விளக்கைக் கைவிளக்கால் சுட்டிக் காட்டுவது போல் முடியும். வ.சுப. மாணிக்கனாரின் "தமிழ்க் காதல்” என்னும் நூலில் அவரின் ஆளுமைத்திறனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

நூல் பெயர்

தாகம் கொண்ட மனிதனே தண்ணீர் தேட முனைவான். வேட்கை கொண்டவனே தேடித் திரிவான். அதுபோல் வ.சுப. மாணிக்கனாரின் ஆர்வமும் அமைந்துள்ளது. சங்கப் பாடல்கள் என்கின்ற பொற்குவியல் எங்கே பரவிக் கிடக்கிறது என்று ஆராய்ந்துள்ளார். அதன்படி அவரின்,

> “சங்க இலக்கியமாவது எட்டுத்தொகையும்இ பத்துப்பாட்டுமேயாம். இது பலர் ஒப்பிய முடிவு. இப்பதினெட்டுந்தாம் காலக் கூற்றுவனின் தமிழ்ப் பசிக்கு இரையாகாது தப்பிவந்த பழந்தமிழ் இலக்கியப் படைப்புகள் சங்கத் தனிப்பாடல்களின் தொகை 2381 என்ப” (ப-5).

இக்கூற்றை நோக்குங்கால் அவர் தமிழ்மொழியின் மீதும் தமிழ் கூறும் நல்லறிவு வெளிப்பாட்டின் மீதும் அவருக்கு இருந்த விருப்பத்தைக் “காதல்” என்று கூறுதல்தான் பொருந்தும்.

பிறருடைய கருத்தை மதித்தல்

புலவர்கள் சிறந்த ஆற்றலும்இ அறிவு ஊற்றும் கொண்டவர்கள். தனக்கே உரிய ஞானச்செருக்கு அவர்களிடம் மிளிர்ந்து கிடக்கும். பிறரை மதிக்கின்ற நல்ல குணமும் பிறரின் கருத்தை ஏற்றுக்கொள்கின்ற நல்ல அறிவும் வ.சுப. மாணிக்கத்தின் ஆளுமைப் பண்பைக் காட்டுகின்றது.

"புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண்இ பெண் காதலே. அக்காதல் இலக்கியத்தின் வற்றா ஊற்றிடங்களுள் ஒன்று. கவிதையெண்ணத்தை உருவாக்கும் சார்புகளுள் ஒன்று எனக் கவிஞனுக்கும் காதலுக்கும் அமைந்த நட்பினை எடுத்து மொழிவர் ஆங்கிலப் பேராசிரியர் ஆர்போர்டு" (ப-5) என்று ஆர்போர்டின் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்.

"காதற்பாட்டு மரபுக்கும் உரிமைக்கும் இடைப்பட்ட மெல்லிய ஒரு சமநிலையை வேண்டிநிற்கும். இச்சமநிலை ஒருபாற் கோடினாலும் அப்பாட்டிற்கு நல்லுருத் தோன்றாது என மணமும் அறங்களும் என்ற நூலாசிரியர் பெத்தரண் ரசல் மொழிகுவர். இம்மொழிவு தமிழ் அகச் செய்யுட்களுக்கு நல்விளக்கமாம்" (ப-20) என்பார். பெத்தரண் ரசல் அவர்களின் அறிவினைஇ தன் அறிவால் ஏற்றுக் கொள்கின்ற பண்பை இக்குறிப்பு உணர்த்துகிறது.

மேற்கோள் காட்டுதல்

ஆசிரியரின் புலமை ஆழத்தை அவரது மேற்கோள்களே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

தொல்காப்பியம்:

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்" (தொல்.1168)

திருக்குறள்:

திருக்குறள் என்னும் இரண்டடியை எடுத்துக்காட்டாத அறிஞர்களே இல்லை எனலாம்.

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்னும் பயனும் இல."

இக்குறளை (காமத்துப்பால்) அகத்திணைக்கு உரிப்பொருள் அடிப்படையில் இந்நூலாசிரியர் பயன்படுத்திய நோக்கு புலப்படுகிறது.

திருக்கோவை:

"ஒண் தீந்தமிழின்துறை வாய் நுழைந்தனையோ" என்று அகத்திணைக்கு மறு பெயர் தமிழ் என்னும் கருத்தை விளக்கத் திருக்கோவையை மேற்கோள் காட்டுகிறார்.

சிலப்பதிகாரம்:

பாலைக்கு விளக்கம் தருகின்றபொழுது சிலப்பதிகாரத்தை மேற்கோள் காட்டுகிறார்.

"வேலைங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்

தானலந் திருகத் தன்மையிற் குன்றி

முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து

பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப் - 1595-9)

இயல்பு மாறித்தோன்றும் நிலச் செயற்கையே பாலைத் திணைக்கு இடமாம்.

கிரேக்க இலக்கியம்

ஆன்லிச்சு என்னும் அறிஞனின்இ "பண்டைக் கிரேக்க நாட்டின் பால் வாழ்க்கை" என்னும் நூலிலிருந்து அகத்திணை இலக்கியத்திற்கு மேற்கோள் காட்டும் விதம் வியப்பிற்குரியது.

வழிகாட்டுதல்

கற்றுத் துறைபோகியவர்கள் தங்களின் அறிவால் சமுதாயத்தைப் பற்றி அளந்து கூறுகின்றனர். அவ்வளவே நின்றுவிடாமல் ஒவ்வொரு மனிதனுக்கும் நோக்கமும்இ சிந்தனை ஆற்றலும் வேறுபடும் என்பதாலும்இ அதனையும் தமிழுலகம் பெற்றுத் திகழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தால் எதிர்கால சந்ததிகளுக்கு வழிகாட்டுகின்றனர். வ.சுப. மாணிக்கனாரும்இ

"சங்க இலக்கியத்தில் அகத்திணைப்பொருள் பெற்றிருக்கும் மேம்பாட்டினை மட்டுமோ அறிகின்றோம்? சங்க காலப் பண்பை ஆராய்குநர் முதற்கண் ஆராய வேண்டுவது அகத்திணை என்பதும்இ அகத்திணையைக் கற்று ஓர்ந்து நுணுகி ஒரு தெளிவு பெற்றாலல்லதுஇ பண்டைப் பெருந்தமிழினத்தின் நாகரிகச் சால்பிணை நாம் கண்டவர்கள் ஆகோம் என்பதும் புலனாகவில்லையா?" (ப-8) என்று கேட்பதன் மூலம் வருங்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டுகிறார் என்பது புலனாகிறது.

தொகை வகைப் பாகுபாடு

"அகநானூறுஇ நற்றிணைஇ குறுந்தொகை என்ற முதன் மூன்று தொகைகளும்இ தொகை முறையில் ஒன்று போல்வனவே. இவற்றுள் அடங்கிய பாட்டுக்களைப் பாடினோரும் பலர். அவர் பாடிய அகத்துறைகளும் பல. இங்ஙனம்

ஒத்த அமைப்புடையவை ஒரு தொகையாகாது. மூன்று தொகைகள் ஆயதற்குக் காரணம் அடிக்கணக்கே என்பது அறிந்த செய்தி. பாடினோர் அடிக்கணக்கை மனத்தில் வைத்துப் பாடவில்லை என்பதும் அடியெல்லை வகுத்துக் கொண்ட திறம் தொகுத்தோர்க்கு உரியது என்பதும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். கடலால்இ கறையானால்இ அயல் நாகரிகத்தால் தமிழ் மக்களின் பேணா பெரும் பேதைமையால்இ ஐயகோ! அழிந்து போய நூல்கள் அளவிலவே! எஞ்சிய சில நூற்றுப் பாடல்களையேனும் தேடித் தொகுக்க வேண்டும். தொகுத்துக் காக்க வேண்டும் என்னும் துடிப்பு அன்றொரு நாள் எழுந்தபோது இத்தொகை நூல்கள் உருவாகின. சிதறிக்கிடந்த தனிப்பாக்களுக்கு நூல் வடிவருளிய நன்மக்கள் அனைத்துப் பாடல்களையும் ஒரு தொகையாக்கின் பெரிதாய் விரிந்து பரவலற்று மீண்டும் அழியினும் அழியும் அன்று அஞ்சிய நல்லச்சமேஇ தொகை பலவாயதற்குக் காரணம் என்று கருதலாம்“ (ப.8-9)

என்று தொகை நூல்களின் வகைக்கும் காரணம் கூறும் பாங்கு அவரது நுண்ணறிவுத்திறனை வெளிப்படுத்துகிறது.

உத்திமுறைகள்

படைப்பாளர்கள் பெரும்பாலும் கடிதமுறைஇ உவமைஇ எடுத்துக்காட்டுஇ உரையாடல் தன்மைஇ வருணனைஇ ஆசிரியர் கூற்று போன்ற பலவகையான முறைகளைக் கையாண்டு தாம் கூறவரும் கருத்தை நகர்த்திச் செல்வர். இதனுடன் வ.சுப.மாணிக்கனார் தம் அகத்திணை ஆய்வுக்கு வினா-விடை முறையையும் கையாள்கிறார்.

பலவகை ஐய வினாக்களை அடுக்கி அவற்றிற்கு விடை காணும் விதமாய் ஆய்வினைக் கொண்டு செல்கிறார்.

"அகத்திணை குறித்து ஐய வினாக்களை அடுக்கிச் சொல்லுதலோ எளிது. அறிவொக்கும் விடைத் தெளிவு காண்பது அத்துணை எளிதன்றேனும்இ காண முயல்வதும்இ முயல்விப்பதும் இவ்வாராய்ச்சியின் பாடாகும்" (ப-23)

அகத்திணை இலக்கணம் யாது? அகத்திணை எழுவகைப்படும் என்ற பாகுபாடு இசையுமா? தமிழ் மொழிக்கண் அகத்திணை நூல் பிறத்தற்கு உதவிய சூழ்நிலைகள் யாவை? அகத்திணைக்கு விதிகள் வகுத்தவர் யாவர்? போன்ற பல வினாக்களை எழுப்பி விடை தருகின்றார்.

தனித்தன்மை

இவர் கையாள்கின்ற சொற்கள் தனித்தன்மை உடையவை "உறழ்கூற்று" என மாறுபட்ட கருத்து என்பதைப் புதிய சொல் கொண்டு வெளிப்படுத்தும் பாங்கும் சிறப்பு.

தொல்காப்பியருக்குஇ "அகத்திணைத் தொல்லாசிரியர்" என்று பெயர் கூறுகிறார்.

"ஒப்புப" - "காதற் பறையை" "சொற்பெய்தல்" "மொழிப்புண்" போன்ற சொற்கள் அவரது தனித்தன்மையைக் காட்டுகின்றன. கண்ணகியைக் கூறும் பொழுது - "உணர்ந்து அடங்கிய அறிஞள்" என்று குறிப்பிடுகின்றார்.

உவமை

புலமையாளர்களைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவர்கள் கையாளும் உவமை முறை என்பது தெளிவு.

"நிலையா நீரில்லா நிலத்திலிருந்து நீடித்து நிலைக்கும் பன்னூறு பாலைப் பாடல்களை விளைவித்துக் கொண்ட சங்க காலச் சொல்லேருழவர்களின் இலக்கிய உழவு அறிவின் கொழுமுனைக்கு ஓர் எடுத்துக்காட்டு" (பக்-24-25)

நிலத்தை உழவன் ஏர் (கலப்பை) கொண்டு உழுது பண்படுத்துதல் தொழில். அதனைக் கவிஞன் சொல் கொண்டு பிறர் மனதைப் பண்படுத்துகிறான்இ என்பதை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

உரைத்திறம்

சங்ககாலம் பற்றிய சிந்தனை உயர்வைஇ சங்க காலப் புலவர்களின் நற்பண்புகளைக் கூறுமிடத்து ஆசிரியரது உரை மிளிர்கின்றது.

"இடைக்காலத்தவரும்இ இன்றுள்ளவரும் களவுக்காமம் பாடுவதற்கு ஒப்புவரோ! வீண் என்று கருதார்கொல்!

சங்க காலம் இயற்கைக் காலம். இவ்வுலக வாழ்வை மதித்துப் போற்றிய இன்பக்காலம். ஆதலின் காதல் பாடுவதை வாழ்வு பாடுவதாகவும்இ காதற் பெண்களைப் பாடுவதை நல்ல இல்லறத் தாயார்களைப் பாடுவதாகவும் சங்கச் சான்றோர் கருதினார்" என்று சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களுக்கும்இ பாடிய புலவர்களுக்கும் சிறப்பினைக் கூட்டுகின்றது அவரது உரைவிளக்கம்.

"தமிழ்க் காதல்" என்னும் நூலில் வ.சுப. மாணக்கனாரின் சிறந்த உரைத்திறத்தை அறியமுடிகிறது.

உரையாசிரியரின் கூற்றையும் விட தெளிவுடையதாக அமைகிறது. படிப்பவருக்கு எளிதில் புரியும் விதமாக உரையாற்றுகின்ற நிலையைக் காணமுடிகிறது.

"பரத்தமை தாங்கலோ இலனென வறிது நீ

புலத்தல் ஒல்லுமா மனைகெழு மடந்தை" (அகம்-36)

இப்பாடலுக்கு விளக்க உரை தரும் விதம் இவரது ஆளுமையைப் புலப்படுத்துகிறது.

”தலைமகனது புறப்போக்குத் தாங்க இயலவில்லையே என்று ஒரு தலைவி மிக வருந்துகின்றாள். எவ்வாற்றானும் அவள் மனம் இசையவில்லை. இதன் விளைவு என்னாம்? குடும்பம் வறுமைப்படும்? குழந்தைகள் மெலிவெய்தும்இ இல்லறம் வற்றிப்போம். ஆதலின் அறிவுடைத் தோழி பிடிவாதத் தலைவியை இடித்துரைக்கின்றாள். பொறுக்க அறியாமையினால் கெட்ட குடிகளைக் காணாயோ என்று எடுத்துக் காட்டுகின்றனள். பொறுப்பதே மனைவியின் பொறுப்பு என்பது தோழியின் நல்லுரை. இல்லறப் பிணிப்பிற்குப் பொருட்பிணிப்பு ஒரு காரணம்” என்பதை எடுத்துரைக்கிறார்.

வ.சுப. மாணிக்கனார் தமிழ் இலக்கியங்களின் மீது கொண்ட விருப்பமே தமிழ்க்காதல் என்னும் நூலாய் உருவானது. இவர் எழுத்தாளுமைப் பண்புகள்இ கருத்தாளுமைப் பண்புகள் எனப் பலவிதமான பரிமாணங்களைக் கொண்ட சிறந்த ஆளுமைத்திறன் உடையவர் என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் மறுக்காது.

புதவிக்குப் பெருமை சேர்த்த மாணிக்கச் செம்மல்

முனைவர் **கடலூர் மணிமாறன்**

இலக்கியமும் இலக்கணமும் முழுதும் கற்றாய்;
எல்லையிலாப் பெரும்புலமை இனிதே பெற்றாய்;
கலங்காமல் மயங்காமல் ஆய்வின் மூலம்
கவின்தமிழ்க்கே மணிமுடிகள் சூட்ட லானாய்;
நலம்சேர்த்தாய்; தமிழ்க்காதல் வள்ளு வத்தை
நற்றமிழ்த்தாய் கண்ணிரண்டாய் நல்க லானாய்!
பலருக்கும் வாழ்வளித்தாய்; பண்பால் அன்பால்
பயின்றோரின் உள்ளமெலாம் மகிழச் செய்தாய்!

சங்கநெறிச் சால்புகளைச் சாற்றி வந்தாய்;
சலியாத உழைப்பாலே பனுவல் தந்தாய்;
மங்காத மாத்தமிழின் மேன்மைக் காக
மாணிக்கக் குறள்தந்த மாணிக் கம்நீ!
வெங்கொடுமை தமிழுக்கே இழைத்தோர்வீழ
வீறார்ந்த புதுவிளக்கம் அளிக்க லானாய்;
எங்கும்வாழ் தமிழினத்தார்எழுச்சி கொள்ள
இனியபல கருத்துவிதை ஊன்றி வந்தாய்!

தமிழாய்வில் தனிக்கவனம் செலுத்தி வந்தாய்
தக்கோரை உருவாக்கிப் பெருமை கொண்டாய்!
'தமிழ்த்தாத்தா' என்றழைக்கும் சாமி நாதர்
தனிச்சிறப்பை உளமகிழப் பாடி நின்றாய்;
தமிழ்க்காதல் எனும்தலைப்பில் முனைவர்ஆய்வைத்
தகவுறவே ஆங்கிலத்தில் அளித்துப் பெற்றாய்!
தமிழ்நலமும் தமிழ்வளமும் சிறக்க வாழ்ந்தாய்;
தாம்பிறந்த சிவபுரிக்கே புகழைச் சேர்த்தாய்!

சொல்லாய்வுச் சுடரானாய்; 'ஈனில்' என்றாய்
சுவையாக உரையாற்றும் கலையில் தேர்ந்தாய்!
தில்லையிலும் மதுரையிலும் பணியை ஆற்றித்
தேமதுரத் தமிழ்காத்தாய்; தமிழி னத்தார்
தொல்மரபை, பெருமையினைத் துலங்கச் செய்தாய்!
துணைவேந்தர்பதவிக்கே பெருமை சேர்த்தாய் ;
நல்லியல்பால் இளையோரை வழிந டத்தி
நற்றமிழின் ஆர்வத்தைத் தூண்டி வந்தாய்!

அழகப்பர்கல்லூரி மேன்மை எய்த
ஆளுமையால் தமிழ்த்துறையைச் சிறக்கச் செய்தாய்!
அழகப்பர்அளவற்ற கொடையின் மாண்பை
அழகொளிரும் பாக்களிலே நிலைக்கச் செய்தாய்!
குழல்யாழும் தோற்கின்ற வண்ணம் காரைக்
குடியினிலே கம்பர்சீர்பரவச் செய்தாய்;
முழக்கமிட்டாய் அரிமாவாய்! அறிஞர்போற்றும்
மூதறிஞர்வ.சுப.மா என்றும் வாழ்வாய்!.

inam:International Research E_Journal of Tamil Studies ISSN : 2455-0531
February 2017, Issue:8 www.inamtamil.com

மதிப்பிடப்பெற்றது

மனிதநேயக் கல்வியின் அவசியம்

முனைவர் **ப.சண்முகராணி**
முனைவர்பட்ட மேலாய்வாளர்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

முன்னுரை

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிதுகாண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகிலேன் (தாயுமானவர், சித்தர்கணம்:4)

எனும் பாடல் அடிகள் மனிதப் பிறவியின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றன. நன்மையையும் தீமையையும் பகுத்தறிந்து ஒற்றுமையைப் பேணி வாழ வழிவகுக்கும் நல்ல அறிவைத் தருவது கல்வி. அதனை முழுமையாகச் செயல்படுத்த உதவுவது இலக்கியக் கல்வி. இக்கல்வியே மக்களிடம் புதைந்து கிடக்கும் மனிதநேயத்தை வெளிக்கொண்டு வருகிறது. ஒரு சமூகத்தின் அங்கங்களாகக் குடும்பம், கல்வி, அரசு முதலான சமூக நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் கல்வி என்பது ஒரு சமூகத்தின் இளைய தலைமுறையினர் தன் மூத்த தலைமுறையினரிடமிருந்து பெறும் மரபுகள், பழக்கவழக்கங்கள் பண்பாடு போன்றவற்றை அதன் இயல்பு மாறாமல் கற்றுக்கொள்வதை உணர்த்துகிறது. கல்விவழிப் பெறப்படும் அறிவே தனிமனித பொருளாதார நிலையையும் நாட்டின் பொருளாதார நிலையையும் நிர்ணயித்து வருகிறது. பல்வேறு தொழில் நிறுவனங்களில் பணியாற்றத்தக்க கல்வியாளர்களை உருவாக்கும் உற்பத்திக் கருவியாகவும் கல்வித்துறை செயல்பட்டு வருகிறது. இன்றைய மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு வசதிகளைப் படைத்துத் தருவது இன்றைய நவீனக் கல்விமுறை. ஆனால் இன்றைய மாணவர்கள் பொருளையே முதன்மையாகக் கருதிக் கல்வி கற்கின்றனர். இன்றைய நவீனக் கல்விமுறையில் பணம் மட்டுமே கல்வியின் தரத்தையும் ஒருவனின் வாழ்வையும் நிர்ணயிக்கிறதே தவிர மனிதநேயமும் பழம்பெருமையும் அழிந்து வருகின்றன. இதனை மாற்றுவதற்கு இன்றைய மாணவர்களிடையே மனிதநேயக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட இலக்கியத்தை கற்றுக் கொடுப்பதனால் மட்டுமே அழிவின் விளிம்பில் இருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும்.

"ஒரு பெரிய மரத்துக்கு எத்தனைக் கிளைகள் இருந்தாலும் அதன் ஆணிவேரின் மூலம் கிடைக்கின்ற ஊட்டம் கிளைகள் அனைத்துக்கும் ஊட்டமாக அமைகிறது. வேரின் நலனே கிளைகளின் நலனாகவும் இலை, தலை, பூ கனிகளின் நலனாகவும் வந்து விரிகிறது. ஒருகிளையின் ஒரு தளிரில் வாட்டம் தென்படுகிறது என்றால் அந்த மரத்தின் வேரில் ஏதோ குறை ஏற்பட்டிருக்கிறது என்பது பொருள்" (சாலினி இளந்திரையன்:57).

இதனைப் போன்றே ஒரு சமுதாயத்தில் களவு, கொலை, கொள்ளை போன்ற குற்றங்கள் அதிகமாக நடக்கிறது என்றால் அச்சமுதாயத்தில் மனிதநேய உணர்ச்சி இல்லாமல் போனதே அதற்குக் காரணம். அதனால்தான் வாழ்க்கை இலக்கியங்களுக்கெல்லாம் அடிப்படை இலக்கணமாகவும் அவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஊட்டமாகவும் மனிதநேயத்தை வலியுறுத்துகிறார்கள் தமிழர்கள். எனவே, மனிதன் மனிதநேயத்துடன் வாழவேண்டிய தேவை ஏற்படுகின்றது. கற்பித்தல் நிலையில் அதனை வலியுறுத்தும் பொழுதான், மனிதநேயம் வளரும் என்பதை இக்கட்டுரை பேசுகிறது.

கற்றல் - கற்பித்தல்

கற்றல் என்பது அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்களை உணர்ந்து வாசித்து மனதில் பதியவைத்துக் கொள்வதாகும். கற்றல் மாணவர்கள் மனதில் பல்வேறு நடத்தை மாற்றங்களுக்கு வழிவகுக்கும். இந்தக் கற்றல் அனுபவங்கள் முயற்சி, பயிற்சியின் விளைவாக மேம்படக் கூடியவை. இவை சிந்தனையை வளர்க்கவும் தானாகக் கற்கவும் தூண்டக் கூடியவை. கற்பித்தல் என்பது பாடப்பொருளை மாணவர்களிடம் அறிமுகப்படுத்துவது. பாடப்பொருளின் இயல்பு, பண்பாடு போன்றவற்றை மாணவர்களின் மனதில் பதிய வைப்பது. மேலும், ஆழமாக நிலை நிறுத்துவது என்ற நடைமுறைகளைக் கொண்டதாகும். மாணவர்களின் கற்றல்முறை தேவைகளைக் கருத்தில் கொண்டு கற்பித்தல் திட்டமிடப்பட வேண்டும். இன்றைய சூழ்நிலையில் கல்விநிலைக்கு ஏற்றவாறு பாடங்கள்,

எளிதிலிருந்து ⟶ கடினத்திற்கு
தெரிந்ததிலிருந்து ⟶ தெரியாததற்கு
புரிந்ததிலிருந்து ⟶ புரியாததற்கு

என அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் கற்பதும், கற்பிப்பதும் முறையாகவும் எளிமையாகவும் அமையும். நமது கல்விநிலையை,

1. தொடக்கக்கல்வி
2. நடுநிலைக்கல்வி
3. உயர்நிலைக்கல்வி
4. மேல்நிலைக்கல்வி
5. இளங்கலைப் பட்டபடிப்பு நிலை
6. முதுகலைப் பட்டப்படிப்பு நிலை
7. ஆய்வு நிலை

எனப் பகுக்கலாம். பாடத்திட்டம் என்பது கற்பித்தலின் நோக்கம், கற்றலின் குறிக்கோள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட வேண்டும். வகுப்புத்தோறும் கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறவேண்டும். ஒவ்வொரு கல்வி நிலைக்கும் பாடத்திட்டங்கள் வகுக்கப்படும்போது முதலில் பயிற்றுவிக்க வேண்டிய பாடம் எதுவெனத் தெளிவாக வரையறுக்க வேண்டும். பாடத்திட்டத்தின் குறிக்கோள்களை ஒவ்வொரு வகுப்புக்கும் கற்பிக்க வேண்டும். மேலும் பாடத்திட்டம் எவ்வாறு அமைய வேண்டும், எந்த வகையான சொற்களைப் பயன்படுத்த வேண்டும். சமூகத்தின் தேவைக்கேற்பக் கல்வியின் நோக்கங்கள் மாறிக்கொண்டே வரும் சூழ்நிலையில் அதற்கு ஏற்றார்போல் கல்வியின் தேவைகளும் பாடத்திட்டங்களும் தொடக்கநிலையிலிருந்து உயர்நிலை வரை மாணவர்களைப் பண்படுத்தி மனிதநேயமிக்க மனிதனாக வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும்.

மொழிக்கல்வி

பொதுவாக மொழிகற்றல் என்பது முற்காலத்தில் இலக்கியம் கற்பதாக இருந்தது. சமுதாய வளர்ச்சி, அதற்கேற்ற தேவைகள், மொழிப்பயன்பாடு போன்றவை மொழி கற்பித்தலில் பல மாற்றங்களை ஏற்படுத்தின. இலக்கியத்தைக் கற்பது போலவே இலக்கணத்தைக் கற்பதும் இன்றியமையாதது. இன்று மொழிக்கல்வி தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப வளர்ந்து வருகிறது. மொழிக் கல்வியில் ஒவ்வொரு கல்வி நிலைக்கும் ஏற்றவகையில் மொழியை இலக்கியத்தை, இலக்கணத்தைக் கற்பதும், கற்பிப்பதும் மிகவும் முக்கியமானது. மொழியின் அமைப்பு ஒவ்வொரு கல்வி நிலைக்கும் எவ்வளவு தேவை, அவற்றை எவ்வாறு பங்கிடுவது என்பதைப் பற்றிய தெளிவான திட்டமிடுதல், மொழியின் அடிப்படைத் தன்மைகளான கேட்டல், பேசுதல்

எழுதுதல், வாசித்தல் போன்றவற்றில் தேர்ச்சி பெறுவதற்கான பயிற்சிகளையும் முயற்சிகளையும் இவற்றோடு இணைத்துக் கொள்வது மிகவும் தேவையாகும். இந்தத் திட்டமிடல் ஒவ்வொரு கல்விநிலையின் மொழிக்கற்பித்தல், நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொடக்க நிலையிலிருந்து ஆய்வுநிலை வரை அமையவேண்டும். எனவே, அதற்கேற்ற வகையில் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் வகைப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும். தொடக்கக் கல்வியில் இலக்கிய அறிமுகம், இலக்கிய நுகர்வு, இலக்கியமரபு என்று தொடங்கும் இலக்கியக்கல்வி உயர்கல்வியில் இலக்கியங்களின் மொழிவளம் அவற்றின் பயன்பாட்டை நோக்கமாகக் கொண்டு இலக்கியங்களைப் படைத்தல், திறனாய்வு செய்தல் என்ற நிலைக்கு மாறவேண்டும். தங்கள் கருத்துக்களைப் பிழையின்றி எழுதவும், பேசவும் துறைசார்ந்த கருத்துக்களையும் பொதுவான சிந்தனைகளையும் தெளிவாக வெளிப்படுத்தும் விதமாகவும் பிறதுறை அறிவைப் பயன்படுத்தும் நிலைக்கு மாணவர்களைப் படிப்படியாக உயர்த்த வேண்டும். அப்பொழுதுதான் ஒரு கல்வி முழுமை பெறும்.

இலக்கியக்கல்வி

> "உலகை நீங்கள் மாற்றிவிடுவதற்குக் கல்வி என்ற சக்திவாய்ந்த ஆயுதத்தை விட வேறு சிறந்தது எதுவுமில்லை" (பொன்மொழிகள், ப.75)

என நெல்சன் மண்டேலா கூறுவது கவனிக்கத்தக்கது. மாணவர்களுக்கும் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கும் பயனுள்ள விரும்பத்தக்க பல நடத்தை மாற்றங்களைத் தோற்றுவிப்பதே உண்மையான இலக்கியக் கல்வி. கல் என்றால் தோண்டி எடுத்தல் எனப் பொருள். மனிதனுக்குள் புதைந்து இருக்கும் திறமையை வெளிக்கொண்டு வரும் தீவிர முயற்சியே கல்வியாகும். இதனை

> கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
> மாடல்ல மற்றவை யாவை (குறள்.400)

என்றார் வள்ளுவர். "கல்வி என்பது ஓடிவரும் வெள்ளத்தினாலும் அழிக்க முடியாது. வெந்து சாம்பலாகும் தீயினாலும் பற்றமுடியாது. வேந்தனாலும் கவரமுடியாது. கொடுக்க கொடுக்க நிறையுமே தவிர ஒருபோதும் குறையாது. காத்து வளர்ப்பதற்கு மிக எளிதானது என்று பட்டினத்துப்பிள்ளை கல்விச் செல்வத்தின் அழியாத்

தன்மையைத் தெளிவுபடுத்துகிறார்” (சித்தர் பாடல்கள்:33-35). கல்விச் செல்வத்தின் புகழ் காலத்தால் மாறாதது அத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியின் பெருமையை

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறம்.183)

என்ற புறநானூற்றுப்பாடல் கல்வி ஒன்றுதான் மனிதனை மனிதனுக்கு நிகராக மதிக்கும் பண்பை வளர்க்கும் எனத் தெளிவுபடுத்துகின்றது. இந்தப் பாடலின் மூலம் எதிர்காலத்தை உருவாக்கும் நிலையில் உள்ள மாணவர்களுக்குக் கல்வியின் நன்மையை எடுத்துக்கூறி கல்வியினால் நாட்டையும் வீட்டையும் வளமைப்படுத்தலாம். கல்வி காலத்தாலும் மொழியாலும் பண்பாலும் பழக்கவழக்கத்தாலும் மனிதனை உலகிற்கு அடையாளம் காட்டும். கல்வியே நிலையான அழியாத செல்வம் கல்வி இல்லாவிட்டால் வேறு என்ன செல்வம் இருந்தாலும் அதனைக் காப்பாற்ற முடியாது. எனவே, மாணவர்களின் உள்ளத்தில் மனிதநேயத்தை வளர்க்கும் மொழியின் சிறப்பையும் இலக்கியத்தின் சிறப்பையும் பற்றி எடுத்துக்கூற வேண்டும்.

தமிழ் இலக்கியங்களைக் கற்பிக்கும்போது பண்டைய இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், தற்கால இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும். இவற்றைப் போன்று செய்யுள் கற்பிக்கும் போது ஓசைநயம், சொற்சுவை, பொருள்சுவை, எழில்சுவை இவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கிற பண்பாடு அறநெறி போன்றவற்றையும் எடுத்துரைக்க வேண்டும், இவற்றோடு இலக்கியப்பற்று, ஆய்வுச் சிந்தனை, படைப்பாற்றல் போன்ற பண்புகள் மேலோங்கும் வகையில் கற்பிக்க வேண்டும். ஏனெனில் இலக்கியங்கள் மக்களின் மொழி, சமுதாயம், அரசியல், பண்பாட்டுத் தகவல்களை வழங்குவதில் முக்கியத்துவம் பெறுபவை. இத்தகு இலக்கியங்களை மாணவர்களே நேரடியாகப் படித்து உணரும் அனுபவத்தையும் அறிவையும் இலக்கியக் கல்வி தரும் வகையில் மாற்ற வேண்டும். அதற்கேற்ற வகையில் மாணவர்களை அனுபவமிக்கவர்களாக, பன்முகப் பார்வை கொண்டவர்களாக, முழுமையானவர்களாக மாற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றை உயர்கல்விச் செயல்பாட்டில் கொண்டுவரப்பட வேண்டும். அதனுள் நுண்ணிய ஆய்வுப்பார்வையை மாணவர்கள் பெறும் வகையில் அவற்றை நடைமுறைப்படுத்த

வேண்டும். அதற்கேற்ற வகையில் நமது பாடத்திட்டங்கள் பாடநூல்கள் மாற்றப்பட வேண்டும். இவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டால்,

1. முன்னோர்களின் வாழ்க்கைநெறியைப் புரிந்து கொள்ளுதல்
2. பண்பாடு, கலாச்சாரத்தை அறிந்து கொள்ளுதல்
3. தனிமனிதனின் பண்பை அறிதல்
4. உலக அறிவைப் பெறுதல்
5. படைப்பாற்றலைப் பெறுதல்

ஆகியன இயல்பாக மாறும்.

> “உலகம் போரின்றி வாழவும் உலகமக்களிடையே அன்பு தழைக்கவும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாது ஒழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்” (பொன்மொழிகள், ப.76)

என இரா.சக்குபாய் கூறுகிறார். இதன்வழி மனிதனிடத்தில் அவசியம் இருக்கவேண்டிய பண்புகளில் மிக முக்கியமான பண்பு மனிதநேயம். இக்குணத்தை இறைவன் சிலரிடத்தில் இயற்கையாகவே அமைத்திருப்பதால் மனிதநேயம் அற்றவர்கள் செய்யும் கொடுமைகளின்போது மனிதநேயம் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டவர்க்கு உதவியாக இருந்து அவர்கள் இந்த உலகில் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கிறார்கள். உலகத்தில் அனைவரிடமும் மனிதநேயம் இல்லாமல் போனால் மனித மனம் என்றோ அழிந்திருக்கும். நாகரிக வளர்ச்சியில் பின்தங்கிய காலத்தில் மலர்ந்த மனிதநேயப் பண்பைவிட இக்காலச் சூழலில் மனிதன் மற்ற உயிர்களையும் தன்னையும் நேசிக்கும் பண்பைக் குறைத்துக் கொண்டே வருகிறான். தொய்வடையும் மனிதநேயப் பண்பை, சட்டத்தையும் அதிகாரத்தையும் பணபலத்தையும் கொண்டு வலுப்பெறச்செய்ய முடியாது. தற்போது பல பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருப்பது காதல். காதல் என்ற ஒன்று இல்லையென்றால் மனிதமனம் என்றோ மீண்டும் விலங்கின் தன்மைக்கே சென்றிருக்கும். காதல் என்கின்ற சொல் குறுகிய வட்டத்திற்குள் சிக்கிக்கொள்ளும்போதுதான் தவறானதாகவும் இழிவானதாகவும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

> மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
> செவ்வி தலைப்படு வார் (குறள்.1289)

எனும் குறள் மனமே மனிதநேயத்திற்கு அடிப்படை என்கிறது. இருப்பினும் அடுத்த அறிவைத் தேடும்போது மனது தன்சுயத்தை முழுமையாக மெல்ல மெல்ல தனக்குத் தெரியாமலே இழந்து கொண்டிருக்கிறது. இதனை மாற்றுவதற்கு இலக்கியத்தில் இருக்கும் மனிதநேயமிக்க கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா (புறம்.192)

எனக் கணியன் பூங்குன்றனாரும்,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் (திருவ.3471)

என இராமலிங்க வள்ளலாரும்,

வயிற்க்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம் (பாரதியார் கவிதைகள்:249)

எனப் பாரதியாரும் உலக மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஓங்கவும் மனிதநேயம் வளரவும் மனிதநேயத்தோடு வாழ வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இல்லையென்றால் உலகம் போரினால் அழிந்துவிடும். சங்க இலக்கியங்களும் மனிதநேயத்தைப் படம்பிடித்துக் காண்பிக்கின்றன.. அவற்றுள் சில கருத்தியல்கள் வருமாறு:

முல்லைக்கொடிக்கு தேர் கொடுத்த பாரி மன்னன் அடர்ந்த சோலை வழியாகத் தேரில் சென்று கொண்டிருந்தான். அப்போது அவனது தேர் செல்லும் வழியை ஒரு முல்லைக்கொடி வழிமறித்துப் படர்ந்திருந்தது. அதனால் தனது தேரை முல்லைக்கொடி விரும்பியதாகக் கருதி அதற்கு தனது பெரியதேரை விட்டுச் சென்றான் மன்னன். தான் நெடுவழிதூரம் நடந்து செல்லவேண்டும் என்பதையும் பொருட்படுத்தாமல் ஒரு முல்லைக்கொடியின் விருப்பத்தை நிறைவேற்றினான் என்று நச்சினார்க்கினியர் தன் உரையில் குறிப்பிட்டுள்ளார் (பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.161).

மயில் குளிரில் நடுங்குவதைக் கண்டு அதற்குப் போர்வை தந்த மன்னன் பேகன் பிற உயிர்களிடத்தும் மனிதன் எப்படி மனிதநேயத்தோடு நடத்துகொள்ள வேண்டும் என்ற கொள்கையை ஆற்றுப்படை (சிறுபாண்:85) சுட்டுகிறது.

தமிழர்களின் போர்நெறி என்றைக்குமே எதிர்பாராமல் தாக்குவதையோ, எதிரியை ஏமாற்றித் திசைதிருப்பி விட்டுத் தாக்குவதையோ அனுமதிக்கவில்லை. தமிழர்களுக்குப் போர் அறம் வகுத்த முன்னோர்கள் அதை ஏழு பிரிவுகளாக வகுத்து

வைத்தார்கள். அவைகளில் முதலாவது பிரிவு வெட்சித்திணை என்று குறிக்கப்படுகிறது. எதிரியின் மீது போர்த்தொடுக்க ஆயத்தமாகிறோம் என்பதை அந்த எதிரிக்குத் தெரிவிக்கின்ற முறையில் அவனுடைய ஆடுமாடுகளைக் கவர்ந்து செல்லும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த நிகழ்ச்சியை முதன்மைப்படுத்தி வலியுறுத்துவதன் மூலம் முன்னறிவிப்பு இல்லாமல் எதிரியின் மீது போர்த்தொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது புறநானூறு.

இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் மாலை நேரங்களில் போர் செய்வது தவிர்க்கப்பட்டது. பெண்கள், குழந்தைகள் மீது போர் புரிவது தவிர்க்கப்பட்டது. நிராயுதபாணியாகப் போர்க்களத்தில் நின்ற தனது எதிரியான இராவணனைக் கூட இராமன் இன்று போய் நாளை வா என்று கூறுவதிலிருந்து போரிலும் மனிதநேயம் மதிக்கப்பட்டதை அறியமுடிகிறது.

பொருளைத் தேடிச் செல்வதே தானும் தன்னுடன் இருப்பவர்களும் உறவினர்களும் சேர்ந்து மகிழ்ச்சியாக வாழத் தான் என்று இலக்கணம் வகுத்துக் கொண்டவர்கள் பழந்தமிழர்கள். உழைத்துத் தேடிய பொருள், பரிசாகப் பெற்று வந்த பொருள் என்கிற வேறுபாடு இல்லாமல் கிடைத்த பொருளை ஒவ்வொருவரும் பகிர்ந்து கொடுக்கும் நெறி சங்கத் தழிழர்களின் வாழ்க்கையில் இருந்தது. இது மனிதநேயமிக்க நெறிகளில் முதன்மையான ஒன்றாக இருந்திருக்கிறது. குமண வள்ளலிடம் பெரும் பொருளைப் பரிசாகப் பெற்று வந்தார் புலவர் பெருஞ்சித்திரனார். இந்தப் பரிசைப் பெறுவதற்கு முன்பு அவருடைய வீட்டை வறுமை வாட்டி எடுத்தது. அவரின் வாழ்க்கை ஒருநேர உணவிற்குக்கூட வழியில்லாத நிலையில் இருந்தது. இந்நிலையில் அவர் பெற்றுவந்த பொருளைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்துள்ளார். இதனை,

இன்னோர்க்கு என்னாது எண்ணொடும் சூழாது

வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்,

எல்லோருக்கும் கொடுமதி - மனைகிழ வோயே

பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்

திருந்துவேல் குமணன் நல்கிய வளனே (புறம்.163)

எனும் பாடல் காட்டும். மனிதநேயம் படைத்த மனிதனாக மனைவியை உற்சாகமாக அழைத்துக் கொடு கொடு, எல்லோருக்கும் கொடு, உற்றார் உறவினர்க்கும் கொடு, நம்முடைய வறுமைக்காலத்தில் நமக்குத் தந்து உதவியவருக்கும் கொடு, யாருக்குக்

கொடுப்பது என்று யோசிக்க வேண்டாம். எல்லோருக்கும் கொடுத்து மகிழ்ச்சிகொள் என்கிறார். மனிதநேயமிக்க மனிதன் ஒருவன் மற்றவர்களுக்கு இன்பம் குவிப்பவனாக வாழ்வதற்கு அவனிடம் பெரும்பொருள் இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்கிறது. இப்புலவரின் வாழ்க்கை. மனிதநேயம் என்பது எந்த நிலையிலும் மற்ற உயிர்களின் துன்பத்தைப் போக்கி அவர்களின் முகத்தில் இன்பத்தை ஏற்படுத்துவது என்ற கருத்தை மாணவர்களுக்குக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களிடம் மற்றவர்களுக்குக் கொடுக்கும் பண்பை வளர்க்க முடியும்.

மனிதநேயம்

மனிதநேயம் என்றால் தனக்கு விரும்பும் நன்மைகளைப் பிறருக்குத் தர விரும்புவது, தான் விரும்பாததைப் பிறருக்குத் தர விரும்பாமல் இருப்பதுமாகும். இப்பண்பு இல்லாவிட்டால் மனிதன் மிருகத்தைவிட மோசமான நிலையை அடைவதை அன்றாட வாழ்வில் அதிகமாகக் கண்டுவருகிறோம். இறைவன் மனிதனுக்குப் பயன்படக்கூடிய உறுப்புக்களை தந்து உடலாக மட்டும் அவனைப் படைக்கவில்லை உலகம் இயங்க வேண்டும் என்பதற்காக உடலுடன் பல நல்ல குணங்களையும் தன்மைகளையும் சேர்த்தே மனிதனை உருவாக்கியுள்ளான். மேலும் அன்பையும் அருளையும் கொடுத்து நேசிக்கும் பண்பைக் கொண்டவனாகப் படைத்துள்ளான். மனிதன் மற்ற உயிர்களின் மீதும் அன்பு செலுத்தும் மனப்பக்குவம்தான் இன்னும் மனிதனைத் தன் நிலையிலிருந்து மாறாமல் மனிதனாகவே அடையாளப்படுத்துகிறது. மனிதநேயம் என்பது பிறர் துன்பத்தைக் கண்டு அவருக்கு உதவுவது. பிறருக்காக வாழ்தல், நாடு, இனம், மொழி, வேறுபாடு கருதாது அனைவருக்கும் பொதுவாக வாழும் வாழ்வே மனிதநேயமிக்க வாழ்க்கையாகும். மனிதநேயம் என்ற சொல் மனிதர்களிடையே காணப்படும் நேயத்தைச் சுட்டும். நேயம் என்ற சொல் தற்காலத்தில் நேசம் என்று வழங்கப்படுகிறது. நேயம், நேசம் என்ற சொல்லுக்கு அன்பு என்று தமிழ்ப் பேரகராதி பொருள் தருகிறது (ப.687). இயற்கையோடு வாழ்ந்து நேசித்த மனிதன் தன்னையும் தன்னைப் போன்ற பிற உயிர்களையும் நேசித்ததால் நேயப்பண்பு வலுப்பெற்றிருக்க வேண்டும். மனிதநேயம் தொடர்புடைய பலம்வாய்ந்த குணங்களாக அன்பு, கருணை, இரக்கம் மற்றும் சமூக உணர்வு ஆகியவற்றோடு சகமனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனிதநேயம் எனக் கூறலாம். இதில் இரக்கப்பண்பு என்பது மனிதநேயத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. “விவேகானந்தர் 1893-ல் அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக மதங்களின் மாநாட்டில் அனைவரையும் **சகோதர சகோதரிகளே**

என்று உரையாற்றி உலக மக்களிடையே மனிதநேயத்தை எடுத்துரைத்தார். இந்தக் கருத்தை மாணவனுக்குக் கற்றுக்கொடுப்பதனால் சகமாணவனிடம் மனிதத் தன்மையோடும்; சகோதரத் தன்மையோடும் பழகும் பண்பைப் பெறுவான். அதுமட்டுமின்றி அவர் சென்னைக்கு வந்த போது ஊக்கம் மிக்க அர்ப்பணிப்பு உணர்வோடு வேலை செய்யக்கூடிய நூறு இளைஞர்களைக் கொடுங்கள் உலகையே மாற்றிக் காட்டுகிறேன் என்று விடுத்த சவால் தாரகமந்திரமாக உலகெங்கிலும் ஒலித்தது. அவரும் இளைஞர்களாகிய மாணவர்களைத் தான் கேட்டார். அவர்களிடம் இந்த உலகத்தை மாற்றக் கூடிய விதையைத் தூவினால் மட்டுமே உலகத்தை மாற்ற முடியும் என நம்பினார் இப்படி மனிதநேயமிக்க மனிதர்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதனால் மட்டுமே இந்த உலகத்தை மாற்றமுடியும் என்பது இன்றைய சூழ்நிலையில் மாணவர்களிடம் முக்கியமாக எடுத்துக் கூற வேண்டிய கருத்து.

தகவல் தொழில்நுட்பத்தின் வழி மனிதநேயக் கல்வி

இன்றைய உலகில் கல்வி என்பது ஒரு மனிதனின் அடையாளமாக மட்டுமல்லாது வாழ்வாதாரமாகவும் விளங்கி வருகிறது. மனிதன் தன்னை ஒரு சமூக விலங்காகவும் நாகரிகம் மிக்கவனாகவும் மாற்றுவதற்கு கல்வி மிகவும் அவசியமாகும். ஒரு மனிதன் தன் தாயிடமிருந்து கற்றுக்கொள்ள ஆரம்பித்து பல்வேறு கல்விக் கூடங்களிலும் நிறுவனங்களிலும் தன்னுடைய கல்வியறிவினை அதிகரித்துக் கொள்கிறான். நவீன உலகின் அனைத்து வசதி வாய்ப்புகளும் கல்வியினாலும் அதன் பரிணாம வளர்ச்சியினாலும் உருவாக்கப்பட்டவை. இன்றைய கல்வியின் அபரிதமான வளர்ச்சி உலகின் அனைத்துக் கனவுகளையும் மெய்ப்படச் செய்து வருகிறது. குருகுலவாசமாக இருந்த கல்வி இன்று இணையதளம் மூலம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் தவிர்க்கமுடியாத அங்கமாகிவிட்டது.

மனிதவாழ்க்கை என்பது தலைமுறைகள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும் நெடுங்கதை, நெடுங்கதையின் தொடக்கம் போகப்போக வளர்ந்து விரிந்து முழுமை பெறுவதுபோல மனித இனத்தின் ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையைவிட வளர்ச்சி பெற்றதாகவும் உயர்வு பெற்றதாகவும் விளக்க வேண்டும். வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்ட மனிதனின் வாழ்க்கை வரலாற்றில் முன்னோர்கள் தேடி வைத்த பொருள், புகழ் போன்றவைகளை அழித்துவிடாமல் மேன்மைப்படுத்தி மிகுதிப்படுத்துவதே சிறந்த வாழ்க்கை. இதுபோன்ற பொறுப்புடைய வாழ்க்கையில் சில நல்ல மன ஓட்டங்களையும் மனிதர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறே சங்ககாலத்தில் வாழ்ந்த அதியமான்

என்னும் மன்னனுக்கு அரியவகை நெல்லிக்கனி கிடைத்தது. அந்த நெல்லிக்கனியை சாப்பிடுகிறவர்கள் நெடுங்காலம் வாழ்வார்கள் என்பதை அறிந்தும் தான் உண்ணாமல் தன் அவைக்கலப் புலவலவரான ஔவையார் நெடுங்காலம் வாழவேண்டும். அவரது புலமை நெடுங்காலம் வாழ்வதற்கு அரிய நெல்லிக்கனியைக் கொடுத்தான் மன்னன். அத்தகைய செயல்கள் தான் இன்றைய நிலையில் ஒருபடி மேலே உயர்ந்து தொழில்நுட்பம் வளர்ந்த நிலையில் ஒருவரின் உயிர்போகும் நிலையிலும் அவரது உடல் உறுப்புக்களைக் கொடுத்து உயிர் கொடுக்கும் மனித நேயத்தை வளர்ந்துள்ளது. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்கிறது மணிமேகலை. ஆனால் இன்று உடல் உறுப்புக்களைத் தானம் கொடுப்பவர்களே உயிர்கொடுப்பவர்களாவர். தானம் கொடுப்பவர்கள், பெறுபவர்கள் தொடர்பு கொள்வதற்கும் உறுப்புக்களை கொண்டு செல்வதற்கும் தொழில்நுட்பம் உதவுகின்றது. அதனால் உரிய நேரத்தில் பல உயிர்கள் உயிர்ப்பு பெறுகின்றன. இதுபோன்ற கருத்துக்களை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதனால் தொழில்நுட்பத்தோடு மனித நேயத்தையும் வளர்க்கமுடியும்.

எனினும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் கல்விசார்ந்த தகவல்களைத் திரட்டவும், சேமிக்கவும் முடியும். இணையவழியில் ஆசிரியர், மாணவர்கள் எல்லா தகவல்களையும் எப்போது வேண்டுமானாலும் தங்களுடைய இடங்களிலிருந்து பெறமுடியும். கணிணி, தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பாடங்களையும் பாடங்கள் சார்ந்த விசயங்களையும் மாணவர்களே சுயமாக கற்றுக்கொள்ளும் பொருட்டு தொழில்நுட்பம் அமைதல் வேண்டும். இன்று கல்வியாளர்கள் மத்தியிலும், சில கல்வி நிறுவனங்களை நடத்துபவர்கள் மத்தியிலும் ஒருவாதப் பொருளாக மாறியிருக்கின்றது மத்திய அரசின் புதிய கல்விக்கொள்கை. இக்கொள்கை மாணவர்களை உலகத்தரத்திற்கு ஏற்பவும் வாழும் முறைக்கு ஏற்பவும் நமது மாணவர்களைத் தயார் செய்து, அவர்களை எல்லோருடனும் சமமாக வாழ்வதற்கு அடிப்படையாக வடிவமைக்கப்பட வேண்டும். அப்படி செய்வதினால் மட்டுமே அடிப்படை கல்விநிலையிலிருந்து ஆராய்ச்சிக் கல்வி வரை சமமான கல்விமுறையையும் மனியநேயமிக்க மாணவர்களையும் உருவாக்க முடியும்.

முடிவுரை

கல்வி எப்படி ஒரு மனிதனுக்கு முதுகெலும்பாகவும் மூலதனமாகவும் அமைகிறதோ அதைப் போன்றே தகவல் தொழில்நுட்பமும் கல்வியில் தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்கி வருகிறது. நவீன உலகின் அனைத்துச் செயல்களும் நவீனமயமாக்கப்பட்டு வருவதைப் போன்றே கல்வித்துறையிலும் தகவல்

தொழில்நுட்பம் இரண்டறக் கலந்துள்ளது. இன்றைய கல்விமுறை மரபுவழிக் கற்றல் கற்பித்தல் முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் பல்லூடகக் கல்வியாக வளர்ந்துள்ளதைக் கல்வியின் புரட்சி என்றே கூறலாம். மேலும் எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் வகுப்பறையின்றி, ஆசிரியரின்றி, எவ்விதக் கட்டுப்பாடுமின்றி மாணவர்கள் கல்வியைக் கற்கும் நிலை ஏற்படலாம். இத்தகைய மாற்றம் மாணவர்களின் தேடலுக்கும் அறிவு விசாலத்திற்கும் வேலை வாய்ப்பிற்கும் வேண்டுமானால் பயன் தரலாம். ஆனால் ஒழுக்கம் சார்ந்த சமூக அக்கறையுள்ள மனிதநேயமிக்க ஒரு மாணவனை ஆசிரியர் துணையுடன் கூடிய மரபு வழியில் இலக்கியத்தைக் கற்பதனால் மட்டுமே பெற முடியும்.

துணை நூற்பட்டியல்

1. இராமலிங்க அடிகள், 1987, திருவருட்பா - ஆறாம் திருமுறை, இராமலிங்கர் பணிமன்றம், சென்னை.
2. இராமலிங்கம் பிள்ளை (உ.ஆ.), 2000, திருக்குறள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
3. சாலினி இளந்திரையன், 1995, சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. சுப்பிரமணியக் கவிராயர் சே.நா., 1923, தமிழ்ச்சொல் அகராதி, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.
5. சொக்கலிங்கம். சு.ந., 2009, தாயுமானவர் பாடல் தொகுப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
6. திருமலை மா.சு., 1998, தமிழ் கற்பித்தல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
7. நவீன்குமார் (தொகுப்பு), 1994, உலக அறிஞர்களின் பொன்மொழிகள் 500, நர்மதா பதிப்பகம், சென்னை.
8. பரிமணம் அ.மா., & பாலசுப்பிரமணியன் கு.வெ.(பதி.), 2004, சிறுபாணாற்றுப்படை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை.
9. மெய்யப்பன் ச.(பதி.), 2001, பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், சிதம்பரம்.
10. ஜீன் லாரன்ஸ் செ., & பகவதி கு., (பதி.), 1998, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தழிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

மகாபாரதத்தின் கிளைக்கதைகளிலிருந்து 16ஆம் நூற்றாண்டில் உருக்கொண்ட காப்பியங்கள்

இல.இராஜதுரை
முனைவர்பட்ட ஆய்வாளர், சுவடியியல் துறை
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்
+91 8281471857, 09656903757, rajadurai0709@gmail.com

இதிகாசங்களிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு விரிவாக்கிக் காப்பிய வடிவில் தரும் இலக்கியத்தைக் 'கண்ட காவியம்' என்று வடமொழி அறிஞர்கள் குறிப்பிடுவர். அந்தவகையில் மகாபாரதத்தில் இடம்பெற்ற கிளைக்கதைகளான நைடதம், அரிச்சந்திரன் சரிதம், புரூரவன் சரிதம் ஆகியவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நைடதம்

16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியர், நிடத நாட்டு மன்னனான நளனின் சரிதத்தை நைடதம் என்னும் காப்பியமாக இயற்றினார். வடமொழியில் ஹர்ஷர் இயற்றிய 'நைஷதம்' எனும் நூலே தமிழில் 'நைடதம்' ஆயிற்று. 'நைஷதம் புலவருக்கு ஔஷதம்' என்பது பழமொழி. இந்நூலில் 28 படலங்களும், 1173 பாடல்களும் உள்ளன. மகாபாரத வனபர்வத்தில் கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பாண்டவர்கள் தங்கள் நாட்டைவிட்டுக் காட்டிலே வாழ்கின்றனர். அங்கு சென்ற பிருகதச்வர் என்னும் முனிவர் கவலையுடன் இருந்த தருமரைக்கண்டு உன்னைப் போல் கலியின் சூழ்ச்சியால் நாடு, நகரங்களை இழந்து மீண்டும் சூதாடி நாட்டைப் பெற்ற நளனின் கதையைக் கேள் என்று கதையைக் கூறுகிறார்.

கதைச்சுருக்கம்

நளன் அன்னத்தைத் தூது விட்டு, தமயந்தியைச் சுயம்வரம் மூலம் திருமணம் செய்கிறான். பின்பு கலியின் சூழ்ச்சியால் புட்கரனுடன் சூதாடி, நாட்டை இழந்து மனைவியுடன் காட்டை அடைகிறான். அப்போது அங்கு வந்த அன்னத்தைப் பிடிக்க முற்பட்ட நளனின் ஆடையை, அன்னம் கொண்டு செல்ல இருவரும் அன்று இரவில் ஒற்றை ஆடையுடன் துயிலுகின்றனர். கலியின் சூழ்ச்சியால் நளன் தன் ஆடையை வகிர்ந்து அவளைப் பிரிந்து செல்கிறான். அங்கு தான் கண்ட பாம்பைத் தீயினின்றும்

காப்பாற்ற, அப்பாம்பு அவனைத் தீண்டுகிறது. நளன் வேறு வடிவம் பெற்று அயோத்தி மன்னனான ரிதுபர்னனிடம் ஏவலனாய்ப் பணிபுரிகிறான். தமயந்தியோ அந்தணன் ஒருவன் உதவியால் வீமனின் அரண்மனையைச் சேர்கிறாள். நளன், தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என அறிந்து, ரிதுபர்னனுக்குத் தேரோட்டியாக வருகிறான். அங்கு நளன் தன் குழந்தைகளைக் குழவியதைக் கண்ட தமயந்தி அவனை நளமகாராசன் என அறிகிறாள். நளன் கலிதொடர் காலம் நீங்கித் தன் பழைய உருவம் பெற்றுத் தமயந்தியை அடைந்து, மீண்டும் சூதாடி நாட்டைப் பெறுவதே கதை.

அரிச்சந்திரன் சரிதம்

இந்நூலின் ஆசிரியர் நல்லூர் வீரகவிராசர். இதில் 1215 பாடல்களும்,10 காண்டங்களும் இடம்பெறுகின்றன. இந்நூலின் மூலநூல் அரிச்சந்திர வெண்பா ஆகும். மகாபாரத வனபர்வத்தில் கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பாண்டவர்கள் தங்கள் நாட்டைவிட்டுக் காட்டிலே வாழ்கின்றனர். அங்குச் சென்ற பிருகதச்வர் என்னும் முனிவர் கவலையுடன் இருந்த தருமரைக்கண்டு உன்னைப் போல் நாடு, நகரங்களை இழந்து மனைவி, மக்களையும் விற்றுப் பன்னிரண்டு வருடம் மயானம் காத்த அரிச்சந்திரன் கதையைக் கூறுகிறேன் கேள் என்பதாக இக்கதை தொடர்கிறது.

கதைச்சுருக்கம்

அரிச்சந்திரன் சந்திரமதியின் சுயம்வரத்திற்குச் சென்று அவளது மங்கல நாணைக்கண்டு திருமணம் செய்கிறான். இவன் "மனுநெறி தவறாத சிறந்த மன்னன்" எனும் வசிட்டர் கூற்றை விசுவாமித்திரர் மறுத்து, அவனை நான் சத்தியம் தவறச் செய்கிறேன் எனச் சூளுரைத்து விலங்குகளையும், புட்களையும் அனுப்பி அரிச்சந்திரன் நாட்டை அழிக்கச் செய்கின்றான். நாட்டை அழித்த விலங்குகளை அரிச்சந்திரன் வதைக்கிறான். விசுவாமித்திரர் பெண்களை அனுப்பி வெண்கொற்றக்குடையைக் கேட்கிறான். தர மறுத்த அரிச்சந்திரனிடம் விலங்குகளை வதைத்ததற்கும், பெண்களை வெருட்டியதற்கும் பரிகாரமாக அப்பெண்களை மணக்க வேண்டும் என வற்புறுத்துகிறான். அதற்கு மறுத்த அரிச்சந்திரனிடம் உள்ள அனைத்துச் செல்வத்தையும் பெற்று, தனது கிழிந்த துணியைக் கொடுத்துவிட்டு அரிச்சந்திரனின் உயர்ந்த உடையைப் பிடுங்கிக் கொள்கின்றான்.

அரிச்சந்திரன் அங்கிருந்து காசி நாடடைந்து, தன் மனைவி, மக்களையும் பிராமணனிடம் விற்று, தன்னை வீரவாகு எனும் பிணம் சுடும் புலையனுக்கு

அடிமையாக்குகிறான். சந்திரமதியின் மகன் பாம்பு கடித்திறக்க அவனை மயானத்தில் சுட வந்தாள். அப்போது அரிச்சந்திரன் அவள் அணிந்திருந்த மங்கல நாணால் தன் மனைவி என அறிந்து அவளிடம் கூறிவிட்டு வீரவாகுவைக் காணச் செல்கிறான். அவ்வேளையில் வழியில் நகை அபகரிக்கப்பட்டுப் பிணமாகக் கிடந்த காசி அரசனின் மகனைச் சந்திரமதி கொன்றதாகக் கூறிக் கொலைக்களத்திற்கு அனுப்புகிறார்கள். வீரவாகு சந்திரமதியைக் கொலை செய்யும்படி அரிச்சந்திரனை ஏவுகிறான். அரிச்சந்திரனின் ஓங்கிய வாள், மலர்மாலையாக விழ, அனைவரும் கூடி அரிச்சந்திரனுக்குச் சிறப்புச் செய்கிறார்கள். அரசையும் திருப்பிக் கொடுக்கிறார்கள். இறந்த இரண்டு குழந்தைகளும் உயிர் பெறுகிறார்கள். இதுவே இந்நூலின் கதை.

புரூரவ சரிதை

இந்நூலின் ஆசிரியர் ஐயம் பெருமாள் சிவந்த கவிராசர். இதில் 26 படலங்களும், 845 செய்யுட்களும் இடம்பெறுகின்றன. மகாபாரத ஆதிபருவத்தில் இக்கதை இடம்பெறுகிறது.

கதைச்சுருக்கம்

புரூரவன் கங்கை நாட்டரசன் மகள் புண்டரீகவல்லியைச் சுயம்வரத்தில் மணக்கிறான். நாரத முனிவர் புரூரவனுக்குச் சனி தொடரும் நாள் நெருங்கிற்று எனக் கூற, அதற்குப் புரூரவன் "முதுமையில் வாராது இளமையில் வந்து என்னைப் பற்றுக" என வேண்டினான். வித்துமாலை என்பவனிடம் தன் நாட்டை இழந்து, மனைவி மக்களுடன் சந்திரகிரி எனும் நாடடைகிறான். அங்கு விச்சுவகுப்தன் எனும் வணிகனிடம் அரசி நெல் குத்தும் தொழில் செய்தும், மன்னன் விறகு சுமந்தும் பிழைக்கிறார்கள். விச்சுவகுப்தன் அரசி மீது ஆசை கொண்டு வேற்றூர்க்கு அனுப்புகிறான். அவளைத் தேடிச் சென்ற புரூரவனும் மக்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்ல, மக்கள் இருவரையும் கும்பன் எனும் ஆயனொருவன் கொண்டு சென்று வளர்க்கிறான். கரைசேர்ந்த புரூரவன் திரிகர்த்தன் எனும் அரசனின் நாடடைகிறான். அவ்வரசனின் மகளாகிய காந்திமதியைச் சூழ்நிலையால் மணந்து, தன் நகரடைந்து நாட்டைப் பெறுகிறான். கும்பனால் வளர்க்கப்பட்ட இரண்டு மக்களும் போர் முறைகளில் வல்லவராகிப் புரூரவனிடம் பணியில் அமர்கின்றனர். விச்சுவகுப்தன் புண்டரீகவல்லியை மரக்கலத்தில் சிறையிருத்த, புயலினால் அம்மரக்கலம் புரூரவனின் ஒற்றர்களிடம் சிக்குகிறது. அம்மரக்கலத்திற்குக் காவல்

சென்ற இருவர்களும் உள்ளிலிருப்பது தன் தாய் என அறிந்து புரூரவனிடம் தன் முழுக்கதையையும் கூற, அரசனோ தேவி தன்னுடைய மனைவி என அறிந்து மக்களோடு அரண்மனை புகுகின்றான். இதுவே இந்நூலின் கதை.

காப்பியக்கதைத் திருப்பம்

* வீரத்திலும், கொடைத்தன்மையிலும் சிறந்த மன்னனான நளன் எண்ணல் அளவை முறை அறியாதவன். அம்முறையை ரிதுபர்னனிடம் அறிந்து மீண்டும் சூதாடி நாட்டைப் பெறுகிறான். அதுபோல நாட்டை இழந்த பாண்டவர்கள் கண்ணனின் உதவியால் நாட்டை அடைகின்றனர்.

* மனுநீதி தவறாத சிறந்த மன்னனான அரிச்சந்திரன், உண்மையின் வடிவாகத் திகழ்ந்தான். அதுபோலவே கண்ணபிரான் துரியோதனனிடம் கூறியது போல ஆயுதமின்றி உபதேசத்தின் மூலம் அர்ச்சுனனைப் போர் செய்யத் தூண்டி இழந்த நாட்டை மீட்கச் செய்கிறான்.

* அறத்தையே பெரிதும் போற்றி, பொருளையும் இன்பத்தையும் போற்றாது ஒழுகுபவன் புரூரவன். தன்னை சனி தொடர்கிறது என்பதை அறிந்த புரூரவன், ”முதுமையில் வாராது இளமையிலேயே வந்து எனைப் பற்றுக” எனக்கூறி தன் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளால் வேதனையுறாது இறுதியில் நாட்டை அடைகிறான். இந்நூலும் பாண்டவர்கள் அடைந்த துன்பத்துக்கும், வெற்றிக்கும் எடுத்துக்காட்டாகிறது. இம்மூன்று காப்பியங்களும் மகாபாரதக் கதை செம்மையாக நகர்வதற்கு உதவிபுரிகின்றன.

மூன்று காப்பியங்களிலும் ஒத்துக் காணப்படும் சில பண்புகள்

- நைடதமும், அரிச்சந்திரன் சரிதமும் மகாபாரத வனபர்வத்திலும், புரூரவன் சரிதை ஆதிபர்வத்திலும் இடம்பெறும் கிளைக்கதைகளாகும்.
- இவை மூன்றும் 16ஆம் நூற்றாண்டில் உருவான காப்பியங்கள்.
- மூன்று நூலும் விருத்தப்பா அமைப்பில் பாடப்பட்டவை.
- மூன்று நூல்களுமே நளன், அரிச்சந்திரன், புரூரவன் ஆகிய அரசர்களைக் கதாநாயகர்களாகக் கொண்டவை.
- நைடதமும், புரூரவ சரிதையும் படல அமைப்புடனும், அரிச்சந்திர சரிதம் காண்ட அமைப்புடனும் காணப்படுகின்றன.

- நளனுக்குக் கலி மூலம் துன்பமாகவும், அரிச்சந்திரனுக்குத் தானே தேடிய துன்பமாகவும், புரூரவனுக்குச் சனியாகவும் என மூவர் வாழ்விலும் துன்பம் ஏற்படுகிறது.
- மூன்று அரசர்களும் நாட்டை இழந்து, காட்டை அடைகின்றனர்.
- நளன் ரிதுபர்னனிடம் தேர்ப்பாகனாகவும், அரிச்சந்திரன் வீரவாகுவிடம் பிணம் சுடும் அடிமையாகவும், புரூரவன் விச்சுவகுப்தன் எனும் வணிகனிடம் விறகு வெட்டிப் பிழைப்பவனாகவும் அடிமை வேலை செய்கின்றனர்.
- மூன்று அரசர்களும் மனைவியைப் பிரிகின்றனர். நளன் தமயந்தியையும், அரிச்சந்திரன் சந்திரமதியையும், புரூரவன் புண்டரீகவல்லியையும் பிரிகின்றனர்.
- மூவரசர்களும் தங்கள் பிள்ளைகளைப் பிரிந்து வாழ்கின்றனர். நளனின் பிள்ளைகள் தன் பாட்டனான வீமன் வீட்டில் வளர்கின்றனர். அரிச்சந்திரன் மகன் லோகதாசன் பாம்பு கடித்து இறக்கிறான். புரூரவனின் மகன்களை ஆற்று வெள்ளம் அடித்துச் செல்ல, கும்பன் எனும் ஆயன் வளர்க்கிறான்.
- நளன் தமயந்தியையும், அரிச்சந்திரன் சந்திரமதியையும் மணக்க, புரூரவனோ முதலில் கங்கை நாட்டரசன் மகளான புண்டரீகவல்லியையும், திரிகர்த்தன் எனும் அரசனுடைய மகளாகிய காந்திமதியையும் மணக்கிறான். இவற்றுள் புரூரவ சரிதை வேறுபடுகிறது.

படைப்பாளர்கள் தங்கள் காப்பியங்களில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு ஒரு தொடர்ச்சியைத் தருவதற்கும், படைப்பு நோக்கத்தை வெளிப்படுத்துவதற்கும் ஓர் உத்தியாகவே கிளைக்கதைகளைப் படைக்கின்றனர். அவை மையக்கதைக்கு உறவு உடையதாகவே அமையும். அந்த வகையில் இம்மூன்று காப்பியங்களும் மகாபாரதக் கதைநகர்விற்கு அடித்தளமாக அமைகின்றன.

துணை நூற்கள்

1. 16- ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு – மு.அருணாசலம்
2. நைடதம் – ஏ.எஸ்.வழித்துணை ராமன்
3. மகாபாரதம் - கிருபானந்தவாரி
4. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு- இ.பாக்யமேரி

மதிப்பிடப்பெற்றது

இணையவழிக் குறுஞ்செயலி (Apps) உருவாக்கம்

முனைவர் **த.சத்தியராஜ்** (நேயக்கோ)
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),கோயமுத்தூர் -28

இணையப் பயன்பாடு மிகுந்துவரும் இக்காலத்தில் அதனுடன் இணைந்து பயணிக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இப்பயணம் பல்வேறு நிலைகளில் அமைந்துள்ளது. அவற்றைச் சமூக வலைதளம் (Social Network), பொதுத்தளம் (Public Site), மின்நூலகம் (e-Library), மின்பதிப்பகம் (e-Publication), மின்னிதழ் (e-Journal), பிளே குறுஞ்செயலிக் கிடங்கு (Play Store) எனப் பல வகைகளில் காட்டலாம். இவற்றுள் குறுஞ்செயலிக் கடையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இதில் குறுஞ்செயலிகள் (Apps) நிரம்ப உள்ளன. குழந்தைகள் முதல் முதியவர் வரை வாசிக்கத் தகுந்தவையும் கற்கக் கூடியவையும் உள்ளன. அவற்றின் மூலம் சிந்தனைகளைச் செல்பேசிகளில் நிறுவிப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதில் பிறமொழிகளுக்கான நூல்கள் குறுஞ்செயலிகளாகக் கிடைக்கப்பெறுகின்றன. தமிழுக்கு அவை மிகக் குறைந்தளவிலேயே உள்ளன. ஆயினும், நூல்கள் அனைத்தும் குறுஞ்செயலிகளாக உருவாக்கப்பட வேண்டும். அதற்கு, ஜாவா (Java) எழுதும் திறன் அவசியம். இதனைப் பூர்த்தி செய்வதற்குச் சில நிறுவனங்கள் பொது வடிவமைப்பை (Template) உருவாக்கி இணையத்தில் குறுஞ்செயலி உருவாக்கும் வசதியை ஏற்படுத்தித் தந்துள்ளன. அதற்கான காணொளிகளும் (Video) யுடியூப் (Youtube) வலைப்பக்கத்தில் உள்ளன. அதனைப் பார்த்தும் உருவாக்க முயற்சிக்கலாம். இங்குக் குறுஞ்செயலியூற்று (Apps**Geyser**) எனும் நிறுவனத்தின் மூலம் குறுஞ்செயலி உருவாக்கும் முறை பற்றிக் கூறப்பெறுகின்றது.

குறுஞ்செயலியூற்றுவழிக் (AppsGeyser) குறுஞ்செயலி உருவாக்கம்

குறுஞ்செயலியூற்று (AppsGeyser) எனும் நிறுவனம் பல்வேறு வகையில் குறுஞ்செயலிகளை உருவாக்க வழிவகை செய்து தந்துள்ளது. இதன் மூலம் குறுஞ்செயலிகளை உருவாக்குவதற்குப் பதிவுசெய்து கொள்வது நல்லது. அதனைப் பதிவு செய்வதற்கு உள்ளீட்டுப் (Login) பொத்தானை அழுத்த, பின்வரும் படம் தெரியும்.



படம்: 1

இப்பதிவு நிகழ்ந்த பின்பு தங்களுக்கான ஒரு கணக்கு உருவாக்கப் பெறும். அதன் மூலம் புதிய குறுஞ்செயலிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.



படம்: 2

அதில் உள்ள Create New (புதிது) எனும் பொத்தான் அமைந்திருக்கும். அதனை அழுத்தியவுடன் பின்வரும் படம் தோன்றும்.



படம்: 3

இப்படத்தைக் கவனித்தால் குறுஞ்செயலி உருவாக்கத்திற்கான வார்ப்புருக்கள் (Template) தோன்றுவதைக் காணலாம். இதில் இணையதளம் (website), தூதுவன் (messenger), உலாவி (browser), வலைப்பூ(blog), புதிது (new), முகநூல் பக்கம்(facebook page), ஒளிப்படத் திருத்தி (photo editor), எண்பொறி (slot machine), புதிர்ப்பொறி (matching puzzle) போன்றவையும் உள்ளன. இவை பகுப்பியல் (category) அடிப்படையிலும் வகைப்படுத்தப் பெற்றுள்ளன. அனைத்தையும் பார்வையிடுவதற்கான வழியும் உள்ளது. நூலைக் குறுஞ்செயலியாக உருவாக்க ஊடகம் (media) எனும் பகுப்பை அழுத்த வேண்டும். அதில் உள்ள வார்ப்புருக்களைக் குறிக்கும் படம் வருமாறு:



படம்: 4

இப்படத்தில் உள்ள ஆவணம் (Document) எனும் அமைப்பு நூல் உருவாக்கத்திற்கானதாகும். அதனைத் தொட, பின்வரும் பகுதி உருவாகும்.



படம்: 5

இப்படத்தில் உள்ள வழிமுறையின்படி PDF, .Doc, .docx, .ppt, .pptx போன்ற அமைப்புடைய கோப்புகளை உள்ளீடாகத் தருதல் வேண்டும். அதனைத் தருவதற்கான வழிமுறைப்படம் வருமாறு:



படம்: 6



படம்: 7

இவ்வழிமுறைப் படத்தின்படி உள்ளீடு செய்யப்பெற்ற கோப்பு ஏற்கப்பட்டால், அடுத்த வழிமுறைக்குச் செல்லும் பொத்தானை அழுத்த, பின்வரும் அமைப்புத் தோன்றும். அதில் குறுஞ்செயலியின் பெயர் தரப்படல் வேண்டும். அப்பெயர் Capital Letterஇல் இருத்தல் வேண்டும். குறிப்பாக, ஆங்கிலத்தில் அமைதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அதனைக் குறிக்கும் படம் வருமாறு:



படம்: 8

இச்செயல்பாடு நிறைவு பெற்றவுடன், இச்செயலிக்கான குறிப்பு நிரப்பப்படுதல் வேண்டும். அக்குறிப்பு நூலின் சிறப்பை எடுத்தியம்பும் முகமாக அமைதல் நன்று. அதனைக் குறிப்பிடும் படம் வருமாறு:



படம்: 9

இப்பதிவு முடிந்தவுடன், செயலிக்கான படத்தைப் பதிவேற்றுதல் வேண்டும். அப்படம் 512 x 512 அளவுடையதாக இருத்தல் சிறப்புடையது. இவ்வளவுடைய படத்திற்குள் நூல்பெயர், நூலாசிரியர் பெயர் ஆகியவற்றை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதனைப் பதிவேற்றக் கூடிய வழிமுறையைக் காட்டும் படம் வருமாறு:



படம்: 10

இப்பதிவேற்றம் முடிந்தவுடன் படம் பதிவேற்றப் பட்டதற்கான அமைப்புத் தோன்றும். அப்படம் வருமாறு:



படம்: 11

இச்செயல்பாடு முடித்தவுடன் உருவாக்குதல் (Create) எனும் பொத்தானை அழுத்துதல் வேண்டும்.



படம்: 12

இப்பொழுது வெளியிடுவதற்குத் தகுதியுடைய குறுஞ்செயலியாக அமைந்துள்ளது. அதனை வெளியிடுவதற்கு வெளியீடு (Publish) எனும் பொத்தானை அழுத்த, பின்வரும் படம் தோன்றும்.



படம்: 13

இக்குறுஞ்செயலியைப் பதிவிறக்கம் (Download) செய்வதற்கு வெளியீடு (Publish) எனும் பொத்தானின்கீழ் உள்ள சோதனைக் குறுஞ்செயலி (or test your app) எனும் குறிப்பை அழுத்த, பதிவிறக்கும் குறியீடு (Download) காண்பிக்கப்பெறும். அதனைத் தொடின் பதிவிறக்கம் ஆகும். அதனைக் காட்டும் படம் வருமாறு:

படம்: 14



படம்: 15

இப்பொழுது பதிவிறக்கம் செய்யப்பெற்ற குறுஞ்செயலி செயல்படுகிறதா என்பதைச் செல்பேசியில் நிறுவிச் சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். பதிவிறக்கம் ஆன செயலி இணையப் பயன்பாட்டின்போதுதான் செயல்படும் என்பது கவனித்திற்குரியது. அதனைச் சரிசெய்துகொள்ளப் பின்வரும் படங்கள் காட்டும் வழிமுறைகளைப் பின்பற்றுக.



படம்: 16

உருவாக்கப்பட்ட குறுஞ்செயலியை google play, amazon போன்ற விற்பனைத் தளத்தில் பதிவேற்றப் பின்வரும் வழிமுறைப் படத்தின் மூலம் அறிந்து கொள்க.



படம்: 17



படம்: 18

முடிப்பாக, இங்குக் கூறப்பட்ட வழிமுறைகளின்படிக் குறுஞ்செயலி உருவாக்கத்தை மேற்கொள்ள இயலும். இதனைப் பின்பற்றி நாட்டுடைமையாக்கப்பெற்ற நூல்கள் அனைத்தையும் குறுஞ்செயலிகளாக உருவாக்கிப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

துணைநின்றவை

1. சுந்தரம் இல., 2015, கணினித்தமிழ், விகடன் பிரசுரம், சென்னை.
2. www.appsgeyser.com
3. www.youtube.com

மதிப்பிடப்பெற்றது

ஆலயங்களில் ஐந்தின் பங்கு

மா.சிதம்பரேஸ்வரர்
கௌரவ உதவிப்பேராசிரியர், கட்டடக்கலைத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஆலயங்களில் ஐந்தின் பங்கு என்ற தலைப்பில் ஐந்து என்பது ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் ஆகும். ஆதிகாலத்தில் மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் காலப்போக்கில் மிருகங்களை நண்பனாக்கி, பிறகு தெய்வமாக்கி வணங்கத் தொடங்கினான். நாகரிகத்தின் வளர்ச்சியால் கோயில்கள் உருவாகத் தொடங்கின. கோயில்கள் மூலம் இயல் இசை நாடகம் மட்டுமல்லாமல் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை மாபெரும் வளர்ச்சி பெற்றது. சங்ககாலம் பல்லவர்காலம் சேர, சோழ, பாண்டியர் காலம் நாயக்கர்காலம் என அத்துனை மன்னர்கள் காலத்திலும் கட்டிய ஆலயங்களில் விலங்குகளின் சிற்பம் அதிக அளவில் காணக்கிடைக்கின்றன. பாம்பைப் பார்த்துப் பயந்தவன் அதற்குச் சிலைகள் வைத்தான். பல்லியைப் பார்த்து சகுனம் பார்த்தவன் பாவுக்கல்லில் சிலை வடித்தான். எருமையை எமனுக்கு வாகனம் ஆக்கினான். மயிலைச் சுப்ரமணியனுக்கு வாகனமாக்கினான். எலியை விநாயகருக்கும் புலியை ஐயப்பனுக்கும் சிங்கத்தை அம்மனுக்கும் யானையை இந்திரனுக்கும் பசுவை பரமனுக்கும் கழுகை கருடனாக்கி பெருமாளுக்கும் வாகனமாக்கினான். குரங்கை அனுமனாக்கினான். உலகின் பண்டைய பண்பாட்டினைத் தாங்கி நிற்கின்ற முக்கிய நாகரிகங்களான எகிப்து மெசபடோமியா சீன நாகரிகங்களுக்கு இணையான நாகரிகமாகச் சிந்துசமவெளி நாகரிகத்தில் கிடைத்துள்ள நாணயங்கள் சின்னங்கள் சிலைகள் அனைத்திலும் விலங்குகளின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளன. சிந்துசமவெளி நாகரிகம் நகரத்தை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு மாறாக வேதகாலப் பண்பாடு கிராமம் மேய்ச்சல் நிலம் இவற்றைச் சார்ந்திருந்தது. சிந்துவெளி இலச்சினைகளில் பல விலங்கினங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆனால் குதிரை மட்டும் அவற்றில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலச்சினைகளின் சித்திரப்பதிவுகள் வெளிப்படுத்தும் சிந்து சமயம் என்பது எருமைக்கொம்பு அணிந்த ஆண்தெய்வம், தாய்த்தெய்வங்கள், அரசமரம், பாம்பு மற்றும் லிங்கச் சின்னம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இத்தகைய வழிபாட்டு முறைகள் இந்து சமயத்தில் ஆதிக்குடிகளின் வழிப் பெறப்பட்டவை. சிந்து சமயம் ரிக்வேதம் காட்டும் சமயத்திற்கு முற்றிலும் அன்னியமானது. இப்பகுதிகளில் கிடைக்கும் முத்திரைகளில் காட்டெருமையும் திமிலுடைய எருதும் மீன்களின் சின்னமும் கிடைத்துள்ளன. ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றிலும் நிலத்திற்குத் தகுந்த இயற்கைச் சூழலில் வாழ்ந்த விலங்குகள் பற்றிச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. மனித உடலும் விலங்குகளின்

தலையும் அல்லது மிருக உடலும் மனிதத் தலையும் கலந்து அதிகமான உருவங்கள் கிடைக்கின்றன.

நந்திகேஸ்வரர் - மனித உடல் பசுவின் தலை

வராகர் - மனித உடல் பன்றியின் தலை

நரசிம்மர் - மனித உடல் சிங்கத்தின் தலை

கருடர் - மனித உடல் பருந்து முகம்

அனுமான் - மனித உடல் குரங்கின் தலை

வராகி - மனித உடல் பன்றியின் தலை

கிம்புருடர் - மனித உடல் குதிரையின் தலை

மச்சவதாரம் - மீன் உடல் மனிதத் தலை

கூர்மவதாரம் - ஆமையின் உடல் மனிதத் தலை

ராகு கேது - பாம்பின் உடல் மனிதத் தலை

கின்னரர் - பறவையின் உடல் மனிதத் தலை

காமதேனு - பசுவின் உடல் மனிதத் தலை

1. மச்ச அவதாரம் இவ்வுலகில் தோன்றிய முதல் உயிரினம். கடலில் தோன்றிய unicellular உயிரினமாகிய கடல் உயிரினம்.
2. கூர்ம அவதாரம் - ஊர்வன அடுத்தக்கட்ட பரிணாம வளர்ச்சி. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம்.
3. வராக அவதாரம் - mammals, பாலூட்டி உயிரினம். பரிணாம வளர்ச்சியின் அடுத்தக்கட்ட வளர்ச்சி விலங்கு உயிரினம்
4. நரசிம்ம அவதாரம் - பாதி மிருகம் பாதி மனிதன் பரிணாம வளர்ச்சியின் அடுத்தக்கட்டம்.
5. வாமன அவதாரம் - குள்ள மனிதன் பரிணாம வளர்ச்சியின் முதல் மனிதன்.
6. பரசுராம அவதாரம் - மனிதனாக மாறிய பரிணாம வளர்ச்சி அவனை வேட்டையாட வேல் கத்தி செய்யும் தொழில்நுட்ப மனிதனாக மாற்றியது.
7. ராம அவதாரம் - விலங்குகளை வேட்டையாடும் மனிதனாக இருந்தவனைத் தாய் தந்தை மக்கள் மனைவி சமூகம் என்ற சமுதாய மனிதனாகப் பரிணாம வளர்ச்சி அடைந்தான்.
8. பலராம அவதாரம் - வேட்டையாடி ஒரு சமூகமாக வாழ ஆரம்பித்த மனிதன் அடுத்த பரிணாம வளர்ச்சியில் நிலங்களை உழுது பயிரிடும் வளர்ச்சியை அடைந்தான்.

9. கிருஷ்ண அவதாரம் - சமூகம் விவசாயம் செய்து வாழ்ந்த மனிதன் தனக்கான நீதி தர்மங்களை வகுத்தான் வாழ்க்கை நெறிமுறைகள் தர்மம் அதர்மம் என்பதை போதிக்கும் ஆசானாக பரிணாம வளர்ச்சியை அடைந்தான்.

மாமல்லபுரச் சிற்பங்களில்...

மாமல்லபுரம் சாளுவான் குப்பம் எனுமிடத்தில் புலிக்குகை உள்ளது. தெய்வ உருவங்களின்றி முற்றுப்பெறாத நிலையில் காணப்படுவதும் யாளித் தலைகள் சூழ வியத்தகு முறையில் அமைந்த செவ்வக வடிவான மண்டபம் பெற்றிருப்பதும் கல்வெட்டு ஏதுமின்றியிருப்பதும் தேய்வுற்ற நிலையில் தெய்வ உருவங்கள் உள்ளன. அம்பாரிகளைக் கொண்ட யானைகளையும் குதிரைகளையும் கொண்டுள்ளன. திருமூர்த்தி குடைவரையின் பின்புறம் நான்கு யானைகள் நீராடி மகிழும் எழில்மிகு காட்சி செதுக்கப்பட்டுள்ளது. ஒரு யானை பேருருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்கீழ் இரு யானைகளும் மேலே பின்புறம் ஒரு யானைத் தலை மட்டும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தொகுதி அர்ச்சுனன் தபசு சிற்பத்தொகுதி யானைக் கூட்டத்தை ஒத்துள்ளது. இதில் யானை ஒன்று ஏறக்குறைய தலைகீழாக நின்று துதிக்கையின் துணையின்றி வாயால் நீர்பருகும் யானை பொரிய அர்ச்சுனன் தபசு யானைக்கூட்டத்தில் இடம்பெறவில்லை. பொதுவாக யானை குறிப்பிட்ட வயது வரை துதிக்கையால் நீர் அருந்தாமல் வாயால் நேரடியாக உறிஞ்சும். இதனை ஆராய்ந்து சிற்பி தனது படைப்பில் காட்டியிருப்பது வியப்பான ஒன்றுதான். அர்ச்சுனன் தபசுக் காட்சியில் கிட்டத்தட்ட அனைத்து வகையான மிருகங்களும் இயற்கை எழிலுடனும் கலை நுணுக்கத்துடனும் செதுக்கப்பட்டுள்ளன. யானைகள் - 14 ; யாளிகள்-சிங்கங்கள் – 16; வானரகங்கள் – 4; பூனை - 1 ;மான்கள் – 9; ஆடுகள் – 2; பன்றி – 1; முயல் – 1; உடும்பு – 1; ஆமைகள் – 2; அன்னங்கள் – 20; கோழிகள் பருந்து நாரைகள் – 2; வாத்து – 1; மயில்கள் – 5; எலிகள் - 13 ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன. நாகராசன் சிலைகள் மேல்பகுதி மனித உருவிலும் கீழ்பகுதி பாம்பு வடிவிலும் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஒருதலை, மூன்றுதலை, ஐந்துதலை நாகங்கள் காணப்படுகின்றன. கின்னரர் என்போர் தேவகனங்கள் பதினெட்டனுள் ஒருகனத்தினர். இவர்கள் குதிரை முகம் மனித உடலும் உடையவர்கள். நான்முகனின் பிரதிபிம்பத்தில் பிறந்தவர்கள். கிம் – நரர் என்பது மனித வடிவமுடையவர் என்னும் பொருளில் கின்னரர்என வழங்கப்படுகிறது. இவர்கள் குச்சிதநரர் எனவும் வழங்கப்பெறுவர். விகாரமடைந்த மனித உருவங்கள் கொண்டவரென்பது குச்சிதநரர் என்பதன் பொருளாகும். ஆண் பெண் இணைந்த கின்னரர்கின்னர மிதுனம் எனப்படுவர். சிற்ப நூல்கள் கின்னருக்கும் கிம்புருடருக்குமுள்ள உருவ வேறுபாடுகளை விளக்குகின்றன. மனித உடலும் குதிரை முகமும் இருந்தால் கிம்புருடர் எனவும் மனிதமுகமும் பறவையின் கால்களும் அமையப் பெற்றிருந்தால் கின்னரர்எனவும் கூறுவர். யானைகள் கூட்டமொன்று கங்கையாற்றில்

நீரருந்தியும் நீந்தி விளையாடியும் மகிழ்கின்ற காட்சி அதிஅற்புதமானது. இக்கூட்டத்தில் பத்து யானைகள் உள்ளன. இரு யானைகள் பேருருவத்துடன் முன்னிற்க ஏனைய தூரம் புலப்படும் வண்ணம் பின்புறமும் தொலைவிலும் நிற்கின்றன. முன் நிற்கும் யானையே கூட்டத்தின் தலைவனாக எண்ணத்தக்கது. அது பெரிய தந்தங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அது தன் நீண்ட துதிக்கையினால் நீரினை உறிஞ்சிய வண்ணம் நிற்கின்றது. அதன் முன்னங்கால்களுக்கும் துதிக்கைக்கும் ஊடாக தொலைவில் தெரியும் வண்ணம் மற்றொரு யானையும் நீரினை உறிஞ்சிகிறது. பெரிய யானையின் அடிவயிற்று ஊடாகப் பார்க்கும்போது தொலைவில் மூன்று யானைகள் தென்படுகின்றன. அவற்றுள் முன்னுள்ள யானை நீரிலோ அல்லது கரையிலோ மண்டியிட்டு நீரினைப் பருகத் துதிக்கையை வளைக்க எத்தனிக்கிறது. பின்னுள்ள யானை முன்னுள்ள யானையின் முதுகுப்புறமாகத் தலைஉயர்த்தி உறிஞ்சிய நீரை வாயினுள் பாய்ச்சிக்கொள்ள துதிக்கையைக் கொண்டு செல்கிறது. பாலருந்தும் இரண்டு சிங்கங்கள் உட்பட பதினான்கு சிங்கங்கள் உள்ளன. இவற்றுள் சில நிறைந்த பிடாரிமுடி கொண்ட ஆண் சிங்கங்களாகவும் ஏனைய சிங்கங்கள் பெண் சிங்கங்களாகவும் காட்டப்பெற்றுள்ளன. குரங்குகள் இடதுப்புறப் பாறையில் இரண்டு வலதுப்புறப் பாறையில் இரண்டுமாக நான்கு குரங்குகள் காட்டப்பட்டுள்ளன. அடர்ந்த முடியுடன் குரங்குகள் காட்டப்பட்டுள்ளன. அடர்ந்த முடி கொண்ட குரங்கு கன்னத்தில் கை வைத்து மிகநேர்த்தியுடன் வடிக்கப்பட்டுள்ளன. மான்கள் இணை ஒன்று மேல்நோக்கிய காதுகளுடனும் மூன்று சிறு கிளைகளைக் கொண்ட கொம்புகளுடனும் காட்டப்பட்டுள்ளது. பக்கப்பார்வையாக காட்டப்பட்டுள்ளதால் ஒரு கொம்பு மட்டுமே காட்டப்பட்டுள்ளது. வயிறு சற்றுப் புடைப்புடன் காணப்படுகிறது. மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலில் பன்றியின் உருவம் தனியே செதுக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் அனைத்திலும் பசுக்களின் உருவம் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது. கடவுள்களையும் விலங்குகளையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு இரண்டும் இணைந்தே காணப்படுகிறது. ஆலயங்களில் ஏதாவது ஒரு வடிவத்தில் விலங்குகள் அமைந்துள்ளன.

ஆலயங்களில் விலங்குச் சிற்பங்கள்...

ஆலயங்களில் வரக்கூடிய உபபீடம் கண்டம் அதிஸ்டானம் பாதம் வியாழ வாரிகள் கொடுங்கை கபோதகம் விமானம் ஆகிய அனைத்து உறுப்புகளிலும் விலங்குகளின் உருவத்தைப் பயன்படுத்தியுள்ளனர். யாழி என்ற உருவத்தை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர். சேர சோழ பாண்டியர் பல்லவர் நாயக்கர் என அத்துனை மன்னர் ஆட்சி காலத்திலும் இந்த யாழி உருவத்தைக் காணமுடிகிறது. யாழி உருவம் சிங்கத்தின் உடலும் புலியின் நகங்களும் யானையின் துதிக்கையும் அமைந்திருக்கும். இதில் துதிக்கையில்லாமல் சிங்கத்தின் முகம் மட்டும் உள்ள யாழிகளும் உண்டு. இதேபோன்று வித்தியாசமான உருவம் கொண்ட மகரம்

என்றொரு மிருகம் உள்ளது. மீனின் உடலும் யானையின் துதிக்கையும் சிங்கத்தின் கால்களும் குரங்கின் கண்களும் பன்றியின் காதுகளும் கோரைப்பற்களும் பறவையின் இறக்கையும் பல்வகை இலை தழை கொடிகள் கொண்ட வாலும் உடைய ஓர் உருவம். ரிஷபக் குஞ்சரம் காளையும் யானையும் இணைந்து அமைந்த கற்பனை கலந்த ஒரு சிறப்பான உருவம். தாராசுரத்தில் அமைந்துள்ளது. இன்னும் பல கோயில்களில் பார்க்கமுடிகிறது. இது மட்டுமல்லாது விலங்குகள் தனி உருவச்சிலைகளாகவும் அமைந்துள்ளது. மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலில் பன்றியின் உருவம் கர்ப்பகிரகத்தைச் சுற்றி வரும் பாதையில் நீர் தொட்டியின் நடுவே அமைந்துள்ளது. காளையின் உருவம் சுற்றுப்புறச் சுவாரில் நீண்ட வாரிசையாக அமைந்துள்ளது. தெற்குப்பக்கம் சிங்கம் ஒன்று உள்ளது. அதன் மையப்பகுதியில் மகிஷமர்த்தினி சிலையும் அதன் தொடை மீது வீரனின் அமர்ந்த சிலையும் உள்ளது. சிங்கத்தின் அருகில் மான்ஒன்று அமர்ந்திருக்கிறது. ஆனால் அதன் தலை வெட்டுண்டு தனியே கிடக்கிறது. மான் மிகவும் உயிர்ப்புடன் வடிக்கப்பட்டுள்ளது. பஞ்சபாண்டவர் ரதம் என்று அழைக்கப்படுகின்ற கோயில்களுக்கு அருகே யானை சிங்கம் மற்றும் காளையின் தனி உருவச்சிலைகள் மிக அழகாக வடிக்கப்பட்டிருக்கும். பொதுவாக ஆலயங்கள் அனைத்திலும் கர்ப்பகிரகத்தின் முன்பாக அந்தெந்த தெய்வங்களின் வாகனங்கள் மூலவரை நோக்கி அமர்ந்த நிலையில் அமைக்கப்பட்டிருக்கும்.

சிவனுக்கு முன் காளை

பெருமாளுக்கு முன் கருடன்

அம்பாளுக்கு முன் சிங்கம்

முருகனுக்கு முன் மயில்

விநாயகருக்கு முன் மூஷிகம்

இவ்வாறு அந்தந்தத் தெய்வங்களின் வாகனங்கள் அமைந்திருக்கும். இது மட்டுமல்லாது திருவிழாக் காலங்களில் மூலவருக்குப் பதிலாக உற்சவர் திருஉருவம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். அவ்வாறு எடுத்துச் செல்லும்போது வாகனங்களாக விலங்குகள் மரத்தினாலோ அல்லது தங்கம் வெள்ளி தாமிரம் போன்ற உலேகாத்தினாலோ செய்யப்பட்டிருக்கும் சிலைகள் பயன்படுத்தப்படுகின்றன. கொடிமரத்தின் மேலே சிறிய உருவமாகவும் அவரவரர் வாகனமாகிய விலங்குகள் அமைந்திருக்கும். ஒவ்வொரு தெய்வ சிலைகளின் கைகளிலும் விலங்குகள் ஆயுதங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அஜந்தா, அமராவதி, காஞ்சி, சித்தன்னவாசல், நார்த்தாமலை, பொன்செய்யும்வயல், அய்யம்பேட்டை, தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், திருவையாறு, திருக்குறுங்குடி, மதுரை மீனாட்சி ஆகிய கோயில்களிலும் விலங்குகள் ஓவியமாக தீட்டடப்பட்டுள்ளன.

தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயில் ஓவியத்தில்...

தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிலில் தெற்கு உட்சுவரின் தெற்கு நோக்கிய ஓவியம் பெரிய கோயிலின் தென்பகுதியில் விமானத்தின் மாடத் தெய்வமாக விளங்கும் ஆலமர் செல்வருக்கு அடுத்துள்ள பெரிய சாளரத்திற்கு இரும்பு ஏணியின் வழியாகச் சென்றால் அமர்ந்த நிலையில் உள்ள அகோரமூர்த்தியின் நெடிய சிற்பத்தை அடுத்த உட்புறச் சுவரில் தெற்குப் பகுதியில் ஓவியம் காணப்படுகிறது.

இவ்ஓவியத்தில் அகத்தியர் போன்ற உருவமும் அவர் பின்புறம் ஆலமரமும் அதன் மீது குரங்குகளும் பறவைகளும் வியப்புடன் அங்கும் இங்கும் ஓடுவது போல் காட்சியளிக்கின்றன. காட்டுப்பன்றி மான் யானைக்கூட்டம் ஆகியவை பாங்குடன் இவ்ஓவியத்தில் காட்சியளிக்கின்றன. யானைகளில் ஒன்று மரக்கிளையை ஒடிக்கின்ற காட்சி அருமையாக உள்ளது. மற்றொரு யானை தன் துதிக்கையால் மரக்கிளையைத் தூக்கியவாறு மலைமேல் ஏறுகின்ற காட்சி அருமையாக உள்ளது. சிங்கங்கள் இரண்டு வேட்டையிடக் காத்திருக்கிறது. சிறுத்தைப்புலியும் இங்கு இடம்பெற்றுள்ளது. படம் எடுக்கும் பாம்பைக் கண்டு மிரளும் குரங்கும் தன் தன் தாயின் மடியில் அமர்ந்துள்ள குரங்கும் தன் கண்ணை அகல விரித்து விழிக்கின்ற ஆந்தையும் மரக்கிளைகளில் காணப்படும் மயில்கள் அணில், மான் அமர்ந்திருக்கிறது. முனிவருக்கு அருகில் பூனை ஒன்றும் அமர்ந்துள்ளது. பைரவர் நின்ற உருவமும் அவர் அருகில் அவரது வாகனமான நாயும் உள்ளன. இது மட்டமல்லாது பாறை ஓவியங்களில் அதிக அளவு விலங்கு உருவம் காணப்படுகின்றன. குதிரை மீது அமர்ந்தும் யானை மீது அமர்ந்தும் வேல் கொண்டு தாக்குவது போன்றும் உள்ள ஓவியங்கள் தென்னகத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆனால் வட இந்தியாவில் மனிதர்கள் ஈட்டி எறிவேல் எறிபடை போன்றவற்றைப் பயன்படுத்தி வேட்டையாடுவது போன்று பல காட்சிகள் இடம்பெறுகின்றன. பொதுவான இந்தியக் குகை ஓவியங்களில் இவ்வகை ஓவியங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. பாறை ஓவியங்களில் குதிரை அதிக அளவில் பெறுவது சிறப்பாகும்.போர்க் காட்சிகளில் குதிரை இடம்பெறுகின்றது. பாறை ஓவியங்களின் காலத்தினைக் கணிக்க குதிரை உதவுகின்றது. உலகின் பல்வேறு இடங்களில் குதிரையின் ஓவியங்கள் உள்ளன.பிம்பெட்கா சிங்கண்பூர் பிச்மாரி போன்ற இடங்களில் காணப்படும் ஓவியங்கள் சிறப்புடையன. சிங்கண்பூரில் காட்டெருதும் கலைமானும் வேட்டையாடுதல் போன்றுள்ளதும் ஈட்டி எறிவேல் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி வன விலங்குகளைத் தாக்குகின்ற காட்சிகளும் நடன நிகழ்ச்சிகளும் சிறப்புடையன.இந்தியப் பாறை ஓவியங்களில் சிறப்புடன் திகழ்கின்ற மான் வேட்டைக் காட்சியைச் சோன் பள்ளத்தாக்கிலுள்ள விக்குனியா பாறை உறைவிடங்களிலும் தென்னாட்டிலும் காணலாம். கோர்மங்கர் எனும் இடத்தில் காணப்படும் ஓவியங்களில் ஆறு மனிதர்கள் ஒன்று சேர்ந்து காண்டாமிருகத்தை வேட்டையாடுவது போன்ற காட்சி சிறப்புடையதாகும். இவ்வகை ஓவியங்கள் சிங்கண்பூர் ஹாரின் ஹானா ரூப்பில் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் ஆந்திரம் கர்நாடகம் தமிழகம் கேரளம் ஆகிய

மாநிலங்களில் பல்வேறு இடங்களில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காட்டெருதுகளின் சண்டை யானைகள் பறவைகள் திமிலும் கொம்புமுள்ள எருதுகள் ஆகிய ஓவியங்கள் பல்லாரி மாவட்டத்ரிலுள்ள குப்கல்லு என்னுமிடத்தில் உள்ளன. நீர் வாழ்கின்ற சில பிராணிகளின் வடிவங்கள் இடம் பெறுகின்றன. குறிப்பாக மீன் வடிவத்தையும் முதலையின் வடிவத்தையும் காணமுடிகின்றது. சிறுமுலை ஓவியத்தில் இவ்வினத்து ஓவியத்தினைக் காணலாம். பாறை ஓவியங்களில் விலங்கினங்களை வேட்டையாடும் நிலையில் நாய் வடிவம் இடம்பெறுகின்றது. மயிலின் வடிவமும் பாறை ஓவியத்தில் இடம்பெறுகின்றது. சீகூர், சிறுமலை, மல்லசமுத்திரம் ஆகிய இடங்களில் இவற்றைக் காணலாம். பாறை ஓவியங்களில் அதிகம் இடம்பெறுபவை விலங்கின வடிவங்களே. சில பாறை ஓவியங்களில் அப்பகுதியில் காணப்படும் விலங்கினங்களின் உருவம் இடம்பெறும். அத்தகைய ஓவியத்தைக் கொண்டு அப்பகுதியில் காணப்படும் விலங்கினங்களை நாம் அறியமுடிகிறது. சிறுமலை ஓவியத்தில் பன்றி இடம்பெறுகின்றது. மலைசார்ந்த பகுதிகளில் முள்ளம்பன்றி எனும் வகையைச் சார்ந்த விலங்குகள் அதிகம் வாழும்.

விலங்குகளைப் பாதுகாக்க இன்றைக்குப் பல தன்னார்வ அமைப்புகள் இருந்தாலும் 5000 வருடங்களுக்கு முன்னரே நம் முன்னோர்கள் அதனோடு வாழ்ந்தும் பாதுகாத்தும் வந்துள்ளார்கள் என்பது உண்மை. வெளிநாட்டில் இருந்து ஏதோ ஒரு அமைப்பு சொல்லித் தர வேண்டிய அவசியம் தமிழருக்கு இல்லை. நம் கலாச்சாரம் பண்பாடு கலை இலக்கியம் மொழி ஆகியவற்றின் தொன்மைகளையும் பெருமைகளையும் அடுத்த தலைமுறையினருக்குத் தொடர்ந்து எடுத்துரைப்பதின் மூலமே கலாச்சாரச் சீரழிவிலிருந்து நம் இனத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பார்வை நூல்கள்

1. பாறை ஓவியங்கள் -இராசு.பவுன்துறை மெய்யப்பன் பதிப்பகம்
2. அர்ச்சுனன் தபசு - சா.பாலுசாமி காலச்சுவடு பதிப்பகம் டிசம்பர் - 2009
3. கலையியல் ரசனைக் கட்டுரைகள் - குடவாயில் பாலசுப்பரமணியன் அகரம் பதிப்பகம் - 2014
4. ஸ்ரீதத்துவநிதி - ராஜஸ்ரீ கிருஷ்ணராஜமஹாராஜ அவர்களால் இயற்றப்பட்டது. ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணி விலாஸ பதிப்பகம்

முத்துவேலழகனின் ஜன்மா நாடகம் (நூலறிமுகம்)

முனைவர் ***கு.பாக்கியம்,***
தலைவர், தமிழ்த்துறை,
ஸ்ரீஇராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கோவை ***- 641 044***

நூல் : ஜன்மா, **ஆசிரியர்** : முத்துவேலழகன், **பதிப்பு** : **கௌமாரா புத்தக மையம்**, **திருச்சி**, **பதிப்பாண்டு** : 2015 (**எட்டாம் பதிப்பு**), **விலை** : **உரூபாய்** 80/-

மகாபாரதக் கதைக் களனில் அம்பை என்ற பாத்திரம் இந்நாடக நூலுக்கு மையப் பாத்திரமாய் அமைகின்றது. நாடகத் தொடக்கமே விறுவிறுப்பாய் ஒரு காட்சியை நம் மனக்கண்முன் நிறுத்துகின்றது. ஆம்பிரா நதிக்கரையில் அமைந்திருக்கும் ஒரு மாளிகை. சூதகனுக்காக மயன் அமைத்துத் தந்த மோகனக் கலைக் கூடம். அங்கு ஒற்றைக் காலில் கட்டைவிரல் மேல் நின்று சிவமந்திரம் சொல்லிக் கொண்டிருக்கும் ஒருபெண் உயிளிர்ஒடுக்கத்திற்காக மரண தவம் செய்யும் அப்பெண் யாராக இருக்கும் எனச் சூதகன் யோசிக்கின்றான். அவள் தன்னை அம்பை என அறிமுகமாகின்றாள்.

இங்ஙனம் குதிரை ஓட்டம் போல் லாவகமாக அழகாக ஆர்வத்தைத் தூண்டி ஒரே மூச்சில் படிக்க வைக்கும் தொடக்கம்.

அம்பை தன்னைப் பற்றிக் கூறுகையில் நான் அடிபட்ட அரவம். கொடியவனின் உயிரைக் குடிக்கும் வகையில் சட்டை உரித்துக்கொண்டே இருப்பேன். பெண் இனத்தின் மேன்மையெல்லாம் பூக்காமல் காய்க்காமல் புழுதிபட வைத்துவிட்ட புல்லியனை வெல்லமுடியாத இப்பிறவி வேண்டாம். சிவன் வருவான் இன்னொரு பிறவி தருவான். எனக்கு ஏற்பட்ட பகை என் பெண்மைக்கு மட்டுமல்ல, பெண் இனத்திற்கே ஏற்பட்ட பகை எனத் தொடங்குகின்றது இந்நாடகம். தான் காசிராசனின் மூத்தமகள் அம்பை எனவும், இளையவர்கள் அம்பிகா, அம்பாலிகா எனவும், அம்பை சால்வனைக் காதலிப்பதாகவும், காசிராசன் சுயம் வரத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும் நாடகக் கதை நீள்கின்றது.

அம்பைக்கும், சால்வனுக்கும் வாக்குவாதம் நடைபெறுகிறது. பாரத வர்ஷத்தின் கலாச்சாரத்தில் **1.**பிரமமம் **2.**தைவம் **3.**பிரஜாபத்யம் **4.**ஆரிஷம் **5.**ஆசுரம் **6.**காந்தர்வம் **7.**பைசாசம் **8.**ராக்கதம். இதில் சுயம்வரம் எங்கே இருக்கின்றது. வலிமையால் யாராவது கவர்ந்துவிட்டால் அம்பை தனக்குக் கிடைக்கமாட்டாள் என்ற அச்சம் சால்வனுக்கு ஏற்படுகின்றது. சால்வன் அஞ்சியது போலவே சுயம்வரத்தில் சிக்கல் ஏற்படுகின்றது. இங்ஙனம் கதை வளர்கின்றது.

நாடகத்தின் உச்ச கட்டமாக அத்தினாபுரத்திற்குச் சுயம்வர அழைப்பு அனுப்பப்படவில்லை. அமைச்சர் மூலம் இச்செய்தியை அறிந்த பீஷ்மர் ஆதிகாலம்

தொட்டே அத்தினாபுரத்தின் அந்தப்புர மாந்தர்களாக காசிராசன் பெண்களே வந்திருக்கின்றனர். அதை மாற்ற பட்டயம் போட எப்படித் துணிந்தான் எனக் கடும் சினம் கொள்கிறான் பீஷ்மர். பிரமச்சாரிய விரதம் பூண்டவர் தளர்ந்த நடையுடன் நரைமுடியுடன் சுயம்வர மண்டபத்துள் அழையா விருந்தினராய் உள்ளே நுழைகின்றான். ராக்கத முறையிலே இப்பெண்களைக் கவர்ந்து செல்வேன் முடிந்தால் போரிட்டு மீட்டுக் கொள்ளுங்கள் எனக் கூறுகின்றான்.

பிரம்மசாரிய விரதம் பூண்டவன் என அச்சத்துடன் காணும்பொழுது தம்பி விசித்திரவீரியனுக்கு மூவரையும் மணம் முடிக்க எண்ணுகின்றான். மூவரையும் கயிற்றால் பிணைத்துத் தேரில் எடுத்துச் செல்கின்றான். ஆனால் அம்பை மறுக்கிறாள். சால்வனை விரும்புவதாகவும் காந்தர்வ மணத்தில் கலந்து வாழ்வதாகவும் தெரிவிக்கின்றாள். தாய் சத்தியவதி இவளை மருமகளாக ஏற்கமுடியாது என்றும் அம்பிகாவையும், அம்பாலிகாவையும் ஏற்றுக் கொள்கிறாள். அம்பையைத் தக்கப் பாதுகாப்புடன் சௌபால நாட்டு மன்னன் சால்வனின் நாட்டு எல்லைக்குள் கொண்டு சென்று விடுவதாக நாடக உச்சகட்டம் சரிகின்றது. நாடகத்தின் வீழ்ச்சியாக அம்பை வருகையை உணா;ந்த சால்வன் ஏற்க மறுக்கின்றான். பீஷ்மர் போட்ட பிச்சை வேண்டாம். பீஷ்மனின் கரம்பட்டு இழுத்துச் சென்றவளை நான் எப்படி ஏற்கமுடியும் எனப் பீஷ்மனிடமே செல் என அனுப்புகின்றான். நீ உன் தந்தையிடமே போய் வாழ். வாழ வகையற்றுப்போனால் பெண்ணுக்குப் பிறந்த இடமே புகழிடம் என அனுப்புகின்றான். பெண் இங்கே ஆண் ஆதிக்க உணர்வில் சம மானிடப் பிறப்பாய், உணர்வும், உயிரும் உள்ள ஒரு ஜீவனாய் பார்க்கப்படவில்லை. ஏன்**?** எதற்கு, எவ்வாறு**?** எப்படி! இக்கொடூரச் செயல்கள்.

அம்பை தன் தந்தையிடம் செல்கிறாள். பெண்ணுக்கு வாழப் புகுந்த இடம் மட்டுமே வரிந்த நிழல், பரந்த விருட்சம். பெற்றவர் இடத்திற்கு வந்து போகலாம். போய்வா மகளே எனத் தந்தையும் ஏற்க மறுக்கிறான்.

மீண்டும் அம்பை பீஷ்மரிடம் செல்ல பிரம்மச்சாரிய சத்ய விரதம் பூண்டு வாழ்பவன் நான் என் நிழலில் கூட ஒரு பெண் ஒதுங்கி நிற்க சம்மதியேன் என மறுக்கின்றான்.

நீ சாதாரண பிரஜையாகக் கூட அத்தினாபுரத்தில் வாழ இடமில்லை. நகரிலும், நகரைச் சுற்றியுள்ள இடத்தில் கூட நீ நடமாடக் கூடாது.

நாடகத்தின் சாராம்சமாக அம்பையின் குரல் பீஷ்மரே நீளிர்அவமானப்படுத்திக் கொண்டிருப்பது ஒரு பெண்ணை அல்ல. ஒரு மகளை! ஒரு மனைவியை! உம்மைப் பெற்ற தாயை!

புன்மைத் தேரையாய், புழுவாய்க் கருதி பெண்மையை அவமானப்படுத்திய உம்மை விடமாட்டேன்.

இதே இந்த அத்தினாபுரத்தின் சான்றோரும், ஆன்றோரும், மண்ணும் மக்களும், காற்றும், ககனமும் சாட்சியாய் நிற்க நானும் ஒரு பிரத்ஞை எடுப்பேன். உன்னைக் கொல்வேன்.

பெண்ணினம் புல்லினம் அல்ல. அது ஆக்கவும், தீங்கு செய்தால் அழிக்கவும் சக்தி படைத்த வல்லினம் என்பதை நிரூபித்துக் காட்டுவேன்.

குங்கையிள் புதல்வரே, நீளிர்உம் தாயின் கர்பத்தில் மீண்டும் ஓடி மறைந்தாலும், அங்கும் தேடி வந்து உம்மை அழிப்பேன்.

இது என் சபதம்! ஒரு பெண்ணின் சபதம்! ஆம்பையின் சபதம்!.

இங்குதான் சமுதாயத்தில் நிலைத்து, வேரோடி, புரையோடிக் கிடக்கின்ற ஆணாதிக்கத்தை எதிர்த்து உச்சகட்ட குரலாய் ஒலிக்கின்ற பெண்ணின் குரல் கேட்கின்றது.

திரும்பத் திரும்ப சிந்தனையைத் தூண்டி காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. விழிப்புணர்வும் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் இடமும் கூட இதுதான்.

இயற்கை பெண்மையைப் படைத்த விதம்....... சமுதாயக் கட்டமைப்பில் பெண்;கள் அடிமைத் தனமாய் ஆக்கப்பட்ட நிலை...... பெண்கள் தமக்கென ஒரு வளையத்தை ஏற்படுத்தி.... குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டமாய்..... நின்று, கவனித்து, சிந்திக்காமல் ஓடிக்கொண்டே இருக்கும் ஓட்டம்... ஏன்? எதற்கு? எப்படி! எதனால்..... விடைதேடி அலைகிறது மனிதமனம்.

பெண்களுக்கு உரிய குணமாய் தொல்காப்பியம் அச்சம், மடம், நாணம், பயிர்பு எனக் குறிப்பிடுகின்றது.

பெண் சகமனிதனாய்.... மானுடப்பிறப்பாய் நடைபோடுவது எப்பொழுது**?**

பெண் உரிமை, பெண் நலம் கொடுப்பதும் கொள்வதும் கொள்வதும் அல்ல. உரிமையை அவரவர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை இங்கே விரிகின்றது.

அம்பை சிகண்யாய் குருசேத்திர யுத்த களத்தில் பீஷ்மரை அழிக்கின்றாள். இக்கதைதான் ஜன்மா.

சூதகர்ணன் அம்பை இருவரும் பறிமாற்றிக் கொண்ட ஆண்மை, பெண்மை இந்திரன் சாபத்தால் இறுதிவரை இருவரும் திரும்பப் பெறமுடியவில்லை. இங்ஙனம் நாடகம் நிறைவு பெறுகிறது.

பெண்மை வெல்கவென்று

கூத்திடுவோமடா!

பெண்மை

பெண்மையாகவே வெல்கவென்று

கூத்திடுவோமடா!

என நாடகத்தை ஆசிரியர் நிறைவு செய்துள்ளார்.

நிறைவாக ஒரு ஆண் படைப்பில் உருவான இந்நாடகநூல் பெண்மையின் மனக் குமுறலாக காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. மனிதமனம் படைத்தோர்க்கு விழிப்புணர்வு தரும் தலை சிறந்த நாடகம் இதுவே எனலாம்.